பக்கங்கள்: 24

THEEMPUNAL

# தீம்புனல்

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:43 19.02.2022 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053



மறைக்கப்பட்ட இடம்

ஆதவன்

பக்கம் 17




நம்ம அல்பம்

மதுமிதா

பக்கம் 21

# ஒற்றுமையைக் காட்டமுயலும் அரசாங்கம்

# சிதறிக்கிடக்கும் எதிர்க்கட்சிகள்

வர்மா

பொருளாதாரப் பின்னடைவு, அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, அந்நியச் செலாவணிக் குறைபாடு, ஏற்றுமதிப் பாதிப்பு, தொழிற்சங்கப் போராட்டம் என இலங்கை தடுமாறும் வேளையில் தேர்தல் சிந்தனையில் சில தலைவர்கள் கனவு காண்கிறார்கள்.

பலமான எதிர்க் கட்சியாக இருக்க வேண்டிய ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாகப் பிரிந்துள்ளது. அங்கும் சஜித்துக்கு எதிராக உள்ளக அரசியல் நடைபெறுகிறது. ஜே.வி.பி வழமைபோல சக்திமிக்க கட்சியாக தன்னைக் காட்டிக் கொள்கிறது.

ஐக்கிய மக்கள் சக்தி சஜித்தை முன்னிறுத்தி அரசியல் களத்தில் நிற்கிறது. சம்பிக்க தனது படையணியுடன் ஜனாதிபதியாக முயற்சி செய்கிறார்.

எதிர்வரும் தேர்தல் உள்ளூராட்சி சபைத் தேர்தலாகவே இருக்கும் என்றும், அது பாராளுமன்றம் அல்லது ஜனாதிபதித் தேர்தல் அல்ல என்றும் பசில் ராஜபக்ஷ ஏற்கெனவே தெளிவுபடுத்தியுள்ளார். உள்ளூராட்சித் தேர்தலுக்கு இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு மேல் உள்ளது. மாகாண சபைத் தேர்தல்கள் பற்றி எவருக்கும் அக்கறை இல்லை, அதைப் பற்றி புதுடில்லிக்கு எழுதவும் யாரும் கவலைப்படுவதில்லை. ஆனால், உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதன் முக்கிய அம்சம் என்னவென்றால், நாட்டின் தற்போதைய இக்கட்டான சூழ்நிலையைச் சமாளிக்க என்ன செய்ய முடியும் அல்லது என்ன செய்ய வேண்டும் என்பதில் அவை எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. உள்ளூராட்சித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் அல்லது தோற்றாலும் இலங்கைக்கு அதிக அந்நியச் செலாவணியைக் கண்டுபிடிக்கவோ, கடனை அடைக்கவோ, உரமில்லா உணவுப் பயிரிடவோ உதவப் போவதில்லை.









ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அநுராதபுரத்தில் நடத்திய கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரிகள் சிலரும் கலந்துகொள்ளவில்லை. முன்னணி அமைச்சர்களின் தலையையும் அங்கு காணவில்லை. அரசாங்கத்தின் பலத்தை வெளிக்காட்டுவதற்காக நடத்தப்பட்ட அநுராதபுரக் கூட்டம் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை. முக்கியமான அமைச்சர்கள் உள்ளிருந்து அரசாங்கத்துக்குக் குடைச்சல் கொடுக்கின்றனர். எதிர்க் கட்சிகளின் விமர்சனங்களுக்குப் பதிலளிப்பதை விட சொந்தக் கட்சியில் உள்ளவர்களின் குடைச்சலைச் சமாளிக்கவே நேரம் போதவில்லை.

புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் அரசாங்கம் இறங்கியுள்ளது. “ஒரே நாடு ஒரே சட்டம்” என்ற ஒலியை தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ரசிக்கவில்லை. அரசியல் அமைப்புச் சட்டத்தில் தமிழ்மொழிக்கு இருக்கும் வரையை அமுல்படுத்துவதற்குத் தயங்குபவர்களின் புதிய அரசியல் யாப்பு எப்படி இருக்கப் போகிறதென்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

கூட்டணி இல்லாமல் ஆட்சியை அமைக்க முடியாது, தமிழர்களினதும் முஸ்லிம்களினது வாக்கு இல்லாமல் இலங்கையில் ஆட்சி அமைக்க முடியாது என்ற நிலை இருந்தது. ஆனால், தேர்தல் கால பிரசாரத்தின் மூலம் அந்த நிலை மாற்றி அமைக்கப்பட்ட வரலாறும் இலங்கையில் உள்ளது.

இன்றைய அரசின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். அடுத்து வரும் தேர்தலில் மாற்றம் ஏற்படும் என அரசியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், புதியதொரு அரசாங்கத்தை அமைப்பதற்கான பலம் எதிர்க்கட்சிகளிடம் இல்லை, தனி ஒருவனாக ரணில் தலையைக் காட்டுகிறார். ஐக்கிய மக்கள் சக்திக்குள் சஜித், சம்பிக்க எனும் இரட்டைத் தலைமை இருக்கிறதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அரசாங்கத்துக்குள் சலசலப்பு இருந்தாலும் அதன் கட்டுக்கோப்பு குறையவில்லை. தமிழ் மக்களின் சனத்தொகைக்கு அதிகமான கட்சிகள் வடக்கு, கிழக்கில் உள்ளன. பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, கொம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் அங்கத்தவர்களும் வடக்குக் கிழக்கில் உள்ளனர். தமிழ் மக்களின் வாக்குகள் அதிகப்படியாக ஒரே கட்சிக்குச் செல்லும் என்பதில் எதுவித உத்தரவாதமும் கொடுக்க முடியாது. முஸ்லிம் கட்சிகளின் நிலையும் அதேதான்.

ஜே.வி.பியும் சம்பிக்கவும் சிலவேளை இணையலாம். அதற்கான சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவாக உள்ளன. மக்களின் மறதிதான் அரசியல்வாதிகளின் மூலதனம். இன்றைய பொருளாதாரச் சிக்கல்கள் அனைத்தையும் ஒப்பேற்றிய பின்னர்தான் தேர்தலை நோக்கிச் செல்வதற்குரிய ஏற்பாட்டை அரசாங்கம் முன்னெடுக்கும். ■

‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’

# புதிய அரசியல் யாப்பும் சுயநிர்ணய உரிமையும்

அ.நிக்ஸன்

சர்வதேச சமவாயத்தில் கூறப்பட்டுள்ள சுயநிர்ணய உரிமை என்ற உறுப்புரையை நீக்கம் செய்து 2007 ஆம் ஆண்டு சமவாயச் சட்டம் என்ற பெயரில் இலங்கை ஒற்றையாட்சி அரசின் 56 ஆம் இலக்கச் சட்டமாக இணைத்த ராஜபக்ஷ அரசாங்கம், தற்போது அந்தச் சமவாயச் சட்டத்தை பயன்படுத்தி ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை முற்றாகவே நிராகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

மைத்திரி - ரணில் அரசாங்கம் மேற்கொண்ட புதிய அரசியல் யாப்புக்கான நகல் வரைபில் கூட சமவாயத்தின் உறுப்புரைகள் அனைத்தும் சேர்க்கப்படாதவொரு நிலையில், இலங்கை ஒற்றையாட்சிப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலத் துடன் தற்போது ஆட்சியமைத்துள்ள ராஜபக்ஷ அரசாங்கம் உருவாக்கவுள்ள புதிய அரசியல் யாப்பில் சுயநிர்ணய உரிமை மீண்டும் மறுக்கப்படும் அபாயம் தெளிவாகவே தெரிகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் (International Covenant on Civil and Political Rights- ICCPR) 2007 ஆம் ஆண்டு 56 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் இலங்கை ஒற்றையாட்சி அரசின் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்தபோதே இந்தச் சமவாயச் சட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இலங்கை அரசியலமைப்பில் சேர்க்கப்படாமல் சாதாரண இலங்கைச் சட்டங்களில் ஒன்றாகச் சர்வதேச நாடுகளின் அழுத்தங்களினால் இணைக்கப்பட்டிருக்கிறது.

ஆறு பகுதிகளாகக் குறைந்தது 37 பக்கங்களைக் கொண்ட ICCPR எனப்படும் இந்தச் சமவாயத்தில் ஒரு நாட்டில் வாழும் அனைத்து மக்களின் சுயநிர்ணய உரிமை (self-determination) அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது பிரதான உள்ளடக்கமாகும். ஆனால், பிரதான உள்ளடக்கங்களைத் தவிர்த்து, அதாவது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற பகுதிகள் நீக்கம் செய்யப்பட்டு, இலங்கைக்கு ஏற்ற சில பகுதிகள் மாத்திரமே 56 ஆம் இலக்கச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட நாடொன்றில் வாழும் மக்களிடையே இனக் குரோதங்கள், மதங்களிடையேயான வெறுப்புகள் போன்றவற்றை உருவாக்குதல் மற்றும் மனிதகுல விரோதங்களைத் தூண்டுதல் போன்ற குற்றங்களுக்குக் கடும் தண்டனை விதிக்கும் உறுப்புரைகள் ICCPR எனப்படும் சமவாயத்தின் பிரிவு 3(1) இல் உள்ளன.

ஆனால் 56 ஆம் இலக்கச் சட்டத்தில் ICCPR எனப்படும் சமவாயத்தை ஏற்றுக் கொண்ட இலங்கை அரசு பிரிவு 3(1) உள்ளிட்ட சில பகுதிகளை மாத்திரமே



இணைத்துள்ளது. உறுப்புரை 1 இல் கூறப்பட்டுள்ள சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்ற பகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சமவாயத்தை 2007 ஆம் ஆண்டு அப்போதைய அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். விவாதம் நடத்தப்படும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எவரும் சுயநிர்ணய உரிமைக்கான உறுப்புரிமை நீக்கப்பட்டமை தொடர்பாக உரிய முறையில் சுட்டிக்காட்டவேயில்லை.

இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்கு ஏற்ற முறையிலேயே ICCPR எனப்படும் சர்வதேச சமவாயத்தை இலங்கை அங்கீகரிப்பதாக பீரிஸ் அப்போது துணிவுடன் கூறியிருந்தார்.

ஆனாலும் 2010 ஆம் ஆண்டு முதன் முதலாகப் பாராளுமன்றத்திற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் மூலம் தெரிவான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இது குறித்துப் பேசியிருந்தார். சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 1 இல் உள்ளவாறு இலங்கையின் 56 ஆம் இலக்கச் சட்டத்தில் சுயநிர்ணய உரிமை நீக்கம் செய்யப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டிக் கேள்வி எழுப்பியிருந்தார். அதன் பின்னர் அது குறித்த மேலதிக விவாதங்கள் எதனையும் சுமந்திரன் தொடரவில்லை.



2015 ஆம் ஆண்டு ஜெனீவா மனித உரிமைச் சபையில் இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையோடு கொண்டு வரப்பட்ட 30/1 தீர்மானத்தின்போது கூட ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுதியாகச் சொல்லவில்லை.

இனக் குரோதங்களைத் தூண்டுதல், மதங்களிடையே வெறுப்புகளை உருவாக்குதல், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களைத் தூண்டுதல் போன்றவற்றுடன் இலங்கைத் தேசிய பாதுகாப்புக்கு எதிரான விடயங்களும் இலங்கையின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உள்ள பிரிவு 14. 2 இல் ஏற்கெனவே கூறப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ICCPR எனப்படும் சமவாயத்தின் உறுப்புரை 3(1) இல் கூறப்பட்டுள்ள அதே விடயத்தை 56 ஆம் இலக்கச் சட்டத்தில் சேர்த்துக்கொண்டமை வேண்டுமென்றே ஈழத்தமிழர்களை சர்வதேசச் சமவாயம் ஒன்றின் மூலமாக அச்சுறுத்தும் செயல் எனவும் இதுவரை சுட்டிக்காட்டப்படவில்லை.

ஜெனீவா மனித உரிமைச் சபை 2012 ஆம் ஆண்டு முதன் முதலாக இலங்கை தொடர்பான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தபோது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் நீக்க வேண்டுமெனக் கோரியிருந்தது. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென 2015 ஆம் ஆண்டின் 30/1 தீர்மானத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

இதனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக அப்போதைய மைத்திரி- ரணில் அரசாங்கம் வேறொரு புதிய சட்டத்தைக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது. அப்போதுகூட ICCPR எனப்படும் சமவாயத்தின் உறுப்புரை 3(1) இல் கூறப்பட்டுள்ள விடயங்கள் அகற்றப்பட வேண்டுமென்றோ அல்லது சர்வதேசச் சமவாயத்தின் உறுப்புரிமை 1 இல் உள்ள சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றோ தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தவில்லை.

ICCPR எனப்படும் சமவாயம் அங்கீகரிக்கப்பட்டுள்ள நாடொன்றில் அதன் உறுப்புரிமை 1 இன் பிரகாரம் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டிருந்தால் மாத்திரமே, சமவாயத்தின் பிரிவு 3(1) சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், இலங்கை வெறுமனே பிரிவு 3(1) உறுப்புரையை மாத்திரம் அங்கீகரித்திருக்கிறது. சமவாயத்தின் உறுப்புரை 1 இல் கூறப்பட்டுள்ள சுயநிர்ணய உரிமை இலங்கைப் பாராளுமன்றத்தில் ஏன் அங்கீகரிக்கப்படவில்லை என்று சர்வதேச நாடுகள் கூட இதுவரை கேட்கவுமில்லை.

சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ள நாடொன்றில், மக்களிடையே இனக் குரோதங்கள் மதங்களிடையேயான வெறுப்புகள் போன்றவற்றை உருவாக்குதல் மற்றும் மனிதகுல விரோதங்களைத் தூண்டுதல் ஆகிய குற்றச் செயல்கள் எழக்கூடாதென்ற நோக்கிலேயே ICCPR எனப்படும் சமவாயத்தின் பிரிவு 3(1) சேர்க்கப்பட்டிருக்கிறது என்ற புரிதல் சிங்கள ஆட்சியாளர்களுக்கு இருந்தும், இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பைப் பாதுகாத்தலே பிரதான இலக்கு என்ற அடிப்படையில், சமவாயத்தின் உறுப்புரை 1 நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

இதனடிப்படையில் சர்வதேச அழுத்தங்களைச் சமாளிக்கவும், ஜெனீவா மனித உரிமைச் சபையைத் திருப்திப்படுத்தவும் மைத்திரி- ரணில் அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சிகளில் அப்போது ஈடுபட்டிருந்தது.

பாராளுமன்றம் அரசியலமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டுப் புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்துக்காக ஒவ்வொரு தலைப்புகளில் ஆறு உப குழுக்களும் அமைக்கப்பட்டிருந்தன. அத்துடன் ஜனாதிபதி, சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கட்சித் தலைவர்களைக் கொண்ட வழிகாட்டல் குழுவும் அமைக்கப்பட்டிருந்தது.

ஆறு உப குழுக்களும் தத்தமது தலைப்புகளுக்குரிய விதப்புரைகளை சபாநாயகரிடம் கையளித்து இருந்தனர். அந்த விதப்புரைகளில் என்ன விடயங்கள் உள்ளடங்கியுள்ளன என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. ஆனாலும் எந்தவொரு விதப்புரைகளிலும் ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

குறைந்தபட்சம் ICCPR எனப்படும் சர்வதேச சமவாயத்தின் உறுப்புரிமை 1 இல் கூறப்பட்டுள்ள சுயநிர்ணய உரிமையை இலங்கையின் புதிய அரசியல் யாப்பு மூலமாக அங்கீகரித்தல் என்பது கூட உப குழுக்கள் கையளித்திருந்த விதப்புரைகளில் இல்லை என்பதே வெளிப்படை.

ஏனெனில், இலங்கை ஒற்றையாட்சியின் தன்மை மாற்றமடையாமலும், 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இரண்டாவது அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ள அரச கொள்கைத் தத்துவம் மாறுபடாமலும் புதிய அரசியல் யாப்புக்கான நகல் வரைபு தயாரிக்கப்பட்டிப்பதாக ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.

> **ஆட்சி உரிமை மறுக்கப்பட்ட நாடொன்றில் வாழும் தேசிய இனங்களை ஒரு தேசமாக அங்கீகரிக்கக் கூடிய முறையில் சுயநிர்ணய உரிமை குறித்து ICCPR எனப்படும் சமவாயத்தில் தெளிவாகக் கூறப்படவில்லை.**

பௌத்த சமயத்துக்கு முன்னுரிமை வழங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒப்புகொண்டுள்ளதாகவும் சொல்லியிருந்தார். ஆனால் ஒற்றையாட்சிக்குள் சமஸ்டி இருப்பதாக சம்பந்தன் தமிழ் மக்களுக்கு விளக்கமளிக்கும்போது மார் தட்டியிருந்தார்.

ICCPR எனப்படும் சர்வதேச சமவாயம் முழுமையாக இலங்கை அரசியல் யாப்பில் இணைக்கப்பட்டிருந்தால், பௌத்த சமயத்துக்கு மாத்திரம் முன்னுரிமை கொடுப்பதோ அல்லது இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் அனைத்துச் சமூகங்களும் கட்டுப்பட வேண்டிய வற்புறுத்தலோ இருந்திருக்காது.

சர்வதேச சமவாயத்தைக் கொச்சைப்படுத்தும் முறையிலேயே இலங்கை பாராளுமன்றம் 2007 இல் அதனை அங்கீகரித்துள்ளது என்பதைக்கூட ஜெனீவா மனித உரிமைச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகளுக்குச் சம்பந்தன் இடித்துரைக்கவில்லை. மாறாக ரணில் - மைத்திரி அரசாங்கம் மீதான பொய்யான நம்பிக்கை மாத்திரமே மக்களுக்கு ஊட்டப்பட்டது.

தற்போது கோட்டபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், புதிய அரசியல் யாப்பை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஆனால் மைத்திரி- ரணில் அரசாங்கம் தயாரித்த நகல் வரைபின் அடிப்படையில் அல்ல, மீண்டும் புதிதாகவே யாப்புருவாக்க முயற்சி இடம்பெறுகின்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி உள்ளிட்ட பல கட்சிகளும் தங்கள் நகல் வரைபுகளைக் கையளித்துள்ளன.

(22 ஆம் பக்கம் பார்க்க...)

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com

தீம்புனல் THEEMPUNAL

# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துப் போராட்டம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்யுமாறு கோரி கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்தில் நடைபெற்றது. சர்வஜன நீதி அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்தச் செயற்திட்டத்தில், அரசியல், சிவில் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

தமிழ் இளைஞர்கள் ஆயுதப்போராட்டத்தைத் தொடங்கியபோது அதனை அடக்குவதற்காகத் தற்காலிகமாக அமுல்படுத்தப்பட்ட சட்டம் இன்றளவும் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தமிழ் இளைஞர் ஆயுதக் குழுக்களின் எழுச்சி ஜே.ஆர் ஜெயவர்த்தன தலைமையிலான அரசாங்கத்துக்குப் பெரும் சவாலாக மாறிக்கொண்டிருந்தது. 1977 - 1978 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்த ஆயுதக் குழுக்களின் தாக்குதல் நடவடிக்கைகள் பரவலாக இடம்பெற்றன.

தமிழ் இளைஞர்களின் போராட்டத்தை ஒடுக்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட இச்சட்டத்தால் சிங்கள, முஸ்லிம் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழர்களுக்கு எதிரான சட்டம் என வாழாதிருந்தவர்கள் மீது சட்டம் பாய்ந்தபோதுதான் அவர்கள் விழிப்படைந்தனர். அது எவ்வளவு கொடுமையான சட்டம் என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்தனர்.

1979 ஆம் ஆண்டு தற்காலிக சட்டமாக ஆறு மாதங்களுக்கு நடைமுறைப்படுத்துவதாகக் கூறியே அன்றைய அரசாங்கம் அதனைக் கொண்டு வந்தது. இதுவொரு தற்காலிக சட்ட மூலம் எனவும், ஆறு மாத காலத்திற்கே இது நடைமுறையில் இருக்கும் எனவும் கூறினாலும் இன்றுவரை அந்தச் சட்டம் பலரைச் சிறைக்கு அனுப்பி உள்ளது. ஒரு அரசாங்கம் அமுல்படுத்தும் சில சட்டங்களை அடுத்து பதவி ஏற்கும் அரசாங்கம் மாற்றி அமைப்பதுதான் உலக வரலாறு. ஆனால், இந்தப் பயங்கரவாதச் சட்டம் தமக்குப் பாதுகாப்பானது என அடுத்துப் பதவியில் இருந்த அரசாங்கங்கள் நம்பின.

பல இளைஞர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், அரசியல் ஆர்வலர்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் உட்படப் பலரும் சந்தேகம் என்ற ஒரே காரண நிமித்தம், வேறு எந்த அடிப்படைச் சாட்சிகளினது தேவையின்றிக் கைது செய்யப்படவும் கால எல்லையின்றித் தடுத்து வைக்கப்படவும் இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் அவசர காலச் சட்டமும் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கியது. ஒப்புதல் வாக்கு மூலம் கைது செய்யப்பட்டவருக்கு எதிராக நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டது.

பயங்கரவாத நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய சட்டங்களை அமுல்படுத்தும் நாடுகள் மனித உரிமைகள் பற்றி கவலைப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. பயங்கரவாத தடைச் சட்டத்தால் கைது செய்யப்பட்டு பல வருடங்களின் பின்னர் நிரபராதி என விடுதலை செய்யப்படுபவர்களின் எதிர்காலம் பற்றி அரசியல்வாதிகள் சிந்திப்பதில்லை. இளைஞனாக இருக்கும்போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்கள், முதுமையடைந்த பின்னர் விடுதலையான சம்பவங்களும் உள்ளன. அவர் இழந்த இளமையை திரும்பவும் கொடுப்பதற்கு எவராலும் முடியாது.

18 ஆண்டுகளுக்கு மேலாக சிலர் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் இன்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஒரு சிலரை பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த விடுதலைகளும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் ஏனைய அமைப்புகள் மூலமாக பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டு இவர்களின் பெயர்கள் சுட்டிக்காட்டப்பட்டதன் காரணமாகவே இடம்பெற்றுள்ளன.

கொழும்பு கோட்டையில் ஆரம்பிக்கப்பட்ட கை எழுத்துப் போராட்டம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகத்தின் வலியுறுத்தல்களுக்கு அமையவும், புதிய சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என வலியுறுத்தியதற்கு அமையவும் இப்போது வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் திருத்தச் சட்டமூலத்தை முன்வைத்துள்ளார். இதனால் பயங்கரவாதத் தடைச் சட்டம் அற்றுப் போகாது. அது உயிர்ப்புடன்தான் இருக்கப் போகிறது. தமிழ் பேசுபவர்களும் அவர்களுக்கு ஆதரவான சிங்கள மக்களும் கையெழுத்திடுவதால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாதொழிக்க முடியாது. ஒட்டுமொத்த மக்களும் குரல்கொடுக்கும் போது அது அற்றுப் போகும் காலம் உருவாகும். ■



# இலங்கையின் வளங்களைச் சுரண்டும் வெளிநாடுகள்

காலங்காலமாக மாறிவரும் அரசாங்கங்கள் நாட்டின் வளங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வருகின்றன என்ற குற்றச்சாட்டினால் இந்நாட்டின் அரசியல் களம் நிறைந்துள்ளது. சிறிது சிறிதாக நாட்டின் நிலங்கள், துறைமுகங்கள் மற்றும் பிற வளங்கள் அந்நியச் செலாவணி பரிமாற்றத்தில் பறிக்கப்பட்டு, பெரும்பாலும் நாட்டிற்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்துகின்றன.

தற்போது கந்தளாய் சீனிதொழிற்சாலையின் 85 சதவீத பங்குகளையும் அதற்குச் சொந்தமான 21,000 ஹெக்ரெயர் நிலத்தையும் சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் ஒப்பந்தம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சில வாரங்களுக்கு முன்னர், திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் ஒப்பந்தத்தில் கவனம் செலுத்தப்பட்டது, அங்கு இந்தியா ஒரு குறிப்பிட்ட சதவீத எண்ணெய்த் தொட்டிகளை கையகப்படுத்தியது. அரசியல் கட்சிகளும் நிர்வாகங்களும் ஒன்றுக்கொன்று சண்டையிடுவதால் ஒருவரையொருவர் “விற்பனையாளர்கள்” என்று அழைத்துக்கொண்டு, நாம் ஒரு படி பின்வாங்கி, வேறுபடும்படி கெஞ்ச வேண்டும். குடிமக்களாகிய நாம் கேட்க வேண்டிய ஒரு நல்ல கேள்வி என்னவென்றால், “எங்கள் சொத்துக்களை நாம் ஏன் முதலில் விற்க வேண்டும்?” அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் தொழில்களை உருவாக்குவது, முதலீட்டை ஈர்ப்பது, இலாபம் ஈட்டுவது என்று சொல்வது போல் நன்றாக இருந்தால், நமது வளங்களை விற்க வேண்டிய அவசியம் என்ன?

இயற்கை அழகு, ஏராளமான இயற்கை வளங்கள் மற்றும் ஆண்டு முழுவதும் இனிமையான வானிலை ஆகியவற்றால் ஆசீர்வதிக்கப்பட்ட இலங்கை, அதன் உண்மையான திறனை வெளிப்படுத்த வெளிநாட்டவர்கள் தேவைப்படுவதாகத் தெரிகிறது. வெளிப்படையாக, ஒரு தேசமாக எங்களிடம் நிலத்தின் கொழுப்பை அறுவடை செய்வதற்கான தொழில்கள் இல்லை. இதற்குக் காரணம் நமக்குத் திறன் இல்லாததா? அல்லது உதவியற்ற தன்மையைக் கற்றுக்கொண்டதா?

இலங்கை ஒரு பசுமையான சொர்க்கம் என்று பாடசாலைகளில் எங்களுக்கு கற்பிக்கப்பட்டது ஏராளமான மற்றும் வளமான “இது கிழக்கின் தானியக் களஞ்சியம்” என்று உங்கள் பழைய ஆசிரியர் பெருமையுடன் கூறுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். ஆனால், நமது முன்னோர்கள் ஆசியாவின் மற்றப் பகுதிகளுக்கு உபரியை அனுப்புவதற்குப் போதுமானதை விட அதிகமாக சம்பாதித்திருந்தால், நவீன இலங்கை ஏன் இறக்குமதி செய்யப்படும் அரிசி மற்றும் கோதுமையை அதிகளவில் நம்பியுள்ளது?

நம் சொந்த நாட்டைப் பற்றி நாம் கொண்டிருந்த சில எதிர்பார்ப்புகள் அதன் வரம்புகளை மறைத்துவிட்டன என்பது வேதனையுடன் வெளிப்படையானது. ஒரு தேசம் அதன் பலவீனங்களைக் கண்டறிந்து அவற்றைச் சரி செய்யாவிட்டால் ஒரு தேசம் வளரவே முடியாது. இலங்கை அதன் உண்மையான ஆற்றலை வெளிக்கொணர்வதற்கு நாம் எமது குறைபாடுகளைக் கண்டறிந்து புதுமை மற்றும் தொழில்துறையை வளர்ப்பதற்கு நல்ல அடித்தளத்தை உருவாக்க வேண்டும்.

குடிமக்களாகிய நாம், இந்தத் தேசிய அணுகுமுறையை மாற்றி, வெளிநாட்டு இடைத்தரகர்கள் தேவையில்லாமல் பிரித்தெடுக்கவும் பதப்படுத்தவும் மற்றும் விற்கவும் போதுமான அளவு வளர, உள்ளூர் தொழில்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு எங்கள் பிரதிநிதிகளை வலியுறுத்த வேண்டும். மேலும், நமது நிலத்தை சுரண்டுவதற்கும் ஆக்கிரமிப்பதற்கும் கருணை காட்டி வரும் வெளிநாட்டு நலன்கள் குறித்தும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ■

டாக்டர் நிர்மலா சந்திரகாசன்

# 13 ஆம் சீர்திருத்தச் சட்டமும் தமிழ் பேசும் மக்களின் உரிமை அரசியலும்- நடைமுறைக்கு ஏற்ற அணுகுமுறை

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் பயன் மற்றும் அதன் கீழ் அமைக்கப்பட்ட மாகாண சபை முறைமை தமிழ் பேசும் மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்குமா அல்லது உள் சுயநிர்ணயத்தின் கீழ் அதிகாரப் பகிர்வையும் தடுக்கும் ஒரு பயனற்ற முறைமையா என்பது குறித்து, தமிழ் அரசியல் வட்டாரங்களில் பல ஊகங்கள் உள்ளன. இலங்கை அரசை 13 ஆவது திருத்தச் சட்டத்தினை, தனது நல்லுறவைப் பயன்படுத்தி முழுமையாக அமுல்படுத்துமாறு கோரி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட ஆறு தமிழ்க் கட்சித் தலைவர்களால் முறைப்படி கையொப்பமிடப்பட்டு, இந்திய உயர்ஸ்தானிகரிடம் ஒப்படைக்கப்பட்ட கடிதம் காரணமாக இந்த விவாதம் எழுந்துள்ளது.



1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே 13 ஆவது திருத்தச் சட்டம் எழுந்தது, இதில் இந்தியாவும் இலங்கையும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. 13 ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்த்தவர்கள் சில எதிர்ப்புக்களைத் தூண்டும் வகையில் செயற்படுகின்றனர். கோட்டபாய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் புதிய அரசியலமைப்பு முன்மொழிவுகள் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள சூழலில் இந்த விவாதம் அவசரமானதும் முக்கியமானதுமாகும்.

> **வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு, கூட்டாட்சிக் கட்டமைப்பிற்குள் அதிகாரப்பகிர்வுக்காக அமைக்கப்பட்டதே மாகாண சபை முறைமையாகும். இந்த முறைமைக்கென சிங்களப் பெரும்பான்மை பகுதிகளில் கோரிக்கை எழாத போதிலும், எல்லா மாகாணங்களிலும் அமுல்படுத்தப்பட்டது. 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல்முறையாக மாகாண சபைத் தேர்தல் வடமத்திய, வடமேல், சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும், அதனைத் தொடர்ந்து ஏனைய மாகாணங்களிலும் நடைபெற்றது.**

எது சிறந்தபார்வை என்பதைத் தீர்மானிக்க, 13 ஆவது திருத்தச் சட்டத்தின் சரத்துகள், அதன் கீழ் அமைக்கப்பட்ட மாகாணசபைகளின் செயற்பாடுகள் ஆகியவற்றை உற்றுபார்க்க வேண்டும், அவை 1988 முதல் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் நடைமுறையில் உள்ளன. சுதந்திரம் பெற்றதில் இருந்து தமிழ் பேசும் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை வெளிப்படுத்தும் வகையில், வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு, கூட்டாட்சி கட்டமைப்பிற்குள் அதிகாரப்பகிர்வுக்காக அமைக்கப்பட்டதே மாகாண சபை முறைமையாகும். இந்த முறைமைக்கென சிங்களப் பெரும்பான்மை பகுதிகளில் கோரிக்கை எழாதபோதிலும், எல்லா மாகாணங்களிலும் அமுல்படுத்தப்பட்டது. 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல்முறையாக மாகாண சபைத் தேர்தல் வடமத்திய, வடமேல், சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும், அதனைத் தொடர்ந்து ஏனைய மாகாணங்களிலும் நடைபெற்றது.

1988 செப்ரெம்பரில், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விதிகளின்படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒரு நிர்வாக அலகாக மாற்றப்பட்டு, 1988 நவம்பரில் வடக்குக் கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்பட்டது. 1990இல் மாகாண சபை கலைக்கப்பட்டது. அதன்பின் வடகிழக்கு மாகாணம் மத்திய அரசால் நேரடியாக நிர்வகிக்கப்பட்டது. உள்நாட்டுப் போரின் போது நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மாகாண சபைத் தேர்தலை நடத்த சாத்தியமிருக்கவில்லை. 2006 இல் நீதிமன்றத் தீர்ப்பின்படி இரு மாகாணங்களும் பிரிக்கப்பட்டன. 2008 மே மாதம் கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றது. வடக்கில் யுத்தம் நிறைவடைந்ததையடுத்து 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றது.

இந்த அமைப்பு நீண்டகாலமாக இயங்கி வருவதை நாம் காணலாம். 13 ஆவது திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், 3 ஆவது இணைப்பில் பட்டியல் மாகாணசபை 9 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாகாண சபை பட்டியல், இன்னும் செயற்படுத்தப்படாமல் கிடப்பில் உள்ளது. இந்தப் பிற்சேர்க்கைகள் பின்வரும் விடயங்களை கையாள்கின்றன பின் இணைப்பு I, சட்டமும் ஒழுங்கும் முக்கியமாக பொலிஸ் அதிகாரங்கள் தேசியப் படைப் பிரிவுடன் இணைந்து பொலிஸ் படையின் மாகாணப் பிரிவின் அமைப்புடன் தொடர்பு உடையது. பின் இணைப்பு 11 காணி மற்றும் காணி சார்ந்த குடியமர்வு பின் இணைப்பு 111 கல்வி. மேற்கூறியவற்றைத்தவிர, மாகாணசபை தனக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தும் வகையில், சட்டங்களை இயற்றும் மற்றும் நிறைவேற்றும் அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட மாகாணப்பட்டியல் 1 இல் குறிப்பிடப்பட்டவாறு மாகாண வீடமைப்பு மற்றும் கட்டுமானம், விவசாயம் மற்றும் கமநல சேவைகள், கல்விச் சேவைகள், கிராமப்புற அபிவிருத்தி, சுகாதாரம், காணி, நீர்ப்பாசனம், மாகாணத்திற்குள்ளான சாலைகள் பாலங்கள், படகுச் சேவை, திட்டமிடல், மாகாண பொருளாதாரத் திட்டத்தைச் செயற்படுத்துதல் மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகளின் மேற்பார்வை, தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக அறிவிக்கப்பட்டவை தவிர பண்டைய மற்றும் வரலாற்று நினைவுச் சின்னங்கள் கூடப் பட்டியலில் அடங்கும். தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் பிரதிநிதித்துவம் இன்றி அண்மையில் நியமிக்கப்பட்ட தொல்பொருள் பணிக்குழுவினால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் சூழலில் இதனைக் குறிப்பிடுகின்றேன். மாகாணசபை மற்றும் மத்திய அரசாங்கம் ஆகிய இரண்டும் அதிகாரங்களைச் செயற்படுத்தக்கூடிய ஒரு கூட்டுப் பட்டியல் (Concurrent List), பட்டியல் 111 உள்ளது, இதில் மாகாணமட்டத்தில் திட்ட அமுலாக்க உத்திகளைத் திட்டமிடுதல், மதிப்பீடு செய்தல், கல்விச் சேவைகள், உயர்கல்வி, விவசாயச் சேவைகள், சுகாதாரம், நீர்ப்பாசனம், சுற்றுலா போன்றவை.

இந்தப் பகுதிகளில் மத்தி, மாகாணம் இரண்டிற்கும் சம அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதால் சர்ச்சைகள் ஏற்படலாம். மாகாண சபையானது மாகாண மற்றும் கூட்டுப்பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக சட்டங்களை இயற்றி நிறைவேற்ற, அதிகாரங்களைப் பயன்படுத்த முடியும். இந்த அதிகாரங்கள் பெரும்பாலும் இந்திய அரசியலமைப்பு பகுதி VI இல் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அடிப்படையாகக் கொண்டவை. இந்தியாவில் உள்ள மாநிலங்கள் திறமையாக இயங்கி மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்கி வருகின்றன. உதாரணமாக, தமிழகத்தின் தற்போதைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் கீழ், மிகவும் திறமையாக நிர்வகிக்கப்படுவதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் மாகாணசபை முறைமை பொதுவாக வெள்ளையானையாக (பயனற்ற மற்றும் விலையுயர்ந்த ஒன்று) கருதப்படுவதுடன், மக்களுக்குச் சேவைகளை வழங்குவதில் வினைத்திறன் இல்லாதது ஏன் என்ற கேள்வியை முன்வைக்க வேண்டியுள்ளது. மாகாணசபைகள் திறம்படச் செயற்படுத்துவதில் காணப்படும் தடைகளை ஆராய்ந்து அவற்றினை அகற்றித் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும், மாறாக முழு அமைப்பையும் அகற்றிவிட நினைப்பது, குழந்தையை குளியல் தண்ணீருடன் தூக்கி எறிந்துவிடுவது போன்று அமையும்.

13 ஆவது திருத்தச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க

மாகாண சபைகள் சட்டத்தின் விதிகளின் விளைவாக, மாகாண சபைகளின் சுமுகமான செயற்பாட்டிற்குப் பெரும்பாலான முட்டுக்கட்டைகள் ஏற்பட்டுள்ளதை, செயற்பாடுகளின் மதிப்பீடு காட்டுகிறது. இந்தச் சட்டத்தின் கீழ் ஆளுநருக்கு மாகாணசபைகளின் நிதி தொடர்பான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் கட்டுப்பாடு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. 13 ஆவது திருத்தத்தில் மாகாண சபையின் நிறைவேற்று அதிகாரம் ஆளுநரிடம் உள்ளது. அவர் அமைச்சர்கள் சபை அல்லது மாகாண பொது சேவை உறுப்பினர்கள் ஊடாகச் செயற்படுவார் முதலமைச்சரும் அமைச்சர்கள் குழுவும் ஆளுநரின் பணிகளைச் செயற்படுத்துவதில் அவருக்கு உதவியும் ஆலோசனையும் வழங்குகின்றனர் அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்ட தேவையான இடங்களில் மட்டும் தனது விருப்புரிமையைப் பயன்படுத்தலாம். இந்திய அரசியலமைப்பில் மாநிலங்களைப் பொறுத்தவரை, நிர்வாக அதிகாரம் ஆளுநரிடம் உள்ளது, ஆனால் வெஸ்ட்மின்ஸ்டர் ஆட்சித் திட்டத்தைப் (Westminister Model) போலவே, ஆளுநர் முதலமைச்சர்களின் ஆலோசனையின்படி செயற்படுகிறார் மற்றும் பெயரளவு தலைவராக இருக்கிறார். மறுபுறம், இலங்கையில் ஆளுநர்கள் குறிப்பாக, தமிழ்ப் பெரும்பான்மை மாகாணங்களில் இந்த அதிகாரங்களை நிறைவேற்றுத் தலைவர்களாகப் பயன்படுத்துவதைக் காண்கிறோம், சிங்களவர்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்களில் அதிகம் இல்லை.

ஆளுநரின் மாகாண சபை மீதான அதிகாரம், மாகாணத்தின் நிதிகள் மீதான அவரது அதிகாரத்தில் மிகத் தெளிவாக வெளிப்படுகிறது. மாகாணசபையை இயக்குவதற்குப் பணம் தேவைப்படுகிறது. மாகாண சபைகள் சட்டம் ஆளுநருக்கு மாகாணத்தின் நிதிகளை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை வழங்குவதால், மாகாண சபைகள் தமது அதிகாரத்தை பிரயோகிப்பதில் முக்கிய தடைகளைச் சந்திக்கின்றன.

(05 ஆம் பக்கம் பார்க்க...)



# 13 ஆம் சீர்திருத்தச் சட்டமும்...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண நிதியத்தின் பாதுகாப்பு ஆளுநரிடம் உள்ளது. ஆளுநரின் ஒப்புதல் இல்லாமல் வரிகளை விதிக்கும் அல்லது ரத்து செய்யும் சட்டத்தை மாகாண சபை நிறைவேற்ற முடியாது நவம்பர் 2016 இன் மையம் மற்றும் எல்லை உறவுகள் குறித்த அரசியல் யாப்பு சபையின் உபகுழுவின் (Centre periphery subcommittee) அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, அரசியலமைப்பு கட்டமைப்பானது மாகாண சபையின் வருவாய் ஈட்டும் திறனைக் கடுமையாகக் கட்டுப்படுத்துகிறது. எனவே, மாகாண சபை தங்கள் நிதிகளுக்கு மத்திய அரசினையே பெரிதும் சார்ந்திருக்க வேண்டும்.

மறுவடிவமைப்பு செய்யப்பட வேண்டிய மற்றொரு பகுதி, நிர்வாக அமைப்பு. மாகாண சபைகளைத் திறம்பட நடத்துவதற்கு, சபைக்கு அதன் நிதிகள் மீதான கட்டுப்பாடு மட்டுமல்ல, திறமையான நிர்வாக அமைப்பும் மற்றும் வரையறுக்கப்பட்ட திறனுள்ள பகுதிகளும் தேவை. தற்போது மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்குகின்றனர். இந்த அதிகாரிகள் மாகாணத்தின் எல்லைக்குள் நிர்வாகச் செயற்பாடுகளை மேற்கொண்டாலும் மாகாண நிர்வாகத்தின் எந்த கட்டுப்பாடும் இவர்களுக்கில்லை. மேலும் உள்ளூராட்சி அதிகாரசபைகள் மாகாணசபைகளின் மேற்பார்வைக்கட்டுப்பாட்டின் கீழ் இருந்தாலும், உள்ளூராட்சி மட்டத்திலுள்ள அதிகாரத்தின் பெரும்பகுதி, மத்திய அரசிடம் உள்ளது.


மாகாணத்தின் திறமையான நிர்வாகத்திற்கு பகுதிகள் முழுமையாக வரையறுக்கப்பட வேண்டும். ஆனால், நடைமுறையில் மத்திய அரசு மாகாண நிர்வாகத்திற்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளை ஆக்கிரமித்து வருகிறது. மத்திய பட்டியல் 11 இன் ஒதுக்கப்பட்ட அனைத்தும் ஆவணத்தின் தலைப்பும் தேசிய கொள்கையுடன் தொடங்குகிறது. மத்திய அரசு தேசிய விடயங்களை தனது அதிகாரத்திற்குள் சுவீகரித்துக்கொள்ள எத்தனிக்கின்றது. இதை நிவர்த்தி செய்ய, தேசியக்கொள்கை அல்லது தேசிய தர நிலைகள் என்றால் என்ன என்பது ஒரு பங்கேற்பு செயல்முறையின் மூலம் மாகாணங்களின் ஈடுபாட்டுடன் வகுக்கப்பட வேண்டும், இது பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டு மத்திய மற்றும் மாகாண சபைகள் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். அரசியலமைப்புச் சட்டம், 2006 நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் இது முன்மொழியப்பட்டுள்ளது. திருத்தப்பட வேண்டிய மற்றொரு விடயம் கூட்டுப்பட்டியல் (concurrent list). இரு தரப்பிற்கும் அதிகாரம் உள்ள பட்டியல் நீக்கப்பட்டு, மத்திக்கும் மாகாணத்திற்கும் அதிகாரங்கள் பகிரப்பட்டு தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். இவ்வாறான ஒரு கட்டுரையில் மேலும் ஆழமான ஆய்வுகளை மேற்கொள்ள முடியாது, ஆனால் மாகாண சபைகளூடாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டுமானால், கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான விடயங்கள் என்ன என்பதை நான் சுட்டிக் காட்டியுள்ளேன். திருத்தம் செய்ய வேண்டிய சில பகுதிகள் பின்வருமாறு. ஆளுநர்களின் பங்கு இது வரை மாகாணசபை செயற்பாட்டிற்குத் தடையாக உள்ளது.

ஆளுநர் பெயரளவிலான தலைவராக இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணசபை பிரதிநிதிகளிடம் செயற்பாடுகளை ஒப்படைக்க வேண்டும். இது 2016 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்ற உபகுழுவின் அறிக்கையின் பரிந்துரையாகும். எனவே ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு மாகாண சபைகள் சட்டம், திருத்தம் செய்யப்பட வேண்டும். மாகாண சபையின் வருவாயை ஈட்டும் திறன் அதிகரிக்கப்பட வேண்டும். வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன்களைப் பெறுவதற்கு அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் அல்லது குறைந்தபட்சம் வெளிநாட்டு உதவி மூலம் நிதியளிக்கப்பட்ட திட்டங்களை நிர்வகிக்கும் அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. மற்றுமொரு முக்கியமான விடயம், மக்களுக்குச் சேவைகளை வழங்குவதில் மாகாண சபையின் செயற்பாடுகளை நிறைவேற்றக்கூடிய நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதுடன், இதற்காக மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் கிராம உத்தியோகத்தரின் பணிகள் மாகாண நிர்வாகத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். அவர்கள் மத்திய அரசின் முகவர் சேவைகளை மேற்கொள்ளலாம். உள்ளூராட்சி அதிகாரசபைகள், பகிர்ந்தளிக்கப்பட்ட பட்டியலின்படி மாகாண சபையின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தாலும், இந்த ஏற்பாடு நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA), மகாவலி அதிகாரசபை மற்றும் மாகாணத்திற்குள் செயற்படும் ஏனைய மத்திய அமைப்புகளின் மூலம் இந்த அதிகாரம் கையகப்படுத்தப்படுகின்றது. எனவே அத்தகைய அமைப்புக்கள் மாகாண மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகளுடன் இணைந்து அவர்கள் சம்மதத்துடன் மட்டுமே மாகாணத்திற்குள் இயங்குவது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

அடுத்ததாக சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான அதிகாரங்கள் மற்றும் காவல் அதிகாரங்களைப் பொறுத்தவரை 9 ஆவது அட்டவணையின் பின்







இணைப்பு 1 இல் உள்ளது. இவை கோரிக்கை அடிப்படையில் மாகாண சபைக்குப் பகிரப்பட கூடிய சரத்தொன்று சேர்க்கப்பட வேண்டும். உதாரணமாக, ஐக்கிய இராட்ச்சியத்தின் வட அயர்லாந்து சட்ட சபையின் விடயத்தில், மேற்குறிப்பிட்ட அதிகாரங்கள் தொடக்கத்தில் மத்திக்கு வழங்கப்பட்டிருந்தாலும், சட்டசபையின் கோரிக்கையின் அடிப்படையில் அந்த அதிகாரங்கள் பகிரப்படக்கூடிய சரத்து சேர்க்கப்பட்டு 2010 ஹில்ஸ்பரோ ஒப்பந்தத்தின் கீழ் அதிகாரம் சட்டசபைக்கு மாற்றப்பட்டது. பிற்சேர்க்கை 1 நடைமுறைப்படுத்தப்படும் வரை வேறு வழிமுறைகளைக் கையாளலாம். உதாரணம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர்களில் குறிப்பிட்ட வீதம், இந்த மாகாணங்களில் இருந்து ஆட்சேர்ப்பு செய்யும் கொள்கையில் தமிழ் மொழி பேசும் பகுதிகளில், அவர்கள் திறம்பட செயற்படுவதற்கு தமிழ் மொழியில் கல்வி பொதுத் தாரதர சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை விதிக்கலாம். மலையகத் தமிழர்களும் பயன்பெறும் வகையில் மத்திய மாகாணங்களில் உள்ள சில பிரதேசங்களைப் பொறுத்தமட்டில் இதேபோன்ற சில ஏற்பாடுகளை நான் பரிந்துரைக்கிறேன். இந்த மாகாணங்களின் காணிப் பாதுகாப்பிற்கு அரச காணிகளைப் பயன்படுத்துதல் மற்றும் ஜனாதிபதியின் உத்தரவின் கீழ் அவ்வாறான காணிகளை வழங்குதல் ஆகியவை மாகாண சபையுடன் கலந்தாலோசித்து அல்லது ஆலோசனையின் பேரில் மட்டும் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானதனால், காணி தொடர்பான பின்னிணைப்பு 11 முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். 3 சமூகங்களில் உள்ளடக்கும், உறுப்பினர்களை நியமிக்கும் தேசிய காணி ஆணைக்குழுவின் அரசியலமைப்பின் இணைப்பு 11 இல் உள்ள ஏற்பாடு உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்.

தமிழ்க்கட்சிகள் இதில் முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன். இந்திய அரசாங்கம், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஒரு தரப்பாக இருப்பதால், இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்ட பொறுப்புக்களை, இலங்கை அரசாங்கம் 13 A இன் திருத்தச் சட்டத்தினை முழுமையாக நிறைவேற்றுவதன் மூலமாக தமிழ் பேசும் மக்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு உறுதி செய்யப்பட வேண்டும். இதன் மூலம் குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்களின் வரலாற்று குடிமக்களென ஒப்பந்தத்தில் குறிக்கப்படும், தமிழ் பேசும் மக்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வினை உறுதி செய்யமுடியும். ஐக்கிய நாடுகள் மனித உரிமை மன்ற (APRC) பிரேரணைக்கு இணங்க, இலங்கை அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்தி சில காலமாக முடங்கிக் கிடக்கும் இந்த அமைப்பினை செயற்பட வைக்க வேண்டும். தெற்கில் உள்ள மாகாண சபைகளும் முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்களால் பயனடைகின்றன, ஏனெனில் இது முழு நாட்டினதும் குடிமக்களுக்கு சேவை முறையை வழங்கும். ஜனாதிபதி அவர்கள் தமது வரவு செலவுத் திட்ட உரையில், தமிழ்க் கட்சிகள் தமது மக்களின் தேவைகளைப் பார்த்து தமது பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்தியில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தியிருப்பதை நான் கவனிக்கிறேன். உண்மையான ஜனநாயகம் இருக்கும் போது, பொருளாதார வளர்ச்சிக்கான உத்திகள் குறித்து மக்களிடம் ஆலோசனை நடத்தப்படும்போது இதைச்சிறப்பாக செய்ய முடியும். உள்ளூர் நிலைமைகள் மற்றும் மக்களின் தேவைகளை அறியாத கொழும்பில் அமர்ந்திருக்கும் அதிகாரவர்க்கத்தினரை விட, மாகாண சபைகள் மூலம் உள்ளூராட்சி அதிகார சபைகள் இந்த அபிவிருத்தியை உள்ளூர் மட்டத்தில் மேற்கொள்வது சிறந்தது. எனது பார்வையில், தமிழ் பேசும் மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் தற்போது மாகாணமட்ட அதிகாரப் பகிர்வே சிறந்ததாக உள்ளது. இது அவர்களின் பாரம்பரியக் குடியிருப்புப் பகுதிகளில் ஓரளவு சுயாட்சியை வழங்குகிறது. இதற்கு உதாரணமாக ஒற்றையாட்சி நாடான ஐக்கிய ராஜ்ஜியத்தில் (UK), ஸ்கொட்லாந்து, வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லாந்து ஆகியவை இனரீதியாக வேறுபடுகின்றன அங்கு ஒவ்வொன்றிற்கும் சொந்தசட்ட மன்றங்கள் உள்ளன. ஸ்கொட்லாந்தில் அது பாராளுமன்றம் என்றே அழைக்கப்படுகிறது, மேலும் 13 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சமனான அதிகாரங்களைப் பயன்படுத்துகிறது. இந்தக் கட்டுரையில் அனைத்து முக்கிய மாற்றங்களும் அதாவது ஆளுநர்களின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தல், மாகாண சபைகளின் நிதி அதிகாரங்கள் வழங்கல், நிர்வாக முறைமையை மீள் வடிவமைத்தல் ஆகியவை பின்வரும் அறிக்கைகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அரசியலமைப்பு விவகாரங்கள் மற்றும் தேசிய கேள்வி 2006 இன் தீர்வு குறித்து APRC க்கு ஆலோசனை வழங்கும் நிபுணர்கள் குழுவின் அறிக்கை மற்றும் "நாட்டிலேயே உருவாக்கப்படும் அரசியல் யாப்பு" என்ற பெயரிலுள்ள APRC (அனைத்து கட்சிப் பிரதிநிதிக் குழு) அறிக்கை 2010 அத்துடன் 2016 இல் கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த அரசியலமைப்புப் பேரவையின் வழிநடத்தல் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மத்திய - எல்லைப்புற உறவுகள் தொடர்பான பாராளுமன்றத் துணைக் குழுவின் அறிக்கை.

மேற்குறிப்பிட்ட அனைத்துக் குறைபாடுகளும் களையப்பட்டு தேவையான திருத்தங்களைச் செய்தால் மாகாண சபை முறைமை திறமையான மற்றும் வெற்றிகரமான அமைப்பாக இருக்க முடியும் என்பதை நான் சமர்ப்பிக்கின்றேன். இந்த மாற்றங்களுக்கு எந்த முக்கிய அரசியல் யாப்பு மாற்றங்கள் தேவையில்லை, மேலும் பாராளுமன்றத்தில் ஒரு சாதாரண பெரும்பான்மையுடன் சட்டமியற்றுதல் மற்றும் 13 ஆவது திருத்தத்தின் விதிகளின் கீழ், ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவிப்பின் மூலம் நிர்வாக மாற்றங்கள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்தாளர் 2006 நிபுணர்கள் குழுவின் உறுப்பினராகவும், இந்தக் குழுவின் பெரும்பான்மை அறிக்கையில் கையொப்பமிட்டவராகவும் இருந்தார். ■

பிதாமகன்

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக நிதி அமைச்சானது அரசாங்க ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபாயை நிவாரணமாக வழங்க முன் வந்தது போன்று தனியார் துறையினருக்கும் அதை வழங்குவதற்கு பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றது.

மேலும் இத்தொகையானது ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கும் கடந்த மாத நிலுவையோடு இம்மாத ஓய்வூதியத்தோடு சேர்த்து வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இந்நாட்டின் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்ந்து வரும் அதே வேளை, வர்த்தமானி படுத்திய ஆயிரம் ரூபாய் நாட்சம்பளத்தையும் இது வரை பெறாத தோட்டத்தொழிலாளர்களுக்கு நிவாரணமாக இந்த அரசாங்கம் முன்வைத்துள்ள திட்டம் கோதுமை மாவாகும்.

கோதுமை மாவை அதிகம் நுகர்கின்ற மக்களாக இந்த உழைக்கும் வர்க்கத்தினரை அடையாளப்படுத்தியுள்ள அரசாங்கம், அவர்களுக்கு ஒரு கிலோ கோதுமை மாவை, தலா 80 ரூபாய் படி மாதத்துக்கு 15 கிலோ வழங்கப்படும் என அறிவித்தது. இந்த அறிவித்தல் வெளியிட்டனர்.

அதை விட சோதனையான விடயம் என்னவெனில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அறிவித்தது போன்று பெப்ரவரி 5 ஆம் திகதி எந்த தொழிலாளர்களுக்கும் கோதுமை மா கிடைக்கவில்லை. ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதி தொழிலாளர்களுக்குச் சம்பள நாளாகும். அன்றைய தினம் தமது சம்பள சீட்டைப் பார்த்த தொழிலாளர்களுக்கு மயக்கம் வராத குறை. தமக்குக் கிடைக்காத கோதுமை மாவுக்குப் பணம் வெட்டப்பட்டிருந்தது. இறுதியாக 15 ஆம் திகதியளவில்தான் தோட்டங்களுக்குக் கோதுமை மா மூடைகள் லொறிகள் மூலம் வந்து




# மலையக மக்களும் கோதுமை மா அரசியலும்..!

வெளிவந்தவுடன் தடாலடியாகச் செயற்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் அதைத் தொழிலாளர்களுக்கு விநியோகிக்கும் பொறுப்பை நாம் ஏற்கிறோம் என்று அறிக்கை விடுத்தார். அதை விட தொழிலாளர்களுக்கு இந்த அரசாங்கத்திடமிருந்து வேறு என்னதான் இவர்களால் பெற்றுக் கொடுக்க முடியும்?



பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதியிலிருந்து இந்தக் கோதுமை மா வழங்கப்படும் என்று அறிவித்தார். ஆனால் அதற்குப்பிறகு இடம்பெற்றதே சோகமான விடயம். தற்போது 22 பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ் இயங்கும் தேயிலைத் தோட்டங்களில் சராசரியாக 1 இலட்சத்து 30 ஆயிரம் வரையான தொழிலாளர்களே பணி புரிகின்றனர். இதில் ஒரு இலட்சத்துக்கும் குறைவானவர்களே தோட்டங்களில் பெயர் பதிந்து பணி புரியும் நிரந்தர தொழிலாளர்களாவர். ஏனையோர் ஓய்வு பெற்று மீண்டும் அன்றாடக் கொடுப்பனவில் பணியாற்றும் தொழிலாளர்கள். இவர்களை 'கைக்காசு தொழிலாளர்கள்' என்று அழைப்பர். அதாவது இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 500 ரூபாய் வேதனமாக வழங்கப்படும். ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதி மற்றும் மேலதிகக் கொடுப்பனவுகள் ஒன்றும் வழங்கப்படாது.

இவ்வாறு வேலை வாங்குவது கம்பனிகளுக்கு இலாபமாகும். பெண் தொழிலாளர்கள் இந்த முறையில் கொழுந்து பறிக்கும் போது கிலோ ஒன்றுக்கு 40 - 50 ரூபாய் வரை வழங்கப்படும். அனுபவம் உள்ள பெண் தொழிலாளர்கள் 20-25 கிலோ வரை பறிப்பர். இவர்களுக்குக் கொழுந்து நிறைக்கான நாள் கொடுப்பனவுகளே வழங்கப்படும். மேலதிகமாக ஒன்றுமில்லை.

இந்தச் சூழலில் தோட்டங்களில் நிரந்தரமாக பெயர் பதிந்து வேலை செய்பவர்களுக்கு மட்டுமே கோதுமை மா என்ற குண்டை தூக்கிப் போட்டது இ.தொ.கா. அதே வேளை ஒரு குடும்பத்தில் பல பேர் வேலை செய்தாலும் ஒருவருக்கு மட்டுமே இந்தச் சலுகை எனக் கறாராக கோதுமை மாவை மிச்சம் பிடிக்கும் வேலையை சில கீழ்மட்ட பிரதிநிதிகள் முன்னெடுத்தனர். இதன் காரணமாக தொழிலாளர்கள் கடும் கோபத்துக்குள்ளாகினர். சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி அதை தடுப்பதாக அல்லாது தட்டிப் பறிக்கும் வேலையாக, இ.தொ.காவுக்கு ஏன் இந்த வேலை என விசனத்தை சேர்ந்தன.

அனைவருக்கும் வழங்குவதற்கான கையிருப்பு இல்லாத காரணத்தினாலேயே நிரந்தரத் தொழிலாளர்களுக்கு மாத்திரம் என மாற்றப்பட்டதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. அதை விட இந்தக் கோதுமை மா விடயத்திலும் இ.தொ.கா செய்துள்ள அந்தர்பல்டி அரசியல் பலரை முகஞ்சுளிக்க வைத்துள்ளது. அதாவது கடைகளில் ஒரு கிலோ கோதுமை மா 115 ரூபாவிலிருந்து 120 ரூபா வரை விற்கப்படுகின்றன. தொழிலாளர்களுக்கு கிலோ 80 ரூபாய்க்கு வழங்கப்படும் போது மிகுதியான தொகையை அரசாங்கம் ஏற்கின்றது. இதுவே மானிய முறை அல்லது நிவாரணத் தொகையாக உணவுப் பொருட்கள் வழங்கும் போது கடைபிடிக்கப்படும் செயற்பாடாகும். இதற்கு நிதி அமைச்சும் வர்த்தக அமைச்சும் இணைந்து செயற்படுகின்றன. ஆனால், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட மா மூடையில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சு எனக் கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் அரசாங்கம் தொழிலாளர்களுக்கு மானியமாக கோதுமை மாவைத் தருவதாக அறிவித்த போது அதை விநியோகிக்கும் பொறுப்பை தாம் ஏற்பதாகக் கேட்டுப் பெற்றுக்கொண்டார் இராஜாங்க அமைச்சர் ஜீவன். இப்போது இதை ஏதோ தமது அமைச்சின் நிதியில் வழங்குவது போன்று பெயரையும் போட்டுக்கொண்டிருக்கின்றார். இவை எல்லாமே அவரது தந்தை ஆறுமுகன் தொண்டமானின் பழக்க வழக்கங்கள். யார் எதைச் செய்தாலும் அதற்குப் பின்னணியில் இ.தொ.காவே இருந்தது என்று பெயர் போட்டுக்கொள்ளும் அரசியலை மலையகத்தில் ஆரம்பித்து வைத்தது இவர்கள் மட்டுமே. அதில் ஜீவன் மட்டும் சளைத்தவரா என்ன?

**"ஆரம்பத்தில் அரசாங்கம் தொழிலாளர்களுக்கு மானியமாகக் கோதுமை மாவை தருவதாக அறிவித்த போது அதை விநியோகிக்கும் பொறுப்பை தாம் ஏற்பதாக கேட்டுப் பெற்றுக்கொண்டார் இராஜாங்க அமைச்சர் ஜீவன். இப்போது இதை ஏதோ தமது அமைச்சின் நிதியில் வழங்குவது போன்று பெயரையும் போட்டுக்கொண்டிருக்கின்றார். இவை எல்லாமே அவரது தந்தை ஆறுமுகன் தொண்டமானின் பழக்க வழக்கங்கள். யார் எதைச் செய்தாலும் அதற்குப் பின்னணியில் இ.தொ.காவே இருந்தது என்று பெயர் போட்டுக் கொள்ளும் அரசியலை மலையகத்தில் ஆரம்பித்து வைத்தது இவர்கள் மட்டுமே. அதில் ஜீவன் மட்டும் சளைத்தவரா என்ன?"**



நல்லாட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்பு, அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலைத் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்கள் முடிவுற்றிருக்கும் தறுவாயில் ஓடோடிச்சென்று அதைத் திறந்து வைத்துவிட்டு சர்வசாதாரணமாக வலம் வருகிறார் ஜீவன் தொண்டமான். ஆகவே அரசாங்கம் கொடுத்த நிவாரணத்தை ஏதோ தான் பெற்றுக்கொடுத்தது போன்று இன்று மலையகத்தில் அரசியல் நாடகம் ஆடி வருகின்றது இ.தொ.கா. இதை விட எதிரணி அரசியல் பிரமுகர்கள் செய்யும் அரசியல் மிகவும் மோசமானதாக உள்ளது. தமிழ் முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பி.திகாம்பரத்தை தலைவராகக் கொண்ட தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் வே.இராதாகிருஷ்ணனை தலைவராகக் கொண்ட மலையக மக்கள் முன்னணி உறுப்பினர்கள் இந்தக் கோதுமை மா விவகாரத்தை வேறு வழிகளில் திசை திருப்பும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். கோதுமை மாவை கொடுத்து எமது மக்களை இந்த அரசாங்கமும் அதனோடு இணைந்திருக்கும் இ.தொ.காவும் கேவலப்படுத்துகின்றன எனப் பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

அப்படியானால் இவர்கள் காலத்தில் இந்தத் தொழிலாளர்களுக்கு என்னதான் நிவாரணத்தைப் பெற்றுக்கொடுத்து விட்டனர்? தற்போது எதிரணியில் தலை நகரில் மனோ கணேசனைத் தவிர்த்து மலையகப் பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிக்கள் 4 பேர் பாராளுமன்றில் உள்ளனர். ஆனால் பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளைப் பேசுவதைத் தவிர்த்து, தாம் நல்லாட்சிக் காலத்தில் செய்த விடயங்களைப் பற்றி மட்டுமே இன்னும் பேசி வருகின்றனர். சம்பள விவகாரத்தை மறந்து விட்டுத் தற்போது கோதுமை மா விடயத்தை கையிலெடுத்துள்ளனர் தமிழ் முற்போக்குக் கூட்டணியினர். நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் இவர்களுக்குப் பேசக் கிடைத்தது என்னவோ இவ்விடயங்கள் மட்டும்தானா? எனக் கேள்வி எழுப்பத்தோன்றுகின்றது. ■

# உற்சவ காலம் தொடங்குகிறது!

## அன்று யாத்திரை – இன்று மெய்நிகர்

அவதானி



நல்லூர் கந்தசுவாமி கோயில், மடுத்திருத்தலம் முதலானவற்றில் வருடாந்த உற்சவம் தொடங்கும் போது, அதற்கான தயாரிப்பு வேலைகளைப் பக்தர்களும் அடியாளர்களும் ஆரம்பித்துவிடுவார்கள்.

அதுபோன்று கச்சதீவு உற்சவம், ஹஜ்பெருநாள் வரும் காலங்களில் கச்சதீவு செல்வதற்கும் மக்காவுக்கு பயணிப்பதற்கும் யாத்திரீகர்கள் தயாராகிவிடுவார்கள். காலங் காலமாக இது நடந்தேறிவருகிறது.

இலங்கையில் பல வருடங்களாக நீடித்திருந்த உள்நாட்டுப்போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் நடுப்பகுதியில் முடிவுக்கு வந்ததையடுத்து, கடந்த பன்னிரண்டு வருடங்களாக மற்றும் ஒரு உற்சவத்திற்கு இலங்கை அரசும், அதனை ராஜபக்ஷ காலத்தை மாத்திரம் தவிர்த்து, எதிர்த்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், கஜேந்திரகுமாரின் தமிழ்த்தேசிய முன்னணியினரும் ஐக்கிய நாடுகள் சபைக்கு முறையிடுவதற்காக யாத்திரையை ஆரம்பித்துவிடுவார்கள்.

இந்த யாத்திரைக் காலம் பெரும்பாலும் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதத்தில் வரும். ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப்பேரவையின் கூட்டத்தொடர் வருடாந்தம் பெப்ரவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையில் நடைபெற்று வருகிறது.

இதற்குச் செல்வதற்கு அரச தரப்பும், எதிரணித்தரப்பும் தயாராகிவிடும். எனினும் கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் கொவிட் பெருந் தொற்றுப் பரவியதையடுத்து மெய்நிகர் ஊடாக அனைத்துத் தரப்புகளும் பேசத்தொடங்கியிருக்கின்றன.

விமான யாத்திரைக்குப் பயணச் செலவு. மெய்நிகர் சந்திப்புக்குச் செலவே இல்லை. அவ்வளவுதான் வித்தியாசம் !

இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பிலான அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஒவ்வொரு வருடமும் வெளியிடுவார்.

அதற்குத் தகுந்தாற்போல் இலங்கை அரசும் மாற்று அறிக்கையை அல்லது அவகாசம் கோரும் வேண்டுகோளை விடுத்துவரும்.

அப்போது இலங்கை அரசுக்கு சில நாடுகள் துணைநிற்கும். இம்மாதம் தொடங்கவிருக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரில் எதிர்வரும் மார்ச் மாதம் 03 ஆம் திகதியன்று, இலங்கை தொடர்பான எழுத்து மூல அறிக்கையை ஆணையாளர் மிச்சேல் பச்லெட் சமர்ப்பித்து விவாதத்தைத் தொடக்கி வைப்பார்.

அதற்கு முன்னர் அந்த அறிக்கை இலங்கை அரசின் கவனத்திற்குக் கிடைக்கவிருப்பதாகவும், அதற்கான விரிவான பதிலை விவாதம் தொடங்குவதற்கு முன்னர் அனுப்பவிருப்பதாகவும் வெளிவிவ கார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் அண்மையில் தெரிவித்துள்ளார்.

போர் முடிவுக்கு வந்த காலம் முதல், மனித உரிமை மீறல்கள், காணாமல் போனவர்கள் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை பற்றியெல்லாம் தொடர்ந்து பேசப்படுகிறது.

2009 இற்குப் பின்னர் இலங்கையில் சில ஆட்சி மாற்றங்களும் நடந்துவிட்டன. மகிந்த ராஜபக்ஷ இரண்டு தடவைகள் நாட்டின் ஜனாதிபதியானார். தற்போது அவரது தம்பி கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகிக்கிறார்.

இடையில் நல்லாட்சி அரசின் காலம் என்ற பெயரில் பொது வேட்பாளராக களம் இறக்கப்பட்ட மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் பதவியில் இருந்தனர். இவர்களுக்கு அனுசரணையாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் இதர மலையக தமிழ்க் கட்சிகளும் இயங்கின.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவை முன்னெடுத்து வந்த நடவடிக்கைகளில் ஏதும் பயன் - பலன் கிட்டியிருப்பதாகத் தெரியவில்லை. ராஜபக்ஷக்கள் மீதும் சில இராணுவ தளபதிகள் மீதும் போர்க்குற்றங்கள் தொடர்ந்து சுமத்தப்பட்டன. ஆயினும் இதுவரையில் எவரும் தண்டிக்கப்படவில்லை.

மனித உரிமைப்பேரவையின் தரப்பில் போர்க்குற்றங்கள் சுமத்தப்படும் வேளைகளில், விடுதலைப்புலிகள் தரப்பில் நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்தும், சிறுவர் போராளிகள் பற்றியும் இலங்கை அரசு தரப்பில் சொல்லப்பட்டது. இப்படியே ஒரு தசாப்த காலம் உருண்டோடிவிட்டது.

இம்முறை இலங்கைக்கு எதிரான மற்றும் ஒரு கட்டமான பிரேரணையை முன்வைப்பதற்கு பிரித்தானிய தரப்பு தயாராகியிருப்பதாகவும் செய்திகள் கசிந்துள்ளன.

இதேவேளை, இறுதிப்போர் காலத்தில் களத்திலிருந்த இராணுவத் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் சாகி கல்லகே, நடக்கவிருக்கும் கூட்டத்தொடரில் இலங்கைக்குப் பேராபத்து இருப்பதாக ஆரூடம் கூறியுள்ளார்.

இலங்கை இராணுவத் தரப்பின் பாஷையில் பயங்கரவாதிகளைத் தோற்கடித்திருந்தாலும், சர்வதேச சமூகத்தினதும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினதும் அச்சுறுத்தலுக்கு இலங்கை அரசு ஆளாகியிருப்பதாகவே அவரது கூற்றுக்கள் புலப்படுத்துகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் வரும்போது இலங்கை அரசுக்கு அது கண்டம் வரும் காலமாகவே அமைந்துவிடுகிறது. எனினும் இக்கண்டத்திலிருந்து சாதுரியமாகக் கடந்து சென்றுவிடுகின்றது.

ஆனால், இது எவ்வளவு காலத்திற்கு..? பொறுப்புக்கூறல் விடயத்திலும், மனித உரிமைப்பேரவை முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களுக்குத் தக்க பதில் அளிப்பதிலும் இலங்கை அரசு சரியான பொறிமுறையை உருவாக்கவில்லை என்பதே, போர்க் காலத்தில் பணியிலிருந்த தளபதிகள் சரத் பொன்சேகா, மற்றும் சாகி கல்லகே ஆகியோரின் கூற்றாக இருந்து வருகிறது.

கடந்த ஆண்டும் இதே காலப்பகுதியில், ஐ.நா. மனித உரிமைப் பேரவை ஆணையாளர் மிச்சேல் பட்டேல், இலங்கைக்கு எதிரான குரலை தமது அறிக்கையின் மூலம் எழுப்பியிருந்தார்.

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் விவகாரங்களில் இலங்கை அரசு தொடர்ந்தும் தோல்விகளையே சந்தித்து வந்திருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்து வருகின்றனர்.

இது இவ்விதமிருக்க, வடக்கிலிருக்கும் இராணுவம், நில ஆக்கிரமிப்பிலிருந்து தன்னை முழுமையாக விடுவித்துக்கொள்ளாமல், சில சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றது.



வீடற்றவர்களுக்கு வீடு அமைத்துக் கொடுத்தல், ஏழை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குதல், பெருந்தொற்றுக்கால நிவாரண உதவி பெற்றுக் கொடுத்தல் முதலான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

அத்துடன் அரச மரங்களை நடுவதிலும் அக்கறை காட்டி வருகிறது. அண்மையில் முல்லைத் தீவிலிருந்து கொக்கிளாய் செல்லும் பாதையில் செழித்து வளர்ந்திருந்த வேப்பமரத்தை வெட்டித்தறித்துவிட்டு, அவ்விடத்தில் அரச மரத்தை நட்டுள்ளனர். விரைவில் அவ்விடத்திற்கு ஒரு புத்தர் சிலை வந்துவிடலாம்.

இலங்கை இராணுவத்தின் பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் இவ்வாறுதான் அமைந்துள்ளன. ஒவ்வொரு வருடமும் வரும் மார்ச் மாதத்திலும் ஜெனீவா கூட்டத் தொடர் பேசுபொருளாகவிருக்கும்.

> **“மனித உரிமைப்பேரவையின் தரப்பில் போர்க்குற்றங்கள் சுமத்தப்படும் வேளைகளில், விடுதலைப் புலிகள் தரப்பில் நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்தும், சிறுவர் போராளிகள் பற்றியும் இலங்கை அரசு தரப்பில் சொல்லப்பட்டது. இப்படியே ஒரு தசாப்த காலம் உருண்டோடிவிட்டது. இம் முறை இலங்கைக்கு எதிரான மற்றும் ஒரு காட்டமான பிரேரணையை முன்வைப்பதற்கு பிரித்தானிய தரப்பு தயாராகியிருப்பதாகவும் செய்திகள் கசிந்துள்ளன.”**

அதன்பின்னர் வரவிருக்கும் புதிய ஆண்டின் பெப்ரவரி மாதம் வரையில் மக்கள் வேறு விடயங்களை பேசிக் கொண்டிருப்பார்கள்.

எனவே ஆலய உற்சவங்கள் போன்று இந்தக் கூட்டத்தொடர் நிகழ்வுகளும் மாறியிருப்பதுதான் எம் காலத்து காட்சி.

இறுதிப்போர் நடந்த பிரதேசத்தில் பலருடைய உடலில் இன்னமும் எறிகணைத்துகள்கள் தங்கியிருக்கின்றன. அதனால், அவர்களுக்கிருக்கும் உடல் உபாதைகளும் இந்தத் தொடர்பேச்சுக்கள் போன்று தொடர்ந்து இருந்து வருகின்றன. இதுபற்றி யார் பேசுவார்...? ■

திருநாவுக்கரசு தயந்தன்
மூத்த பொறியியலாளர்

எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகமாக இருந்தாலும் சாதிப்பதில் பெரும்பான்மையாக இருந்த சரித்திரங்களைக் கொண்டிருந்த சமூகம் எங்களுடையது! ஆனால் பல்வேறு உள்ளக வெளியக அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளால் எங்கள் சமூகத்தின் கல்விச் சரித்திரங்கள் சரிந்து வருவது வெளிப்படை உண்மை! உண்மைகளை உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்தால் மீண்டும் பல சாதனை, சரித்திரங்களைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையில் பல்வேறு காரணிகளை யதார்த்தமாக ஆராய்வதோடு நடைமுறைச்சாத்தியமான பரிந்துரைகளையும் தேவையான மாற்றங்களையும் விவாதிக்க இருக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்! சுயவிருப்பு வெறுப்புகளைப் புறந்தள்ளி, நடுநிலைமையுடன் தொடரை வாசிக்குமாறும் பொருத்தமான களப்பணிகளிலும் செயற்பாடுகளிலும் இணையுமாறும் வாசகர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்!

-ஆசிரியர்



# சரிந்து கொண்டிருக்கும் ஒரு சரித்திரம் 09

## கிராமியக் கல்வி மேம்பாட்டு அமைப்புகள் மற்றும் கிராமியப் படிப்பகங்களின் உருவாக்கம்

அத்தியாயம் - 07

**பகுதி - 02**

**2. கல்விக் கண்காணிப்புக் குழு / கிராமியக் கல்வி** மேம்பாட்டு குழு பாடசாலை ரீதியாகப் பின்தங்கிய மாணவர்களின் அடைவு மட்டங்களை ஒவ்வொரு தவணைப் பரீட்சை முடிவிலும் கண்காணித்து, எனது அத்தியாயம் 2 இல் விபரித்தது போல பாட ரீதியாக அலசி, "S" , "W" நிலையிலுள்ள மாணவர்களை அடையாளப்படுத்தி, அவர்களுக்கு என்ன பிரச்சினை என்ற காரணத்தைக் கண்டறிந்து அவற்றை தீர்த்து வைக்கக்கூடிய செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அவர்கள் சில வேளை குடும்ப, பொருளாதார, சமூகப் பிரச்சினைகளால் கற்றல் சிதைவடைந்த நிலையில் இருக்கலாம். கல்வி அனைவருக்குமான சொத்து. அது அத்தனை குழந்தைகளுக்கும் பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டிய சூழலை ஏற்படுத்த வேண்டியது நம் கடமைதானே. ஆகவே இந்தக் கண்காணிப்புக் குழு அந்த வேலையை ஒரு சுயாதீனக் குழுவாகச் செய்யலாம். இந்தக் குழுவுக்கு ஆளுமை மிக்க ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியர் தலைமை தாங்குவார். உண்மையில் பிள்ளைகள் கல்வியில் அக்கறைமிகுந்த ஆளுமையான பல ஓய்வைப் பெற்ற ஆசிரியர்கள் உதவியை அர்ப்பணிப்புடன் செய்ய என்றும் தயாராகவே இருப்பர். இத்தோடு இந்த அணியில் அதிபரையும், பாடசாலையில் அக்கறையுடன் தொழிற்படும் analytical skills கொண்ட இன்னும் 3 ஆசிரியர்களையும் இணைக்கலாம். அத்தோடு மாணவர்கள் சார்பில் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் 2 முதன்மை மாணவர்கள் உள்வாங்கப்படுவர். அந்த அந்த வகுப்பின் ஆய்வின் போது அந்த வகுப்பு மாணவர் பிரதிநிதிகள் இணைந்து கொள்வர். ஏன் என்கிறீர்களா? ஒரு மாணவனுடைய பிரச்சினை இன்னொரு மாணவனுக்கு அதிகமாகத் தெரிந்திருக்கும் வாய்ப்புக்களே அதிகம்.

> **தமிழ்ச் சமூகமே! உண்மையில் உங்கள் பலம் உங்களுக்குத் தெரியாத யானைகளாக இருக்கிறீர்கள். நீங்கள் அத்தனை பேரும் அதை உணர ஆரம்பித்தால், சரிவுகள் எல்லாம் கணப்பொழுதில் நிமிர ஆரம்பித்துவிடும். சிந்தியுங்கள், இங்கே நான் கூறியவை சில உதாரணங்கள் மட்டுமே. அவை பல இடங்களில் சாத்தியமாகியும் உள்ளன! சாத்தியம் என்று நினைப்பவனுக்கு எதுவும் சாத்தியப்படும்.**

இவ்வளவு நாளும் இருந்து வரும் நடைமுறையில் என்ன பிரச்சினை என்கிறீர்களா? அந்த அந்த வகுப்புப் பாட ஆசிரியர்களே மாணவர்களுக்குரிய கணிப்பீட்டை மேற்கொள்வதாலும், அதற்கு மேலே மேற்பார்வை இல்லை, குறைவு என்பதாலும் அவ்வாறான கணிப்பீடுகள் ஆழமாக இருப்பதில்லை. முன்னேற்றுவதற்கான முயற்சிகளும் குறைவு, எடுக்கப்படுவதில்லை.

மொக்குப் பிள்ளை கடைசி வாங்கிலிருந்து கடைசி வரை மொக்குப் பிள்ளையாகவே பல சூழ் நிலைகளில் பின்தங்கி விடுகிறது. ஆகவே இந்தக் கண் காணிப்புக் குழுவின் அமைப்பு பல அழுத்தங்களை உருவாக்குவதோடு பல உண்மைகளைக் கண்டறியவும் உதவும்.

தேவைப்படும் பிள்ளைகளுக்கு சமூகப் பொருளாதார உதவிகளை ஒருங்கிணைத்தல், பெற்றோருடன் பேசுதல், மேலதிக வகுப்புக்களை, கற்றல் முறைகளை ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளை இந்தக் கண்காணிப்புக் குழு ஒருங்கிணைக்கும். இந்தக் குழு சமூகத்திற்கும் பாடசாலைக்கும் ஒரு பாலமாகக் கூட தொழிற்படலாம். உலகெங்கும் உள்ள பழைய மாணவர் சங்கங்கள், உள்ளூர் அமைப்புகள், கல்விச் சமூகங்கள், இவ்வாறான குழுக்களின் அமைவை உங்கள் பாடசாலைகளில் ஊக்குவியுங்கள். வேண்டிய உதவிகளைச் செய்தால் நிச்சயம் நல்ல பெறுபேறுகளை எதிர்பார்க்கலாம். அடைவு மட்டங்களை அதிகரிக்கலாம்.

**3. ஒருங்குபடுத்தப்பட்ட சமூகப் பொருளாதார உதவித்திட்டங்கள்**

இங்கு ஏராளமான திட்டங்கள் உள்வாங்கப்படலாம். பல அமைப்புகள் செய்து வருகின்றன. புதிய அமைப்புகளும் உருவாக்கம் பெற்று வருகின்றன. நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புவது உங்கள் திட்டங்களின் உச்ச பட்ச பெறுதி. அவற்றை எப்படி மாற்றி அமைத்தால் ஒரே திட்டத்தில் பலரை பயனடையச் செய்யலாம் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். இப்போதெல்லாம் பல வெளிநாட்டு மக்கள் உள்ளூர்த் திட்டங்களுக்காக ஏராளமாக உதவி வருகின்றனர். பல திட்டங்களில் அவை பயனாளிக்குச் சென்றடைவதோடு முடிந்து விடுகின்றன. அந்தப் பயனாளிகள் பல இடங்களில் சமூகத்திற்கு எதையும் திருப்பிக் கொடுப்பதில்லை. ஆகவே நான் சொல்ல வருவது சிலருக்கு சலசலப்பை ஏற்படுத்தினாலும் நியாயமானது என்பதைப் புரிந்து வாசியுங்கள். உதாரணமாக நாங்கள் சில பல்கலைக்கழக மாணவர்களுக்கு, உயர்தர மாணவர்களுக்கு கற்றல் உதவித் தொகை வழங்கும் திட்டம் ஒன்றைச் செய்யும் போது, அந்த உதவி பெறும் மாணவர்கள், வாரத்தில் சில மணித்தியாலங்களைச் சாதாரண தரப் பிரிவு மாணவர்களுக்கு, அதற்குக் கீழ் உள்ள பிரிவு மாணவர்களுக்கு கற்பித்தல் பணியைச் செய்யக் கூடியவாறு மாற்றி அமைக்கலாம்.



இவ்வாறு ஆயிரம் உதவி பெறும் மாணவர்களை ஆயிரம் வளவாளர்களாக ஒரே திட்டத்திலேயே மாற்றலாம். அவர்கள் மேலே நான் கூறிய இரண்டு திட்டங்களிலும் கூடப் பயன்படுத்தப்படலாம். இது ஒரு உதாரணம் மட்டுமே. பல விடயங்கள் இலவசமாகக் கிடைத்து விடும் என்ற இன்றைய களச்சூழல் எங்களின் சிந்தனையை மழுங்கடித்துப் பல இடங்களில் சோம்பேறிகளாக்கி இருப்பது உங்கள் மனசாட்சிக்குப் புரியும். அந்தச் சோம்பேறித்தனம்தான் பல இடங்களில் எங்களை அழிவின் விழிம்புக்கு இட்டுச்சென்றுள்ளதும் உங்களுக்குத் தெரியும்.

தமிழ் சமூகமே! உண்மையில் உங்கள் பலம் உங்களுக்குத் தெரியாத யானைகளாக இருக்கிறீர்கள். நீங்கள் அத்தனை பேரும் அதை உணர ஆரம்பித்தால், சரிவுகள் எல்லாம் கணப்பொழுதில் நிமிர ஆரம்பித்துவிடும். சிந்தியுங்கள், இங்கே நான் கூறியவை சில உதாரணங்கள் மட்டுமே. அவை பல இடங்களில் சாத்தியமாகியும் உள்ளன! சாத்தியம் என்று நினைப்பவனுக்கு எதுவும் சாத்தியப்படும்.

மலையகத்தில் இருந்து பேசிய நண்பர் ஒருவர் அவரின் நண்பர் தன் மகள் Zoom இல் கல்வி கற்க வேண்டிய சூழ்நிலையில் இருப்பதால் தன் மனைவியின் நகையை விற்று கணினி வாங்கி கொடுத்ததாகக் கூறினார். தன் மகளின், மகனின் கனவை நனவாக்கத்தானே ஒவ்வொரு பெற்றோரும் உழைக்கிறீர்கள். உங்கள் சந்ததி கற்ற சந்ததியாக நீடித்து நிலைக்க வேண்டுமாயின் ஒரு சமூகமாக விழித்தெழுங்கள். சரிந்து கொண்டிருக்கும் எங்கள் கல்விச் சரித்திரத்தை எங்கள் நெஞ்சில் சாய்த்து நிமிர்த்தி விடுவோம்!

**அத்தியாயம் தொடரும்...**

# உலகை அச்சுறுத்தும் ரஷ்ய – உக்ரைன் பனிப்போர்

வானதி



உலக நாடுகள் அனைத்தும் ரஷ்ய - உக்ரைன் எல்லையை உன்னிப்பாக அவதானித்து வருகின்றன. உக்ரைனில் உள்ள தூதரக அதிகாரிகள் சிலரையும், தங்கள் நாட்டுப் பிரஜைகளையும் உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு பல நாடுகள் அறிவித்துள்ளன. யுத்தம் ஏற்பட்டால் உக்ரைனில் உள்ள தங்களது மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்குரிய முன்னேற்பாடுகளை சில நாடுகள் செய்துள்ளன.

சோவியத் ஒன்றியத்தின் அங்கமாக இருந்த உக்ரைன், இப்போது தனி நாடாக இருந்தாலும் வர்த்தகம், பொருளாதாரம் போன்றவற்றுக்கு ரஷ்யாவையே அதிகம் சார்ந்து நிற்கிறது. சமீபத்தில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் வர்த்தக உறவை வளர்த்துக் கொள்ளப் பேச்சு நடத்தினாலும், ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியாமல் ரஷ்யாவின் மிரட்டலுக்கு அஞ்சிப் பின் வாங்கியது.

ஐந்து ஆண்டுகளாகப் பொருளாதார மந்த நிலையால் அமிழ்ந்து கிடந்த ஐரோப்பிய நாடுகள் மெல்லத் தலையெடுத்து வளர்ச்சியை எட்டுகின்றன. கிழக்கில் உள்ள உக்ரைன் போன்ற நாடுகளுடன் பொருளாதார, வர்த்தக உறவுகளை விரிவுபடுத்திக்கொள்ள விரும்புகின்றன. தன்னுடைய செல்வாக்குக்குக் கட்டுப்பட்டுக் கிடந்த உக்ரைன், இப்படித் தன்னை விட்டுப் பிற ஐரோப்பிய நாடுகளுடன் போவதை ரஷ்யா விரும்பவில்லை. எனவே, சமாதானமாகப் பேசியோ மிரட்டியோ உக்ரனைத் தன்னுடனேயே வைத்துக் கொள்ள விரும்புகிறது. ரஷ்யாவின் பிடியில் இருந்தால் முன்னேற முடியாது என்பதால் மேற்குலகின் உதவியை உக்ரைன் எதிர்பார்க்கிறது.

ஐரோப்பிய நாடுகளுடன் பொருளாதார, வர்த்தக உடன்படிக்கை செய்வதற்கு உக்ரைன் ஜனாதிபதி யனுகோவிச் விரும்புகிறார். அதற்குரிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. உக்ரைன் மக்கள் மேற்குலக நாடுகளுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மேற்குலக நாடுகளின் உதவியால் ஒப்பந்தம் செய்தால் உக்ரைனின் அரசியல் பொருளாதாரம் வளர்ச்சியடையும் என எண்ணிய ஜனாதிபதி யனுகோவிச் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்குத் தயாரானார். இதனை அறிந்த ரஷ்ய ஜனாதிபதி புடின் ருத்திரதாண்டவம் ஆடினார்.

ரஷ்யாவுடன் செய்துகொண்ட வர்த்தக, பொருளாதார ஒப்பந்தக் கடன்களின் முதலையும், வட்டியையும் உடனடியாகத் தந்துவிட்டு ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பந்தம் செய்யும்படி ரஷ்யா தெரிவித்தது. ரஷ்யாவின் நெருக்கடியால் ஐரோப்பிய நாடுகளுடனான ஒப்பந்தங்களில் இருந்து யனுகோவிச் பின்வாங்கினார். இதன் காரணமாக யனுகோவுச்சுக்கு எதிராக உக்ரைனில் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் நடைபெறுகின்றன.

மேற்குலக நாடுகளுடன் உக்ரைன் நெருங்கினால் அரசியல் ரீதியாகவும், இரா ணுவ ரீதியாகவும் ரஷ்யாவுக்குப் பாதிப்பு ஏற்படும். ரஷ்யாவின் பிடியில் இருந்து உக்ரைன் நழுவிவிட்டால், கருங்கடல் பகுதியில் ரஷ்யக் கடற் படைக்கு மிகப் பெரிய பின்னடைவு ஏற்படும். பல்வேறு நாடுகளுக்கு உக்ரைன் வழியாகச் செல்லும் இயற்கை நிலவாயு, எண்ணெய்க் குழாய்ப் பாதைகளை ரஷ்யா இழக்க நேரும். எனவே உக்ரேனை மிரட்டிப் பணிய வைக்க ரஷ்யா முயற்சிக்கிறது.

ரஷ்ய- உக்ரனை எல்லையில் போர் மூண்டால் யுத்தத்தில் பங்குபற்றாத பல நாடுகளின் பொருளாதாரம் பாதிக்கப்படும். அரபு நாடுகளைப் போல் ரஷ்ய அரசுக்கும் பெரும் பகுதி வருமானம் கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு விற்பனை வாயிலாகவே கிடைக்கிறது. உலகின் மூன்றாவது பெரிய கச்சா எண்ணெய் உற்பத்தி நாடாக இருக்கும் ரஷ்யா உக்ரைன் மீது போர் தொடுத்தால் அமெரிக்கா, இங்கிலாந்து உட்படப் பல வல்லரசு நாடுகள் வர்த்தகத் தடை விதிக்கப் போவதாக என எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையில் கடந்த அமர்வில் கச்சா எண்ணெய் விலை 7 வருட உச்சத்தினை எட்டியது. இது பரலுக்கு 96 டொலருக்கு அதிகமாக உயர்ந்தது. கச்சா எண்ணெய், எரிவாயு ஆகியவற்றுக்காக ரஷ்யாவை எதிர்பார்க்கும் நாடுகள் மேலும் பாதிப்படையலாம்.

ரஷ்ய அரசின் மிகப்பெரிய எண்ணெய் நிறுவனமான றொச்னெட், சீன அரசு கட்டுப்பாட்டில் இயங்கும் சீனா நஷனல் பெட்ரோலியம் கோர்பரேஷன் உடன் சுமார் 80 பில்லியன் டொலர் மதிப்பிலான 100 மில்லியன் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் பெற 10 வருட ஒப்பந்தத்தை பெப்ரவரி 4 ஆம் திகதி செய்துள்ளது.

ரஷ்யா - சீனா ஆகியவற்றுக்கு இடையில் செய்யப்பட்ட இந்த ஒப்பந்தம் மூலம் இரு நாடுகள் மத்தியிலான வர்த்தகம் அதிகரிப்பது மட்டும் அல்லாமல் நட்புறவும் பெரிய அளவில் மேம்படும். 80 பில்லியன் டொலர் கச்சா எண்ணெய் ஒப்பந்தம் மூலம் பொருளாதாரத் தடை விதித்தாலும் வருமான இழப்பைச் சமாளித்துக்கொள்ள முடியும் என்பது ரஷ்யாவின் எண்ணம்.

எங்களைவிட்டுப் பிரிந்துசென்றால், கடுமையான பொருளாதார, வர்த்தகத் தடைகளுக்கு உள்ளாக நேரும் என்று உக்ரனை, ரஷ்யா கடுமையாக எச்சரித்திருக்கிறது. அப்படிப் போகாமல் ரஷ்யாவுடனேயே தொடர்பை நீடித்தால், கோடிக் கணக்கான ரூபிள்களைச் செலவழிக்கத் தயார் என்று ஆசைகாட்டுகிறது. உக்ரைனை இப்போது இழுக்க முற்படுவதைப் போலவே முன்னரும் ஐரோப்பிய நாடுகள் முயன்றன. ஆனால், அரைகுறையான இந்த முயற்சிகளால் நன்மை ஏற்படாது என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் பிரேக் நகரில் 2009 இல் கூடி, சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் வர்த்தக உறவை வைத்துக்கொள்ள விரும்புவதாக அறிவித்தனர். அப்படி அறிவித்த உடனேயே ரஷ்யா அதை வன்மையாகக் கண்டித்தது. வர்த்தக உறவு என்ற பெயரில், இந்த நாடுகளைப் பிரித்து தனக்கு எதிராகத் திருப்பி விட மேற்கத்திய ஐரோப்பிய நாடுகள் சதிசெய்கின்றன என்று சாடியது. இந்த வர்த்தக ஒப்பந்தம் ரஷ்யாவுக்கு எதிரானது என்று அப்போது அதிபராக இருந்த மெத்வதேவ் வன்மையாகக் கண்டித்தார்.

அந்த மாதம் 'நேட்டோ' நாடுகள் தங்களுடைய ராணுவப் போர் ஒத்திகையை ஜார்ஜியா நாட்டில் நடத்தின. அந்த நாடும் சோவியத் ஒன்றியத்தின் அங்கமாக இருந்து விடுதலையான நாடுதான்.

"இந்த நாடுகள் அரசியல்ரீதியாக நிலையான ஆட்சியின் கீழ் வருவதும் வளம் பெறுவதும், வெளிப்படையான பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதும் ரஷ்யாவுக்கும் ஐரோப்பாவுக்கும் நன்மை பயக்கும்" என்று ஐரோப்பிய நாடுகளின் வெளியுறவுக் கொள்கைத் துறைத் தலைவர் ஜாவியர் சோலனா அப்போது சுட்டிக்காட்டினார்.

உக்ரைனைத் தங்கள் பக்கம் கொண்டுவர அதற்குத் தேவைப்படும் நிதியுதவியை அளிக்க பன்னாட்டுச் செலாவணி நிதியத்திடம் பேசுகின்றனர் ஐரோப்பியத் தலைவர்கள். ஆனால், அதில் வேகம் போதவில்லை. அதே சமயம், புடினைச் சந்திக்கவிருக்கும் யனுகோவிச் தங்கள் நாட்டுக்குத் தேவைப்படும் உதவிகளையும் சலுகைகளையும் அதிகம் வலியுறுத்துவார் என்று தெரிகிறது.

யனுகோவிச்சுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்வது ஒருபக்கம் இருக்கும் அதே வேளையில், நாட்டின் பெரிய தொழிலதிபர்களும் அவர்களுக்கு ஆதரவாக இறங்கியிருக்கிறார்கள். உக்ரைன் அரசின் ஊழலும் தொழில் - வர்த்தகத்தில் அரசின் தலையீடும் அவர்களைக் கோபப்படுத்தியிருக்கிறது. அத்துடன் தங்களுடைய வீடுகளிலும் அலுவலகங்களிலும் திடீர் திடீரென சோதனை போட்டுத் துன்புறுத்துவதையும் அவர்கள் விரும்பவில்லை.

ரஷ்யா உதவிகளைச் செய்தாலும் அந்தக் கடன்களுக்கு அநியாய வட்டி செலுத்த வேண்டியிருப்பதாக உக்ரைன் அரசு உயரதிகாரிகளே தெரிவிக்கின்றனர். எனவே, குறைந்த வட்டிக்கு வேறு யாராவது கடன் கொடுத்தால், உக்ரைன் மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் செல்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்கிறார்கள். பன்னாட்டுச் செலாவணி நிதியம் கடன் கொடுத்தாலும், அவர்கள் விரும்பும் பொருளாதாரச் சீர்திருத்தங்களை உக்ரைன் அரசு வேகமாகச் செய்யும் என்பதற்கு நிச்சயமில்லை. எனவே, கடன் கொடுப்பதும் ஆபத்துதான் என்ற எண்ணமும் வங்கித் தலைவர்களிடம் இருக்கிறது.

ரஷ்ய - உக்ரைன் எல்லை பகுதிக்கு 100க்கும் அதிகமான இராணுவ டாங்குகள் சாலையில் செல்லும் வீடியோ சமீபத்தில் வைரலானது. ஒரு லட்சத்துக்கும் அதிக வீரர்கள் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் போருக்கு ரஷ்யா வழிவகுக்கிறது என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவைக் கண்டித்து வருகின்றன. ஆனால் ரஷ்யா, பயிற்சிக்குத்தான் படைகளை குவித்துள்ளதாகவும், போர் தொடுக்கும் எண் ணம் இல்லை எனவும் மறுத்து வருகிறது. இருப்பினும் தொடர்ந்து போர் பதற்றம் நிலவி வருகிறது. இது தொடர்பான செயற்கைக்கோள் படங்கள் வெளியாகி பதற்றத்தை இன்னும் அதிகரித்துள்ளன. இந்நிலையில்தான் உக்ரைன் எல்லையில் ரஷ்யா குவித்துள்ள படைகள் குறித்த படங்கள் வெளியாகி உள்ளன. மேக்சர் நிறுவன (Maxar) உயர்தொழில்நுட்பத்திறன் கொண்ட செயற்கைக்கோள் பெலாரஸ், கிரிமியா, மேற்கு ரஷ்யாவில் படம் எடுத்துள்ளன. இதில் ரஷ்யப் படைகள் ஏராளமாக குவிக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. இதன்மூலம் தரைவழி, வான்வெளி தாக்குதலுக்கு தயார் நிலையில் ரஷ்யா இருப்பது உறுதியாகி உள்ளது. மேலும் பெரும்பாலான படைகள் உக்ரைனின் வடக்கு, வடகிழக்குப் பகுதிகளை நோக்கி உள்ளது. மேலும் உக்ரைன் தென்கிழக்கு, கிரிமியாவில் அதிகளவில் ஹெலிகாப்டர்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

உக்ரைன் மட்டுமல்ல, சோவியத் ஒன்றியத்தில் முன்னர் இருந்த மால்டா, ஜோர்ஜியா ஆகியவற்றுடனும் வர்த்தக உறவுகளை வளர்த்துக்கொள்ள மேற்கு ஐரோப்பிய நாடுகள் விரும்புகின்றன. உக்ரைனில் இப்போது நடக்கும் கிளர்ச்சி வெறும் வர்த்தக உறவுக்காக மட்டுமல்ல, அரசியல், ராணுவக் காரணங்களுக்காகவும் என்பதே உண்மை. இந்தக் கிளர்ச்சியை யார் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். ■

“மேற்குலக நாடுகளுடன் உக்ரைன் நெருங்கினால் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் ரஷ்யாவுக்கு பாதிப்பு ஏற்படும். ரஷ்யாவின் பிடியில் இருந்து உக்ரைன் நழுவிவிட்டால், கருங்கடல் பகுதியில் ரஷ்யக் கடற்படைக்கு மிகப் பெரிய பின்னடைவு ஏற்படும். பல்வேறு நாடுகளுக்கு உக்ரைன் வழியாகச் செல்லும் இயற்கை நிலவாயு, எண்ணெய்க் குழாய்ப் பாதைகளை ரஷ்யா இழக்க நேரும். எனவே உக்ரைனை மிரட்டிப் பணிய வைக்க ரஷ்யா முயற்சிக்கிறது. ரஷ்ய - உக்ரைனை எல்லையில் போர் மூண்டால் யுத்தத்தில் பங்குபற்றாத பல நாடுகளின் பொருளாதாரம் பாதிக்கப்படும். அரபு நாடுகளைப் போல் ரஷ்ய அரசுக்கும் பெரும் பகுதி வருமானம் கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு விற்பனை வாயிலாகவே கிடைக்கிறது. உலகின் மூன்றாவது பெரிய கச்சா எண்ணெய் உற்பத்தி நாடாக இருக்கும் ரஷ்யா உக்ரைன் மீது போர் தொடுத்தால் அமெரிக்கா, இங்கிலாந்து உட்படப் பல வல்லரசு நாடுகள் வர்த்தகத் தடை விதிக்கப்போவதாக என எச்சரிக்கை விடுத்துள்ளது.”

# உக்ரைன் கொதிநிலையைப் பயன்படுத்தி ஐரோப்பிய உறவைப் பலப்படுத்துகிறாரா புடின்?

**ஐ.வி.மகாசேனன்**

ரஷ்ய-உக்ரைன் விவகாரம் மூன்றாம் உலகப் போராக மூழுமா என்பதே சர்வதேச அரசியல் பரப்பை நிரப்பி உள்ள செய்தியாகும். ஆரம்பத்திலிருந்து ரஷ்யப் போருக்கான எவ்வித ஆர்வமும் தம்மிடம் காணப்படவில்லையென தெரிவித்துவந்தபோதிலும் தொடர்ச்சியான கூட்டு இராணுவ பயிற்சிகளை மேற்கொள்வதுடன், உக்ரைன் எல்லையில் ரஷ்ய நிலப்பரப்பில் இராணுவ துருப்புக்களை அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. அது தமது உள்ளக பாதுகாப்புக்கான இராணுவப்பயிற்சியாகவே தெரிவிக்கப்படுகின்றது. மறுதலையாக அமெரிக்கா போருக்கான அபாய அச்சுறுத்தல்களை தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றது. அதன் உச்சகட்டமாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பெப்ரவரி-16 ரஷ்யா உக்ரைன் மீது தாக்குதலை நிகழ்த்தும் என்ற திகதியையும் அறிவித்திருந்தார். அவ்வாறே பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சனும் அமெரிக்காவின் கருத்தை ஆதரித்து ரஷ்யா உக்ரைன் மீது நிச்சயம் போர் நிகழ்த்துமென அழுத்தமாகத் தெரிவித்து வருகின்றது. ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளும் அச்சத்தின் காரணமாக உக்ரைனிலிருந்து தமது மக்களை மீள அழைத்த போதிலும் போரைத் தணிப்பதற்கான பேச்சு வார்த்தையில் முழுவீச்சில் களமிறங்கியுள்ளனர். இக்கட்டுரை ரஷ்யா-உக்ரைன் விவகாரத்தை அமெரிக்க-பிரித்தானியக் கூட்டு மற்றும் ஜேர்மன், பிரான்ஸ் முதலிய ஐரோப்பிய நாடுகளும் நோக்கும் அரசியல் பார்வையை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ ஆகிய அமைப்புக்களில் அங்கத்துவம் வகிப்பதுடன் தீர்மானிக்கும் சக்தியாகவும் திகழும் பிரதான இரண்டு நாடுகளின் தலைவர்கள் அமெரிக்காவை விட ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் பேசுவதனை முதன்மையாய் கொண்டு செயற்பட்டுள்ளனர். அந்தச் சந்திப்பில் உக்ரைனுடனான ரஷ்யாவின் பதற்றங்களைத் தணிக்க ரஷ்ய தலைவரை வற்புறுத்தியுள்ளனர். பெப்ரவரி-07 அன்று புடினுடன் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் சந்திப்பை மேற்கொண்டிருந்தார். டிசம்பரில் ரஷ்ய-உக்ரைன் நெருக்கடி தொடங்கியதில் இருந்து புதினை சந்தித்த முதல் மேற்கத்திய அரச தலைவராக மக்ரோன் காணப்படுகின்றார். நெருக்கடியான சூழலில் மாஸ்கோவிற்கு வந்ததற்காக பிரான்ஸ் தலைவருக்கு பலமுறை நன்றி தெரிவித்த புடின், ஒரு கூட்டுப் பத்திரிகையாளர் சந்திப்பில் மக்ரோன் ஆய்வுக்குரிய பல யோசனைகளை முன்வைத்ததாகக் கூறினார்.

பிரான்ஸ் ஜனாதிபதியினை தொடர்ந்து பெப்ரவரி-15 அன்று ஜேர்மன் தலைவர் ஓலாஃப் ஷோல்ஸ் மாஸ்கோவிற்கு விஜயம் செய்து வளர்ந்து வரும் உக்ரைன் விவகாரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க புடினுடனான சந்திப்பில் முயற்சித்தார். குறித்த சந்திப்பின் நிறைவில் ஊடகவியலாளர் சந்திப்பில் புடின், “நாங்கள் மேலும் இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கிறோம். நாங்கள் பேச்சு வார்த்தைப் பாதையில் செல்ல தயாராக இருக்கிறோம்” என்று கூறினார். மேலும், “ஜேர்மனி ரஷ்யாவின் மிக முக்கியமான பங்காளிகளில் ஒன்றாகும். பேர்லினுடன் மேலும் ஒத்துழைக்க விரும்புவதாக” புடின் குறிப்பிட்டிருந்தார். சீனாவிற்கு அடுத்தபடியாக ரஷ்யாவின் இரண்டாவது பெரிய வர்த்தக பங்காளியாக ஜேர்மனி இருப்பதால், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளின் பங்கை அவர் வலியுறுத்தினார்.

> **“ரஷ்ய-உக்ரைன் போர்க் கொதிநிலை ஐரோப்பாவை தகர்த்துவிடும் என்ற பதற்றமே பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியின் இராஜதந்திர நகர்வுகளுக்குப் பிரதான காரணமாகிறது. அரசுகளிடையேயான நெருக்கடியில் ஒரு பயனுள்ள ஐக்கிய ஐரோப்பிய ஒன்றிய முன்னணியை உருவாக்க முடியவில்லை என்றாலும், ரஷ்யாவை நோக்கி மிகவும் மோசமான அணுகுமுறையைக் கொண்ட அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது இரு நாடுகளும் மாஸ்கோவுடன் அதிக இராஜதந்திரத்தை நாடுகின்றன. அவ்இராஜதந்திர நகர்வுகள் பயனுள்ள போக்குகளையே வெளிப்படுத்தி வருகின்றது.”**

பிரான்ஸூம் ஜேர்மனியும் முன்னணி ஐரோப்பிய ஒன்றிய நாடுகளாகும். அவை கீவ், மாஸ்கோ ஆகியவற்றுக்கு இடையே பதற்றங்களை அமைதிப்படுத்த அவற்றின் சொந்தக் காரணங்களைக் கொண்டுள்ளன. ரஷ்ய-உக்ரைனிடையே போர் ஏற்படுமாயின் நேரடி பாதிப்பிற்குள்ளாகும் பிராந்தியமாக ஐரோப்பாவே காணப்படுகின்றது. அத்துடன் ரஷ்யா-உக்ரைன் போரானது மூன்றாம் உலகப்போராகவே அமையக்கூடியதாகும். இரண்டாம் உலகப்போரின் விளைவுகளிலிருந்து பாடங்கற்றுள்ள ஐரோப்பா மீளவொரு போர் என்பதை முழுமையாக நிராகரிக்கவே பிரயத்தனங்களை மேற்கொள்கிறது. புடினுடன் சந்திப்பினை மேற்கொண்ட இரு ஐரோப்பியத் தலைவர்களுமே ஐரோப்பாவின் போர் பதற்றம் பற்றிய உரையாடல்களையே முதன்மைப்படுத்தினார்கள். மக்ரோனுக்கும் புடினுக்குமிடையிலான சந்திப்பில், “ரஷ்யாவிற்கு பாதுகாப்பு இல்லை என்றால் ஐரோப்பியர்களுக்கு பாதுகாப்பு இல்லை” என்று மக்ரோன் வலியுறுத்தி இருந்தார். புடின், ஐரோப்பாவின் பாதுகாப்பு நிலைமை குறித்து மாஸ்கோவிற்கும் பாரிஸூக்கும் பொதுவான கவலைகள் இருப்பதாகக் கூறினார். அவ்வாறே ஜேர்மன் சான்சலர் ஷோல்ஸ் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி புடினிடையேயான சந்திப்பிற்குப் பிறகு இடம்பெற்ற செய்தியாளர் கூட்டத்தில் ஷோல்ஸ், “அரசாங்கத் தலைவர்களாகிய நமது முழுமையான கடமை, ஐரோப்பிய போராக விரிவடைவதைக் காணவில்லை” என்றார். மேலும், ஸ்திரத்தன்மையை முன்னோக்கி நகர்த்துவதற்கு ரஷ்ய மற்றும் ஜேர்மனியின் ஐரோப்பிய பங்காளிகளுக்கு இடையே உயர்மட்ட உரையாடல் அவசியம் என்று ஷோல்ஸ் கூறினார்.

ரஷ்ய-உக்ரைன் போர்க் கொதிநிலை ஐரோப்பாவைத் தகர்த்துவிடும் என்ற பதற்றமே பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியின் இராஜதந்திர நகர்வுகளுக்கு பிரதான காரணமாகிறது. அரசுகளிடையேயான நெருக்கடியில் ஒரு பயனுள்ள ஐக்கிய ஐரோப்பிய ஒன்றிய முன்னணியை உருவாக்க முடியவில்லை என்றாலும், ரஷ்யாவை நோக்கி மிகவும் மோசமான அணுகுமுறையைக் கொண்ட அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது இரு நாடுகளும் மாஸ்கோவுடன் அதிக இராஜதந்திரத்தை நாடுகின்றன. அவ் இராஜ தந்திர நகர்வுகள் பயனுள்ள போக்குகளையே வெளிப்படுத்தி வருகின்றது.



ஜேர்மன் தலைவருடனான சந்திப்புக்களின் பின் உக்ரைன் எல்லையில் துருப்புகளைக் குறைப்பதாக மொஸ்கோ அறிவித்துள்ளது. எக்கணமும் போர் வெடிக்கும் என்ற மேற்குலகப் பிரசாரங்களுக்குப் பதிலடி, உக்ரைன் எல்லையில் குவித்த படையினரில் ஒரு பிரிவினரைத் தளங்களுக்குத்திருப்பி அழைப்பதாக ரஷ்யா பெப்ரவரி-15 அன்று தெரிவித்திருக்கிறது. கடந்த பல நாட்களாக நீடிக்கின்ற போர் பதற்றத்துக்கு மத்தியில் முதல் முறையாக இவ்வாறு படைக்குறைப்பு அறிவிப்பை கிரெம்ளின் வெளியிட்டிருக்கிறது. ரஷ்யா உக்ரைனை பெப்ரவரி-16அன்று ஆக்கிரமிக்கும் என்று அமெரிக்கத் தலைவர்களும், அடுத்த 48 மணிநேரத்தில் போர் வெடிக்கலாம் என்று இங்கிலாந்துப்பிரதமர் பொறிஸ் ஜோன்சனும் அடித்துக்கூறியிருந்த நிலையில் அதற்கு மாறாகப் பதற்றத்தைத் தணிக்கின்ற நடவடிக்கையில் ரஷ்யா இறங்கியிருப்பது அவதானிகளை ஆச்சரியத்துக்குள்ளாக்கி இருக்கிறது. “இதில் புதிதாக ஒன்றும் இல்லை. போர்ப்பயிற்சி ஒத்திகை முடிவடைந்தவுடன் படைகளைத் தளங்களுக்குத் திருப்பி அழைப்போம் என்று நாங்கள் ஏற்கெனவே கூறிவந்தோம். இது ஒரு வழமையான நடவடிக்கை” என்று கிரெம்ளின் பேச்சாளர் திமித்ரி பெஸ்கோவ் செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார். எனினும் பெப்ரவரி-16 அன்று உக்ரைன் எல்லையில் ரஷ்யா 7,000 துருப்புக்களை தனது படைகளில் சேர்த்துள்ளதாகவும் இது உண்மையில் தனது துருப்புக்களை பின்வாங்கிவிட்டது என்ற ரஷ்யாவின் கூற்றுக்கு நேர் மாறாக உள்ளதெனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. அமெரிக்க செயலர் ஆண்டனி பிளிங்கன் “ரஷ்யா சொல்வதற்கும் அது செய்வதற்கும் வித்தியாசம் உள்ளது” என்று கூறினார்.

எவ்வாறாயினும் ஐரோப்பியத் தலைவர்களுடனான சந்திப்பின் பின்னராகத் துருப்புக்களை குறைப்பதாக மொஸ்கோ அறிவித்தல்விடுவது ஐரோப்பிய நாடுகளுக்கான இணக்க சமிக்ஞையாகவே காணப்படுகிறது. ரஷ்யா ஐரோப்பா பிராந்தியத்துடன் இணக்கமாக செல்வதற்கான எண்ணங்களையே பிரதிபலிக்கிறது. குறிப்பாக, ரஷ்ய ஊடகங்களால் பெப்ரவரி-14 அன்று வெளியிடப்பட்ட ஒரு வீடியோவில், புடின் வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவிடம், “மேற்கத்திய நாடுகளுடன் ஒரு உடன்பாட்டை எட்ட வாய்ப்பு உள்ளதா? அல்லது மேற்கத்திய அதிகாரிகள் காலப்போக்கில் ஸ்தம்பிக்கிறார்களா?” என்று கேட்கிறார். லாவ்ரோவ், “எப்போதும் ஒரு வாய்ப்பு உள்ளது” என்று பதிலளித்தார். இது ஐரோப்பிய பிராந்தியத்துடன் இணக்கமாகச் செல்வதற்கான புடினின் ஈடுபாட்டையே வெளிப்படுத்தி நிற்கிறது.

ரஷ்ய-உக்ரைன் போரின் நேரடி வடுக்களை சுமக்கக்கூடியதான ஐரோப்பா பதற்றத்தைத் தணிக்கவே கடுமையான இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றது. எனினும் அமெரிக்க மற்றும் பிரித்தானியா, போருக்கான சீண்டல்களை ரஷ்யாவுடன் மேற்கொண்டு வருகின்றனர். எனினும் அமெரிக்க மக்கள் உக்ரைன்-ரஷ்ய விவகாரத்தில் அமெரிக்கப் படைக்குவிப்பை ஏற்றுக் கொள்வார்களா? என்பது சந்தேகத்திற்குரியதாகவே காணப்படுகிறது. ரஷ்யாவின் போர் எத்தணிப்பு தொடர்பாகத் தொடர்ச்சியாக எச்சரிக்கைகளை முன்வைப்பதுடன், போரில் அமெரிக்காவின் ஈடுபாட்டை தெரிவித்துவரும் பைடன் அமெரிக்க மக்களிடம் ஆதரவைப் பெற வேண்டிய தேவை காணப்படுகிறது. ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியமைக்கு அமெரிக்க மக்கள் போர் மீது வெளிப்படுத்திய எதிர்ப்புணர்வுகளே காரணமாகும். இந்நிலையில், உக்ரைனில் ரஷ்ய படையெடுப்பு அமெரிக்கர்களைக் காயப்படுத்தும் என்று பைடன் கூறுகிறார். 150,000 ரஷ்யத் துருப்புக்கள் உக்ரைனின் எல்லைகளைச் சுற்றி வருவதால், எந்த நாளிலும் ஒரு பெரிய படையெடுப்பு நடக்கலாம் என்று அமெரிக்க அதிகாரிகள் எச்சரித்துள்ள நிலையில், ஜனாதிபதி பைடன் அமெரிக்க மக்களுக்கு சமிக்ஞை செய்துள்ளார். “ரஷ்யா படையெடுக்க முடிவு செய்தால், அது உள்நாட்டிலும் விளைவுகளை ஏற்படுத்தும். ஆனால் அமெரிக்க மக்கள் ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாப்பது ஒருபோதும் செலவில்லாமல் இல்லை என்பதைப் புரிந்து கொள்கிறார்கள். இது வலியற்றதாக இருக்கும் என்று நான் நடிக்க மாட்டேன்” என்று பைடன் பெப்ரவரி - 15 அன்று ஒரு உரையில் குறிப்பிட்டுள்ளார். இது மக்கள் ஆணையை பெறுவதற்கான எத்தணிப்பாகவே காணப்படுகிறது. எனினும் சமீபத்தில் அமெரிக்க மக்கள் தமது வீரர்கள் வேறு தேசங்களில் சென்று போர் புரிவதையும் உயிர்த் தியாகம் செய்வதையும் விரும்பாத நிலையிலேயே உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே ரஷ்ய-உக்ரைன் போரில் பைடன் தமது துருப்புக்களை இறக்கி, எதிரான விளைவுகளை எதிர்கொள்வாராயின் அது பைடனுக்கு மாத்திரமின்றி ஜனநாயகக் கட்சியின் அரசியலுக்கும் ஆபத்தானதாகவே அமையக்கூடியதாகும்.

எனவே, ரஷ்ய-உக்ரைன் விவகாரமானது அதிகம் நெருக்கடிச் சூழலுடனேயே கடந்து செல்லக்கூடியதான வாய்ப்புக்களையே அவதானிக்கக்கூடியதாக உள்ளது. உக்ரைன் விவகாரத்தை பயன்படுத்தி ரஷ்யா, ஐரோப்பாவுடன் வலுவான உறவைக் கட்டமைக்க முயலுகிறது. புடினுக்கு நெருக்கமானவர் என்று கருதப்படும் ரஷ்யப் பத்திரிகையாளர் அன்ட்ரூ கொலெஸ்னிகோவ் (Andrei Kolesnikov) ஜேர்மன் சான்சிலர் ஓலாஃப் ஸ்கோல்ஸூடன் புடினின் சந்திப்பு நடத்தையை மதிப்பீடு செய்துள்ளார். அதில் அவர், ரஷ்ய தலைவர் குறித்த, செய்தியாளர் மாநாட்டில் போர் அச்சுறுத்தல் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. அதற்கு பதிலாக உக்ரைன் வழியாக ஐரோப்பிய எரிவாயு விநியோகம் பற்றி அவ்வளவு உள் அமைதியுடன் பேசுகையில், ஒரு எளிதான முடிவை அடைய முடியும் என்கின்றார். அதாவது, “அவர் உண்மையில் எந்தப் படையெடுப்பையும் பற்றி தீவிரமாகச் சிந்திக்கவில்லை.” எனக்குறிப்பிடுகின்றார். அவ்வாறே ரஷ்ய நோக்கங்கள் இன்னும் தெளிவாக இல்லை என்று சர்வதேச நெருக்கடிக் குழுவில் ரஷ்யா மற்றும் மத்திய ஆசியாவிற்கான திட்ட இயக்குனர் ஓல்கா ஒலிகர் வெளியுறவுக் கொள்கை (Foreign Policy) செய்தித்தளத்துக்கு தெரிவித்தார். ஒருவிதச் சலுகையை முதலில் வெல்லாமல் ரஷ்யா படைகளை அகற்றுவது சாத்தியமில்லை என்பது தெளிவாகிறது. “நீங்கள் ரஷ்யாவாக இருந்தால் அழுத்தத்தை வைத்து நீங்கள் எதைப் பெற முடியும் என்பதைப் பார்ப்பதற்கு ஒரு குறிப்பிட்ட தர்க்கம் உள்ளது” என்று ஒலிக்கர் கூறினார். அதுவே நிதர்சனமான பார்வையாகவும் புலப்படுகிறது. புடின் கொதிநிலையை பயன்படுத்தித் தன் இலக்குகளை அடைவதற்கான நகர்வுகளை முன்னெடுக்கின்றமையையே அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ■

தற்போது தமிழ்ச் சமூகத்தைச்சுற்றி என்ன நடக்கின்றது? அண்மையில் தமிழ் முற்போக்கு கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்ததாக ஊடகங்களில் செய்திகள் வந்திருந்தன.

"இந்த அரசாங்கம் இன்று தமிழ்மக்களை மட்டுமல்ல உலக நாடுகளையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது. அந்த விடயத்தை அம்பலப்படுத்தி இலங்கை அரசாங்கத்தைச் சந்திக்கு இழுக்கவேண்டும் என்றுதான் இந்த முயற்சி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இலங்கைத் தமிழரசுக்கட்சி உள்ளே வந்து, ஆரம்ப நோக்கங்களைப் புரிந்து கொள்ளாது, இராஜதந்திர அணுகுமுறைகளை விளங்கிக்கொள்ளாது தலையீடு செய்தமையே வெளியேறவேண்டிய சூழலை ஏற்படுத்தியது.

இலங்கையில் வாழும் தமிழ்பேசும் மக்கள் சார்பான ஆவணமாகத்தான் ஆரம்பத்தில் கருதப்பட்டது. அப்படி உணர்ந்துதான் நானும் நண்பர் ரவூப் கக்கீமும் சென்றிருந்தோம். ஈழத்தமிழர்களும் மலையகத் தமிழர்களும் முஸ்லிம்களும் என மூன்று தரப்பும் ஒன்றாக, தமிழ்பேசும் தரப்பாக ஒன்றிணைந்தமை முக்கியமானதாகும். சமகாலத்தில் ஏற்பட்ட முக்கிய விடயமாக இது அமைந்திருந்தது.

இதனைத் தமிழரசுக்கட்சியினர் உணர்ந்துகொள்ள மறந்துவிட்டனர். "13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள்" என இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு வலியுறுத்தும் ஒன்றரைப் பக்க ஆவணம் தயார் செய்யப்பட்டது.

யான சனத்தொகைக் கட்டமைப்பினை மாற்றியமைப்பதற்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்கள் அமைதியாக, ஆமையாக முன்னேறிக்கொண்டே இருக்கின்றன.

2050 களில் தன்னியல்பாகவும் அபிவிருத்தியின்பால் தூண்டப்பட்டதுமான சனத்தொகை நகர்வு காரணமாகவும் வடக்குக் கிழக்கில் தமிழ்வாக்காளர்களின் எண்ணிக்கையினை மிஞ்சியதாக ஏனைய இனங்களின் வாக்குப்பலம் அதிகரித்துக் காணப்படும். இது பாராளுமன்றத்திற்கான பிரதிநிதித்துவத்தை மட்டுமன்றி மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் ஆகியவற்றிலும் இழப்புக்களை மட்டுமல்ல தலைமைத்துவத்தையும் கூடத் தாரைவார்த்து கொடுத்து விட்டு பார்வையாளராக இருக்கின்ற நிலைமையினைத் தோற்றுவிக்கும்.

மேற்கூறிய நிலைமைகளை எதிர்கொள்ளக் கூடியதாக ஈழத்தமிழர்களை மாற்றக்கூடிய தெரிவுகள் உண்டா எனத் தேடிப்பார்க்க வேண்டிய அதிநெருக்கடியான நேரத்தில் நாம் இருக்கின்றோம். எவ்வித காலவரை




மாகக் கட்டமைக்கும் முனைப்புக்களை வெற்றிகரமாகத் தொடர்வார்கள்.

**ஈழத்தமிழர்களின் முன்னுள்ள தெரிவுகள் யாது?**

நாங்கள் அனைவரும் ஒன்றுகூடி அமர்ந்து இந்த நிலைமைகளை மதிப்பீடு செய்ய முன்வரவேண்டும். அவ்வாறு ஒன்றுகூடி அமர்ந்து உரையாட மறுத்து நிற்பவர்களைப் புறந்தள்ளி ஏனையோரின் சிந்தனைத் தூண்டலுக்கு ஊடாக நிலைமைகளை மதிப்பிடவும் தெரிவுகளை அடையாளங்காணவும் தந்திரோபாயங்களை வகுக்கவும் திட்டங்களை முன்னெடுக்கவும் உட

# தமிழினம் அவலை நினைத்து உரலை இடிக்கின்றதா? இல்லை குடல்வற்றிச் செத்துப்போன கொக்காக மாறப்போகின்றதா?

இந்நிலையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி வந்தபின் அதன் நோக்கத்தை மாற்றி வடக்கு-கிழக்கில் வாழக்கூடிய ஈழத் தமிழர்களுக்கு உரித்தான விடயமாக மாற்றியிருந்தார்கள். இந்தப் பின்னணியில்தான் அந்த முயற்சியிலிருந்து நாம் வெளியேற வேண்டியிருந்தது" என்று கூறியிருந்தார்.

**வினா 1.** இலங்கையில் பல தசாப்தங்களாக புரையோடிப்போயுள்ள பிரச்சினை எது?

**வினா 2.** ஈழத்தமிழர்கள் என்று தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளும் தீவின் வடக்குக் கிழக்கு பிராந்தியத்தை தமது பாரம்பரியமாக உரிமைகோரும் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினை என்பது யாது?

**வினா 3.** முன்பு தமிழரசுக்கட்சியும் தமிழர் விடுதலைக்கூட்டணியும் முன்வைத்த அரசியல் கோசமான "ஆண்டபரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை" என்பதாக மீளவும் தமிழ் அரசபரம்பரையின் ஆட்சியதிகாரத்தைக் கட்டமைப்பதற்கான போராட்டம்தான் எங்கள் போராட்டமா?

**வினா 4.** 2019 இல் முள்ளிவாய்க்காலில் ஆயுதப் போராட்டம் மௌனித்துப்போன பின் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள், கொல்லப்பட்ட குடிமக்கள் ஆகியவர்கள் பற்றிய உண்மைத் தன்மையினை தேடுவதும் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதும் அதற்காக சர்வதேச நீதிமன்றில் நீதி தேடுவதும்தான் எமது உச்சபட்சக் குறிக்கோளாக மாற்றப்பட்டுள்ளதா?

**வினா 5.** இலங்கையில் அடுத்தடுத்து வந்த சிங்கள பௌத்த மேலாதிக்கவாத அரசாங்கங்களினால் இடையறாது முன்னெடுக்கப்பட்டுவந்த தமிழின அழிப்புச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரங்களுடன் கூடிய அதிகாரப்பங்கீடு ஒன்று கிடைக்குமானால் அதுவே தமிழ்மக்கள் எதிர்கொள்ளக்கூடிய ஒட்டுமொத்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமைந்துவிடுமா?

**வினா 6.** அதிகாரப்பங்கீட்டினை இலங்கைத்தீவில் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் தரவேண்டும், கடந்தகால அழிவுகளுக்கு நீதி சர்வதேசமும் ஐ.நாவும் தர வேண்டும், 13 ஆவது சரத்தின் அடிப்படையிலான மாகாணசபைகளுக்கான அதிகாரப் பரவலாக்கலின் முழுமையான அமுலாக்கத்திற்கு இந்தியா உத்தரவாதம் தரவேண்டும் என்றால் எங்கள் கடமை யாது? கடிதங்கள் எழுதுவதும் சர்வதேசத்திற்கு பிரார்த்தனைகள் செய்வதும் பருவகாலப் போராட்டங்கள் நடத்துவதும் உள்வீட்டுச் சண்டையில் சலிப்பில்லாமல் சேற்றினை வாரியிறைப்பதும்தான் எங்களுக்குள்ள தெரிவுகளா?

இலங்கையில் ஆட்சியாளர்கள் மிகவும் துல்லியமாகத் திட்டமிட்டுச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். தமிழின அழிப்புக்கான திட்டங்களை இடையறாது முன்னெடுப்பதற்கு அவர்களுக்கு கொரோனாப் பெருந்தொற்றும் பொருளாதார நெருக்கடியும் அந்நியச் செலாவணிப்பற்றாக்குறையும் தடையல்ல.

"இலங்கையின் பௌதிக அபிவிருத்தித் திட்டமிடல் 2050" என்ற ஆவணத்தில் முன்மொழியப்பட்ட திட்டங்கள் யாவும் குறிப்பாக வடக்குக் கிழக்கின் இனரீதி

> **புலமையும் தர்க்கமும் நியாயமும் உரிமைகளை தக்கவைப்பதற்கான வேட்கையும் இலக்குகளை அடைவதற்கான உறுதியும் சக தேசிய இனங்களையும் மதித்து இணைந்து வாழும் விருப்புரிமையும் மாற்றுத் தெரிவுகளுக்கு ஊடாக ஒடுக்குமுறையின் திட்டங்களைத் தகர்த்து எறிந்து மேலெழுவதும் எண்ணிக்கையில் நலிந்து போனாலும் தங்களின் அறிவாலும் ஆற்றலாலும் தங்களது புத்தாக்கம் மிக்க நிறுவனங்களின் மேலாண்மையாலும் ஏனைய தேசியஇனங்களுக்கு சமானமாக நிமிர்வோம், நிலைபெறுவோம் என்ற உறுதியும் இந்தக் கலந்துரையாடலுக்கான அடிப்படை நியமங்களாக இருக்கவேண்டும்.**

யறைக்குள்ளும் சாத்தியமான தீர்வுகளையோ நடவடிக்கைகளையோ நாங்கள் நம்பியிருக்கும் சர்வதேச சமூகமோ அல்லது பிராந்திய வல்லரசுகளோ சர்வதேச நிறுவனங்களோ தரப்போவதில்லை. அவர்களது முன்னுரிமைப் பட்டியலிலிருந்து இலங்கையின் இனப்பிரச்சினை பின் நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டே செல்கின்றது. பல நாடுகள் இலங்கையின்



இனப்பிரச்சினையினை மறந்து போய்விட்டன.

தற்போது கொதிநிலையில் உள்ள உக்ரைன் - ரஷ்யப் பிரச்சினை மேலும் கூர்மையடையுமாயின் எங்கள் மீதான குறைந்தபட்ச அக்கறையும் இழக்கப்படுவதற்கான வாய்ப்புகளே அதிகம். ஆனாலும் ஸ்ரீலங்காவின் ஆட்சியாளர்கள் தங்களது சட்டமுறையான ஆட்சிக்கு ஊடாகவும் அபிவிருத்தித் தந்திரோபாயங்கள் ஊடாகவும் இத்தீவினைச் சிங்கள பௌத்த தேச

னடியாக முன்வரவேண்டும். இது சில மணித்தியாலங்கள் அல்லது சில பாதி நாட்களாக மட்டுப்படுத்தப்படக்கூடாது.

தனியே அரசியல்வாதிகள் மட்டும் அமர்ந்து பேசிக்கலைவதாகவும் இருக்கக்கூடாது. அரசியல், சமூக, பொருளாதார விற்பன்னர்கள், சமூக அக்கறையாளர்கள், செயற்பாட்டாளர்கள் என அனைவரும் பொருத்தமான கலந்துரையாடல் அமர்வுகளுக்குள் உள்வாங்கப்படவேண்டும்.

புலமையும் தர்க்கமும் நியாயமும் உரிமைகளை தக்கவைப்பதற்கான வேட்கையும் இலக்குகளை அடைவதற்கான உறுதியும் சக தேசிய இனங்களையும் மதித்து இணைந்து வாழும் விருப்புரிமையும் மாற்றுத் தெரிவுகளுக்கு ஊடாக ஒடுக்குமுறையின் திட்டங்களைத் தகர்த்து எறிந்து மேலெழுவதும் எண்ணிக்கையில் நலிந்து போனாலும் தங்களின் அறிவாலும் ஆற்றலாலும் தங்களது புத்தாக்கம் மிக்க நிறுவனங்களின் மேலாண்மையாலும் ஏனைய தேசிய இனங்களுக்குச் சமானமாக நிமிர்வோம், நிலைபெறுவோம் என்ற உறுதியும் இந்தக் கலந்துரையாடலுக்கான அடிப்படை நியமங்களாக இருக்கவேண்டும்.

இந்தச் செயற்பட்டறை பல கட்டங்களாக முன்னெடுக்கப்படவேண்டும்.

**1.** இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினையினை எவ்வாறு ஈழத்தமிழரின் அல்லது வடக்குக் கிழக்கு தமிழரின் பிரச்சினைக்கும் அப்பால் எண்ணிக்கையில் சிறுபான்மையாகக் காணப்படும் தேசிய இனங்களான ஈழத்தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் ஆகியோர் சிங்கள பௌத்த பேரினப் பெரும்பான்மைவாத ஜனநாயகத்தின் இருண்ட பக்கங்களின் பிரச்சினையாக விளங்கிக்கொள்ளல்.

**2.** ஈழத்தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் ஆகியோர் தங்களை எவ்வாறு தந்திரோபாய வல்லமைகள் கொண்ட தேசிய இனமாக கட்டமைத்தலும் தங்களது பேரம்பேசும் ஆற்றலை எவ்வாறு கட்டியெழுப்பலும்.

**3.** இலங்கைத் தீவினை தங்கள் தாய்நாடாகக் கொண்டு இந்தத் தேசிய இனங்கள் தொடர்ந்து வாழவேண்டிய தற்போதைய யதார்த்தத்தில் தங்களையும் தங்களது சமூகப் பொருளாதார மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களை மேம்படுத்துவதன் மூலம் தங்களை இலங்கைத் தீவினுள்ளும் பிராந்தியத்தினுள்ளும் சர்வதேசப் பரப்பினுள்ளும் எவ்வாறு நிலைப்படுத்தலாம் என்ற தந்திரோபாயங்களைக் கண்டறிதலும் அதற்கான திட்டங்களை வகுத்தலும்.

**4.** சிங்கள பௌத்த சிந்தனையாளர்கள், செயற்பாட்டாளர்கள், கடும்போக்காளர்கள் மென்போக்காளர்கள் ஆகியோருடன் பரந்த தளத்தில் உரையாடல்களை வெளிப்படைத் தன்மையுடன் விரிவாக்கல்.

2022 மார்ச் - ஏப்ரல் மாதங்களை மையப்படுத்தியதாக இதற்கான ஆரம்ப முயற்சிகளை முன்னெடுப்பது சிறப்பாக அமைய முடியும். இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவோர் தங்களது வாக்கு வங்கி அரசியல் மற்றும் கட்சிசார் அரசியல் நிலைப்பாடுகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு இத்தகைய செயற்பட்டறையில் இணைவது அவசியமானது. ■

# இரத்த ஓட்டம் கூடிக் குறையும்போது உடலில் ஏற்படும் பாதிப்புக்கள்

பைஷல் இஸ்மாயில்



**குருதி அனல்வாதம் என்றால் என்ன?**

இரத்தக்கொதிப்பை தமிழில் குருதி அனல்வாதமென்றும், ஆங்கிலத்தில் ஹைபெர்டென்சன் (Hypertension) என்றும் அழைக்கின்றனர். மேலும், இரத்தச்சூடு, இரத்த அழுத்தம், இரத்த மிகுதி, இரத்த அமுக்கம், இரத்தப் பெருக்கம், இரத்தாதிக்கம், நரம்பிறுக்கம், நாடி இறக்கம் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படும். அதாவது, காரணம் கண்டுபிடிக்க முடியாத மிகையான இரத்தழுத்தம் என்பது இதன் பொருளாகும். உணர்ச்சிகள் கட்டுப்பாடற்று கொந்தளிப்பு அடையும்போது இரத்த ஓட்டம் தடைப்படும் நிலையில், மூளையின் சில பகுதிகளுக்கு பிராணவாயு சரியான முறையில் கிடைக்காமல் மூளையின் செயற்பாட்டு விசை நரம்புகள் செயல் இழக்கின்றன. இந்த உணர்ச்சி அலைமோதல் எல்லையை கடக்கும் நிலையில் இரத்த அழுத்தம் ஏற்படுகிறது.

பொதுவாக, இன்றைய அவசரக் குழப்பமயமான வாழ்க்கை முறையே இந்நோய் ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்றது. இதனை இன்னுமொரு முறையில் கூறப்போனால், எமக்கு ஏற்படப்போகும் பாரிய நோயின் முன்னறிவித்தல் என்றுகூடச் சொல்லலாம். இரத்த அழுத்தம் உடலில் அதிகரிக்கும்போது, ஆரம்பத்தில் அதுபற்றி பெரும்பாலானோருக்கு வெளியே தெரிவதில்லை.



**வைத்தியர் ஏ.சி.டில்சாட்**
DA (Col), BAMS (India), Panchakarma (Kerala)
மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை
நிந்தவூர்.

**இந்நோய் ஏற்படுவதற்கான காரணங்கள் எவை?**

உணர்ச்சிகள் அல்லது மனப்பளு, மனக்கொந்தளிப்பினாலும் இதயம் இரத்தத்தை வாயுவின் வேகத்தால் உந்தித்தள்ளும் வேகத்தின் இயல்பில் மாற்றம் ஏற்படும்போதும் ஏற்படுகின்றது.

நெடு நாட்கள் தொடரான மலச்சிக்கல், மதுப்பாவனை, புகையிலைப் பாவனை, மாப்பொருட்கள், கொழுப்பு, இறைச்சி போன்றவற்றை அதிகமாக உண்பதனாலும், மிகுந்த உழைப்பு, மனக்களிப்பு, நாடியின் மிகுந்த துடிப்பு, அதிக சிந்தனை, காமம், மேக நோய்கள், தொண்டை நோய், பித்தப்பை நோய், ஈரல் மற்றும் நீர்ப்பை போன்றவற்றில் ஏற்படும் புண்கள், மனக்கவலை, பயம், பதற்றம் காரணமான உணவுகளை உண்ணுதல், நச்சுள்ள உணவுப் பொருட்களை உண்ணுதல் போன்ற காரணங்களால் இந்நோய் ஏற்படுகின்றது.

இந்நோய் இயல்பாகவே கூடவும், குறையவும் செய்யும். நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது இரத்த அழுத்தம் குறைவடைகின்றது. திடீரென ஏற்படும் மன எழுச்சி இரத்த அழுத்தத்தினை திடீரென உயர்த்துகின்றது. உடலியல் மற்றும் மனவியல் காரணங்கள் ஆகிய இரண்டு விதமான செய்கைகளே குருதி அனல்வாதத்திற்கு காரணிகளாக அமைகின்றன.

**நீங்கள் குறிப்பிட்ட இரு காரணிகளையும் தெளிவுபடுத்த முடியுமா?**

ஆம், உடலியல் காரணி என்றால் - புகை பிடிப்பவர்களுக்கும் மதுபோதை, போதை மருந்துகள் அருந்தும் பழக்கமுடையவர்களுக்கும் இரத்த நாளங்கள் குறுகிவிடுகின்றன. அதாவது, இரத்த நாளங்கள் விரிந்து சுருங்கும் தன்மை சிறிது சிறிதாக குறையத் தொடங்குகின்றது. இதனால் இந்நோய் ஏற்பட ஏதுவாகிறது. மேலும், அதிகமாக மீன், இறைச்சி உண்பதினால் இரத்தத்தில் கொழுப்பு அதிகமாகி இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிகின்றது. இதனாலும் இந்நோய் ஏற்பட ஏதுவாகிறது.

எந்தவித வேலைகளையும் செய்யாமல் உடற்பயிற்சியின்றிச் சோம்பேறித்தனமாய் இருப்பவர்களுக்கு உணவு அதிகமாகி உடல் எடை கூடுகின்றது, இதனால் உடல் உழைப்புக் குறைந்துகொண்டே போவதால் உடலில் கொழுப்புப்படிவு அதிகமாகி நோயைத் தோற்றுவிக்கின்றது.

உடலைப் பொறுத்தமட்டில் வரவு செலவுக் கணக்கு சரியாக இருக்கவேண்டும். சேமிப்பு ஒருபோதும் இருக்கக்கூடாது. நாம் உண்ணும் உணவில் உப்பு, சீனி கூடினாலும் இரத்தத்தின் கெட்டித்தன்மையை அதிகமாக்கிப் பாயும் தன்மையைக் குறைக்கின்றது. இரத்த ஓட்டத்தில் பலத்த மாறுபாடுகளை இவை உண்டாக்குவதால் அவற்றை அளவுடன் சேர்த்துக்கொள்வதே நல்லது.

மனவியல் காரணி என்றால் - கோபம், பகைமை, வெறுப்பு, வஞ்சம் போன்ற தீய குணங்கள் எமது நாளமில்லாச் சுரப்பிகளையும் தானியங்கி நரம்பு மண்டலத்தையும் தாக்குவதால் இரத்த அழுத்தம் கூடுகின்றது. ஆகவே, தீய எண்ணங்கள் மற்றும் குணங்கள் எம்மை நோயாளிகளாக மாற்றுகின்றது. பயம், பதற்றம், கவலை போன்ற குணங்கள் எமது உடலின் இயக்கத்தில் பல மாற்றங்களைத் தோற்றுவித்து இரத்த அழுத்தத்தைக் கூட்டுகின்றன. சிலர் சில நேரங்களில் கவலைப்படுவார்கள், சிலர் எப்போதும் கவலைப்படுபவதை பழக்கப்படுத்தித் தொழிலாக வைத்துக் கொள்வார்கள். அவர்களில் சிலருக்கு இந்நோயின் வாய்ப்பு அதிகமாகின்றது.

உணர்ச்சிகளினால் ஏற்படும் மனப்போராட்டம் மற்றும் தொடராக இருக்கும் மனப்போராட்டம் போன்றன நரம்பு மண்டலத்தைத் தாக்கும்போது கூடுதல் இரத்த அழுத்தம் உருவாகிறது. சிலருக்கு பொருளாதாரப் பிரச்சினைகள், பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைகள் தோன்றும்போது வாழ்க்கை துன்பகரமாகத் தோன்றி மனப்பளு தோன்றுகிறது. மனப்பளுவும் இந்நோய்க்கு மூல காரணமாகின்றது.

பெண்கள் கருவுற்ற காலங்களில் உடலில் நச்சு நிலை கூடுவதால் இரத்த அழுத்தம் கூடுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. நாளமில்லா சுரப்பிகளின் இயக்கம் மாறுபடுவதால் இரத்த அழுத்த நோய் உண்டாகிறது. உதாரணமாக, கணையம் வேலை செய்யாதபோது நீரிழிவுநோய் உண்டாகிறது. அந்த நீரிழிவு நோயினால் இரத்த அழுத்த நோய் உண்டாகும் வாய்ப்பும் அதிகரிக்கின்றது.

இரத்த அழுத்த நோய் வந்தவர்களுக்கு சிறுநீரக் கோளாறுகள் உண்டாவதற்கும் வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. அதாவது, சிறுநீரகம், இரத்தத்தில் அதிகளவில் உள்ள உப்புச்சத்தை சிறுநீர் மூலம் வெளிப்படுத்துகின்றது. சிறுநீரகம் பழுதடையும்போது இரத்தத்தில் உப்புச்சத்துக் கூடுகிறது. உப்புச்சத்து கூடும்போது இரத்த ஓட்டத்தில் பலத்த மாறுபாடுகளை உருவாக்குகிறது. சரியான ஊட்டச்சத்து உட்கொள்ளாமை உழைப்புக் குறைவான சோம்பேறி வாழ்க்கை, தொழிற்சாலைகள், ரயில் மற்றும் பஸ் நிலையங்கள், குவாரி போன்ற இடங்களில் கேட்டும் பேரிரைச்சல் காரணமாக அமைதியான நிதானமான வாழ்க்கையைக் கழிக்க முடியாமல் அன்றாடம் எந்த நேரமும் பரபரப்புடன் இயங்க வேண்டிய நிர்ப்பந்த நிலை, பல்வேறு காரணங்களால் வாழ்க்கையில் போராட வேண்டிய சங்கடம், தவிர்க்க முடியாத நிலையில் ஏற்படும் கோபத்தால் உண்டாகும் ஆவேச உணர்வுகள், கவலை, ஏமாற்றம் காரணமாக மனதில் ஏற்படும் அதிர்ச்சிகள் போன்ற காரணிகளும் உயர் இரத்த அழுத்த நோய்க்குக் காரணமாக அமைகின்றன.

**இந்நோயின் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் என்ன?**

நாடி நரம்புகளில் இரத்தக் குழாய்கள் முறுக்கேறி இயற்கையாக ஓடிக்கொண்டிருக்கும் இரத்த வேகம் குன்றி சிறு குழாய்களில் இரத்தம் கசிந்துவிடும். அதனால் மயக்கம், தலைச்சுற்று, கை மற்றும் கால் சோர்வு, ஞாபக மறதி போன்ற அறிகுறிகளை வெளிப்படுத்தி மூளையில் இரத்தக் கசிவை ஏற்படுத்திவிடும். அதனால் திடீரென பேச்சும் ஞாபக மறதியும் ஏற்பட்டு படுக்கையில் வீழ்த்திவிடும் ஒரு நோயாக இருக்கிறது.

மூளையின் பகுதிகளில் கை, கால், வாய், முகம் போன்ற பாகங்கள் தொடர்புபட்டுள்ளதால் அது செயலிழந்துபோய் விடுகின்றன. இதை தமிழில் பாரிசவாதம் என்றும் ஆங்கிலத்தில் Paralysis என்றும் கூறுகின்றனர்.

**இந்நோயிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக்கொள்ள நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?**

இரத்த அழுத்தநிலை சீராக இருக்கும்வரை உடல் நலம் சீராக இருக்கின்றது. இரத்தவேகம் குறைந்தாலோ அல்லது கூடினாலோ இரத்த அழுத்த நோய் உருவாகிவிட்டது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். கூடியவரை இரத்த அழுத்த நோய் வராமல் தவிர்ந்துக் கொள்ளுதல் வேண்டும். வந்தால் மருத்துவ சிகிச்சை மூலம் முற்றிலும் குணப்படுத்திக் கொள்வது சாத்தியமில்லை என்று கூறினாலும் மனவியல், உடலியல் தொடர்பான சில நடைமுறைகளை கையாள்வதினாலும் இயற்கையுடன் ஒத்து நடப்பதன் மூலமும் இரத்த அழுத்த நோயினை ஒரு கட்டுக்குள் வைத்திருக்க முடியும்.



குறிப்பாக, உடலியல் மற்றும் மனவியல் ரீதியாக கவலையற்று மன மகிழ்வுடன் வாழும் வாழ்க்கையை நடாத்திச் செல்லுதல், எந்தக் காரியத்தையும் அவசரமின்றி நிதானமாகச் செய்வதற்கு கற்றுக் கொள்ளல், நேரம் கிடைக்கும் போதேல்லாம் ஓய்வு எடுத்தல், உடற்பயிற்சியை தினமும் செய்தல், அளவான உணவை உட்கொள்ளல் போன்ற விடயங்களை கடைப்பிடிப்பதன் மூலமே நாம் இந்நோயிலிருந்து பாதுகாப்புப்பெற முடியும்.

# ஆங்கில மொழி ஓர் ஒட்டுமொழி

சி.உதயகுமார்
BA.MA(Hons)PGDE,
DIP.in.Cinema

**ஒரு மாணவன் அந்நியமொழியில் கற்பதைவிட, தாய்மொழியிலே கற்கின்ற போதுதான் தன் கிரகித்தலை வளர்த்துக் கொள்கிறான். இதுவே பல கண்டுபிடிப்புகளுக்கும் வழிசமைக்கும் என்பதை நம்மைப் போன்ற நாடுகள் மறந்து விடுகின்றன. இது வேதனையான விடயமாகும். எந்தவொரு தேசத்திலும் வெளியிடப்படுகின்ற எந்தவொரு மொழி சார்ந்த அறிவியல் நூல்களையும் பொருளாதாரக்கொள்கை சார்ந்த புத்தகங்களையும் மற்றும் நவீன இலக்கியம் சார்ந்த படைப்புக்களையும் உடனடியாகவே தம் தாய்மொழியிலே மொழிபெயர்ப்பு செய்து தம் மக்களிடம் சமர்ப்பித்து விடுகின்றனர்.**

உலகிலே பலமொழிகள் காணப்படுகின்றன. இம்மொழிகளை மனிதன் பேசுகிறான். ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு கலாசாரம் உண்டு, ஒவ்வொரு பண்பாடு உண்டு. இவ்வாறாக மொழி சார்ந்து மனிதனை ஒவ்வோரினமாக வகைப்படுத்துகின்றனர்.


இருந்தபோதும் ஆட்பலம், அறிவுப்பலம், அதிகாரப்பலம், பொருளாதாரபலம் போன்றவற்றால் ஓரினம் துருத்தி வளரும்போது அந்த இனமொழியே மற்றைய மொழிகளிலிருந்தும் விரைவான செல்வாக்கினைப் பெற்றுவிடுகிறது.

இந்த வகையில் ஆங்கிலமொழி அனேக தேசங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட மொழியாக விளங்கி வருகிறது. ஆனாலும் சீனா, ஜப்பான், ஜேர்மன், பிரான்ஸ், டென்மார்க் போன்ற அறிவியல் நாடுகள் பல தம் தேசமொழியினையே எந்தத் தேசம் போனாலும் பேசுகின்றனர்.

இந்நாட்டு அரசியல் தலைவர்கள், அறிவியலாளர்கள் யாவரும் உலகநாடுகளுக்கிடையே நடைபெறும் எந்தவொரு கூட்டங்களில் பங்கேற்றுத் தங்கள் திட்டங்களையும் தங்கள் எண்ணங்களையும் தங்கள் மொழியிலேயே முன்வைத்து வருவதைக் காணலாம்.

மேலே சொல்லப்பட்ட நாட்டவர்கள் ஆங்கில மொழியை ஒரு பொருட்டாக எடுப்பது கிடையாது. அதுவொரு அந்நியமொழி என்ற நிலைப்பாடு அவர்களுக்குள் இருந்து வருகிறது. இது பாராட்டத்தக்க விடயமாகும். ஆனாலும், தங்கள் தாய்மொழியாளர்கள் வேறுமொழிகளைக் கற்பதற்குத் தடையில்லை என்பதையும் சொல்லித்தான் ஆகவேண்டும்.

கனிஸ்ட பிரிவிலிருந்து உயர் பட்டப்படிப்பு வரையான கற்றல் முறைகள் யாவும் தங்கள் தாய்மொழி






யிலே கற்கிறார்கள்.

ஒரு மாணவன் அந்நியமொழியில் கற்பதைவிட, தாய்மொழியிலே கற்கின்ற போதுதான் தன் கிரகித்தலை வளர்த்துக்கொள்கிறான். இதுவே பல கண்டுபிடிப்புகளுக்கும் வழிசமைக்கும் என்பதை நம்மைப் போன்ற நாடுகள் மறந்துவிடுகின்றன. இது வேதனையான விடயமாகும்.

எந்தவொரு தேசத்திலும் வெளியிடப்படுகின்ற எந்தவொரு மொழி சார்ந்த அறிவியல் நூல்களையும் பொருளாதாரக்கொள்கை சார்ந்த புத்தகங்களையும் மற்றும் நவீன இலக்கியம் சார்ந்த படைப்புகளையும் உடனடியாகவே தம் தாய்மொழியிலே மொழிபெயர்ப்பு செய்து தம் மக்களிடம் சமர்ப்பித்துவிடுகின்றனர்.

சீனா, ஜப்பான், ஜேர்மன், பிரான்ஸ், டென்மார்க் போன்ற நாட்டுத்தலைவர்கள் போன்றே இலங்கை நாட்டுத்தலைவர்களும் உலக அரங்கெங்கும் சிங்கள மொழியிலே உரை நிகழ்த்தி வருகின்றனர்.

சிங்களமக்கள் யாவரும் சிங்கள எழுத்துகளிலே கையொப்பமிடுகின்றனர். அவை மட்டுமில்லை, அனுராதபுரத்தையும் அதற்கு அப்பாலும் நாம் கடந்து செல்லும் போது அங்குள்ள சகல சிங்களக்கடைகளின் பெயர்களும் சிங்கள எழுத்துகளில் எழுதப்பட்டிருப்பதை யாருமே கண்டிருக்கலாம்.

சிங்கள மக்கள் தங்கள் தாய்மொழியினை நேசிக்கின்றார்கள் என்பதற்கு இவை நல்ல உதாரணங்களாகும்.

எம் தாய்மொழியாகிய தமிழ்மொழிதான் உலக மூத்தமொழி என்கின்றார்கள். சீனா நாட்டிலே உள்ள மக்கள் தமிழ்மொழியை ஒரு பாடமாகக் கற்கத் தொடங்கிவிட்டனர். காரணம், தமிழ் மொழியினையும் அம்மொழியிலுள்ள பழந்தமிழ் இலங்கியங்களையும் கற்கின்றபோது உடலும் உளமும் உற்சாகம் பெறுவதாகக் கூறுகின்றனர்.

சீன நாட்டிலே தமிழ் வானொலி, தமிழ்த் தொலைக்காட்சி என்பவை தோற்றம் பெற்றுள்ளன. அவர்கள் தமிழ்ப் பாடல்களை அதிகமாகக் கேட்கின்றனர். தமிழ்த் திரைப்படங்களை அதிகமாகப் பார்க்கின்றனர்.


தம் மூத்த குடியினர் தமிழர்கள் என்று சீனர்களும், கொரிய மக்களும் கூறி வருகின்றனர். ஆங்கிலமொழி என்பது தமிழ், ஜேர்மன், கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழிகளின் ஒரு கூட்டுக்கலவை மொழி ஆகும். அவற்றில் 50% மானவை தமிழில் இருந்து பரவியவை ஆகும்.

உதாரணங்கள்:

(1) Kill : இது "கொல்" என்ற தமிழ்ச்சொல்லில் இருந்து தோன்றியதாகும்.

(2) Cry : இது "கரை" என்ற தமிழ்ச்சொல்லில் இருந்து தோன்றியதாகும்.

(3) Button : இது "பொத்தான்" என்ற தமிழ்ச் சொல்லில் இருந்து தோன்றியதாகும்.






(4) Pyramid : இது "பெருமிடு" என்ற தமிழ்ச்சொல்லில் இருந்து தோன்றியதாகும்.

இவ்வாறே இலத்தீன் சொற்களில் இருந்தும் ஆங்கில சொற்கள் உருவாகியிருக்கின்றன என்பதற்கு சில எடுத்துக் காட்டுகளுடன் இதில் பதிவிட எண்ணுகிறேன்.

**Ex அல்லது Eg**

Ex என்பது Example என்ற ஆங்கிலச் சொல்லின் சுருங்கிய வடிவமாகும்.

ஆனால், Ex என்பதற்கு பதிலாக பலர் Eg என்றுதான் பதிவிடுகிறார்கள்.

ஏனென்றால், Exempligratia எனும் இலத்தீன் சொல்லுக்கான தமிழ் அர்த்தம் உதாரணம் என்பதாகும்.

இந்த Exempligratia எனும் சொல்லில் இருந்துதான் Example என்ற ஆங்கிலச்சொல் தோன்றியிருக்கிறது.

Exempligratia விலுள்ள E உம் g உம் சேர்ந்ததே Eg எனும் சுருக்கமாகும்.

**NO உம் No உம்**

NO என்றால் இல்லை என்று அர்த்தம் கொள்கிறோம். நம்மில் பலர் NO என்பதும் No என்பதும் ஒரே பொருள் என்றுதான் கருதுகிறார்கள். அது தவறாகும்.

NO அல்லது no என்று எழுதினால் மாத்திரமே இல்லை என்று பொருளாகும். அதாவது இரண்டு எழுத்துகளும் ஆங்கிலப் பெரிய எழுத்துகளாக இருக்க வேண்டும் அல்லது ஆங்கிலச் சிறிய எழுத்துகளாக இருக்க வேண்டும்.

முதல் எழுத்து ஆங்கிலப் பெரிய எழுத்தாகவும் அடுத்த எழுத்து ஆங்கில சிறிய எழுத்தாகவும் வரும் சந்தர்ப்பத்தில் அதன் அர்த்தம் வேறாகும்.

அதாவது No என்பதையே நான் சொல்கிறேன்.

No என்ற அடையாளம் விண்ணப்பங்கள், படிவங்களில் காணப்படுவதை அவதானிக்கலாம். அதன் அர்த்தம் இலக்கம் என்று பேசிக்கொள்வோம்.

Number என்ற ஆங்கிலச் சொல்லுக்கான தமிழ் விளக்கம் இலக்கம் என்பதாகும். Number என்ற சொல்லில் எங்கேயாவது o என்ற எழுத்து காணப்படுகிறதா?

அப்படியென்றால் ஏன் இப்படி எழுதுகிறார்கள்?

சிலர் சொல்லுவார்கள் Number Order என்று. அப்படிப் பார்க்கப் போனால் NO என்றுதான் சுருக்கமாக எழுத வேண்டிவரும். அதன் அர்த்தம் இல்லை என்பதாகும். ஆகவே இதுவும் தவறான ஒன்றாகும்.

Nemero என்பது இலத்தீன் சொல்லாகும். அதன் தமிழ் அர்த்தம் இலக்கம் என்பதாகும். Nemero என்ற சொல்லில் இருந்து உருவாகிய ஆங்கிலச் சொல்தான் Number என்தாகும்.

Nemero விலுள்ள N உம் o உம் சேர்ந்ததே No ஆகும். ஆகவே, ஆங்கிலமொழி என்பது ஒரு தனித்துவமான மொழி கிடையாது.

அண்மையில் உலக மக்களின் கையொப்பம் பற்றிய ஆய்வொன்றிலிருந்து கிடைத்த ஒரு தகவல். அது என்னவெனில், இந்தியத் தமிழர்களும் ஈழத்துத் தமிழர்களும்தான் ஆங்கில மொழியில் ஒப்பமிடுவதாகக் கூறுகிறது. இது வெட்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

தன் தாய்மொழி தவிர்ந்த வேறெந்த மொழியையும் யாரும் கற்கலாம். தன் தாய் மொழியின் தேர்ச்சியோடு இன்னொரு மொழியினைத் தெரிந்து கொள்ள என்பது இன்னொரு பலமாகும். அதற்காக, அவரை அறிவாளி என்று சொல்லிவிட முடியாது.

உதாரணமாக, ஆங்கிலமொழி தெரிந்தவர் அறிவாளி என்று யாரும் கருதினால் அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, அயர்லாந்து, நியூஸ்லாந்து, தென்னாபிரிக்கா, கனடா மற்றும் ஏனைய பல நாடுகளில் வாழ்கின்ற ஆங்கிலம் தெரிந்த எல்லோரும் அறிவாளிகள் என்றெல்லவா பொருள் வந்து விடும்.

இன்னொரு மொழி தெரிந்திருத்தல் என்பது அறிவு கிடையாது. அதுவொரு கெட்டித்தனமே.

இன்னொரு மொழியினைக் கற்காமல் இருக்கவும் முடியாது. அதற்காக ஆதிமொழியாம் தாய்மொழியை மறக்கவும் கூடாது.

உங்கள் கையொப்பம் ஒரு கிறுக்கலாகவோ, ஒரு சிக்கல் நிறைந்த கோடுகளாகவோ இருக்கலாம்.

அந்தக் கிறுக்கல் வடிவம்கூட தமிழ் எழுத்துகளிலுள்ள ஏதோவொரு எழுத்தினைக் கொண்ட ஒரு தொடக்கமாகவே இருக்கவேண்டும். ஆகவே தமிழ் மொழியிலேயே கையொப்பம் இடுவோமாக.

■

# வாழும் வரலாறு மல்லிகை ஜீவா



தேவா ஹெரால்ட் ஜேர்மனி

கம்பீரநடை, நேர்கொண்ட பார்வை, சொல்லாற்றல், தனது கொள்கைப் பிடிப்பில் அவதானம், போராட்ட குணம் இவை போன்றவைகளே நான் முதன்முதலில் டொமினிக் ஜீவா அவர்களைச் சந்தித்தபோது அவரைப்பற்றி புரிந்துகொண்ட விடயங்கள்.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, அறிமுகப்படுத்திய எழுத்தாளர்தான் முருகபூபதி.


எழுபதுகளிலே எமது நீர்கொழும்பூரில் ஜீவாவை நாம் சந்தித்த பின்னர், 1972 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மல்லிகை நீர்கொழும்புப் பிரதேச சிறப்பிதழும் வெளியிட்டோம்.

அதன் அறிமுக அரங்கு நடந்தபோது, அதில் உரையாற்றுவதற்கு வாய்ப்பளித்த எழுத்தாளர் முருகபூபதி, ஜீவா மறைந்து ஓராண்டு நிறைவடைந்திருக்கும் இக்காலப்பகுதியில் வாழும் வரலாறு மல்லிகை ஜீவா என்ற மின்நூலை வெளியிட்டுள்ளார்.

வாசகர்கள் இதனை கிண்டிலில் தரவிறக்கம் செய்து படிக்கலாம்.

மல்லிகை ஜீவாவுடன் நெருக்கமாக உறவாடியிருக்கும் முருகபூபதி, அவர் பற்றிய ருசிகர சம்பவங்களை இந்நூலில் பதிவிட்டுள்ளார்.

ஜீவாவை முதலில் சந்தித்தபோது, அவரது உயர்ந்த தோற்றமும் எனக்குள்ளே உயர்ந்து நின்றது. அவருடைய தொனியே - குரலே நிகழ்வரங்கு முழுவதும் வியாபித்திருந்தது.





இந்துமதத்தின் கேடான சாதிக்கொடுமை பற்றியும்தான் எங்கு போனாலும், சாதியை முன்னிறுத்தித் தன்னை இழிவுபடுத்தியது பற்றியும் மேடைகளில், கூட்டங்களில் அவர் உரையாற்றும்போது அது நம் மனதை உலுக்கியெடுக்கும்.

தன் வாழ்நாள் முழுக்க அவருக்கு நேர்ந்த கொடுமைகள் வார்த்தைகளுக்குள் அடங்கிவிடா. மனத்துயரங்கள் அழியாதவை. ஜீவாவின் சாதியத்துக்கு எதிரான போராட்டத்தை அவரின் வாழ்நாள் சம்பவங்களிலிருந்து அவர் விபரிக்கையில் அது சாதியத்தின் திமிரை நேரடியாகக் கண்முன் நிறுத்தியது.

அவருடைய இலட்சிய வேட்கை, மல்லிகை இதழாக இலங்கையின் இன பன்மைத்துவத்தை முன்னிறுத்தி செயலாற்றியது. மல்லிகையில் 1970 காலப்பகுதியில் ஜெயகாந்தன் பற்றி, ஜீவா எழுதிய தொடர் விமர்சனம் பற்றி நேர்மறையான - எதிர் மறையான வாசகர் கருத்துக்களும் மல்லிகையில் பிரசுரிக்கப்பட்டன. நானும் ஜீவாவின் தொடர் பதிவுக்கு மல்லிகையில் எதிர்வினையாற்றியிருந்தேன்.

அவ்வாறு எழுதியவர்களான மருத்துவர் ராஜம் தேவராஜன் லண்டனுக்கும், நான் ஜேர்மனிக்கும் காலப்போக்கில் புலம்பெயர்ந்து வந்துவிட்டோம்.

முருகபூபதி, இந்த நூலில் அந்தச் செய்திகளையும் தவறவிடாமல் எழுதியிருக்கிறார்.

மல்லிகையில் வெளியான இலக்கியக் கட்டுரைகள், சிறுகதைகள், சமூகநீதியை வலியுறுத்தின. அவை பற்றிய விமர்சனங்கள் இதழ் ஆசிரியருக்கு ஏற்புடைமை இல்லாவிடினும், அவற்றை அவர் மல்லிகையில் வெளியிட்டார். இன நல்லிணக்கத்துக்கான அவருடைய நோக்கம் உறுதியானது. சக இனத் தோழர்களின் ஆக்கங்கள், செவ்விகள் மொழி பெயர்க்கப்பட்டு மல்லிகையில் வெளியாகின. தனி ஆளாக ஒரு இலக்கிய இதழை வெளிக்கொணர்வது லேசான விடயமல்ல.

தற்போதைய கணினியுகத்தில் சாத்தியமான வசதி வாய்ப்புக்கள் அவருடைய காலத்தில் இல்லை.

இலக்கியத் தாகமெடுத்த வாசகரிடத்தில் மல்லிகையை எடுத்துச்சென்று நேரடியாக வழங்கியது மட்டுமன்றி, யாவரிடத்தும் சமூகநீதிக்கான குரலையும் அது பேசவேண்டும் என்பதற்காகவும் அவர் வீதிச் சந்திகளில் நின்றும் மல்லிகையை விற்றார். குதர்க்கமான வாய்ச் சண்டைகளையும், தன் கண் முன்னாலேயே மல்லிகை இதழை கிழித்துப் போட்டவர்கள் விபரங்களையும் பகிரங்கமாக்கினார். இச்செய்திகள் யாவும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

நேர்மையான அவர் குரலின் ஆவேசம் இன்றும் நம் காதுகளுக்குள் கேட்கிறது. ஜீவா பட்ட துயரங்கள் அநீதியானவை. சாதியத்துக்கு எதிரானதைப் போட்டுடைக்கவும், சமதர்மத்தை இலக்காகவும் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தைப் பேணவும் மல்லிகை ஒரு கருவியாய் ஜீவாவுக்கு அமைந்தது.

ஜீவா பற்றிய பல செய்திகளை நினைவூட்டும் வகையில் இந்த நூல் அமைந்துள்ளது.

அவருடைய ஆளுமை வியக்கவைக்கிறது. ■

> **“இலக்கியத் தாகமெடுத்த வாசகரிடத்தில் மல்லிகையை எடுத்துச்சென்று நேரடியாக வழங்கியது மட்டுமன்றி, யாவரிடத்தும் சமூகநீதிக்கான குரலையும் அது பேசவேண்டும் என்பதற்காகவும் அவர் வீதிச் சந்திகளில் நின்றும் மல்லிகையை விற்றார். குதர்க்கமான வாய்ச் சண்டைகளையும், தன் கண் முன்னாலேயே மல்லிகை இதழை கிழித்துப் போட்டவர்கள் விபரங்களையும் பகிரங்கமாக்கினார்.”**

---

# கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் நூல் வெளியீட்டுவிழா

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்ட கிழக்கின் அவிழ்தம் சஞ்சிகை, ஆயிரம் வேரும் அரும் மருந்தும் ஆகியவற்றின் வெளியீட்டுவிழா கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கொவிட்- 19 தொற்றுக் காலத்தில் சுதேச மருத்துவத் திணைக்களம் பாரிய பங்களிப்புக்களை மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களுக்கும் செய்திருந்தது.

கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள், தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் வசித்த குடும்பங்கள் மற்றும் தொற்றினால் பாதிக்கப்படாதவர்கள் என சகல மக்களுக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் சுவதாரணி மற்றும் இமியுன் பூஸ்ட்டர் பானங்களுடன் ஆயுள்வேத மருந்துகளையும் வழங்கி வந்த செயற்பாடுகள் பாராட்டத்தக்கது என்று அங்கு உரையாற்றிய சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்தார்.

மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதரினால் கிழக்கின் அவிழ்தம் சஞ்சிகை, ஆயிரம் வேரும் அரும் மருந்தும் ஆகிய நூல்களைச் சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரனுக்கு வழங்கி வைத்த அதேவேளை நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் சுவதாரணி பொதிகளையும் வழங்கி வைத்தார்.

மருத்துவத் திணைக்கள திட்டமிடல் பிரிவின் வைத்தியர்களான எஸ்.சிவச்செல்வன், எஸ்.சதீஸ், நிருவாக உத்தியோகத்தர் (திருமதி) எஸ்.நவந்திரராஜா உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். ■



பானு

**குடிப்பழக்கத்திற்கு அடிமையாவதால் தனிமனிதனாக தன்னைச்சுற்றி சமூகத்தில் என்ன நடக்கிறது என்று உணராத விழிப்புணர்வு அற்ற நிலையில் தன்னையே அழித்துக் கொள்ளும் நிலையை உருவாக்குகிறார்கள். மதுவில் ஏற்படும் பக்க விளைவுகளைத் தெரிந்தும் உற்சாகம் தரும் பொருளாகவும் மதுபானம் இல்லா விட்டால் இயங்க முடியாது என எண்ணும் இளைஞனாகக் கருதுகின்றனர். இன்று நாட்டில் அதிக விபத்துகள் மதுபானம் அருந்தி வாகனத்தைச் செலுத்துவதனால் ஏற்படுகிறது.**

# ஆரோக்கியமான சமூகத்தை மீளக் கட்டியெழுப்புவர்களா இன்றைய இளைஞர்கள்?

“இளைஞர்களே எழுந்து நில்லுங்கள் தோல்வியில் துவண்டு வறுமையில் வாடிக்கொண்டிருக்கும் சமுதாயத்தை பலமான கரங்களால் மாற்றியமைப்போம். பலவீனமாக இருக்கிறோமே என வருத்தப்படாதீர்கள். பயந்து கொண்டே வாழ்வதில் எந்த அர்த்தமும் இல்லை பயத்தின் ஒரே பரிகாரம் வலிமையை குறித்து சிந்திப்பது தான். அளவற்ற தன்னம்பிக்கை பயத்தை விரட்டிவிடும் பயங்கரமான வேகத்துடன் செயல்புரிவதன் மூலமே வெற்றி இலக்கை விரைவில் அடைய முடியும். என்னோடு வாருங்கள் உங்களுக்கு தோள் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன்.” என்று இளைஞர்களுக்கு தன் வீரக் குரலால் அழைப்பு விடுத்தவர் சுவாமி விபுலானந்தர்.

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு ஆணிவேராக உள்ளவர்கள் இளைஞர்கள் என்பது நிதர்சனமான உண்மை. இன்றைய கால இளைஞர் சமுதாயம் சுதந்திரமாகவும் எந்த விதக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் சுயமாக செயற்படுவதையே அதிகம் விரும்புகிறார்கள். இவர்கள் தமது இலக்குகளை அடைய உரிய வழிகாட்டுதல்களை எதிர் நோக்கிக் காத்திருக்கிறார்கள். ஒரு புறம் நவநாகரிகம் என்ற போர்வையில் தமது எதிர்காலத்தை சமுதாய சீரழிவான நாசகர செயல்களில் ஈடுபட்டு வரு வது மிகவும் வேதனை தரும் செயல்.

இன்றைய இளைஞர்கள் திசைமாறிச் செல்கிறார்களா என்பதை அறிந்து ஒவ்வொரு பெற்றோரும் ஆவலுடனும் மறுபுறம் மனக் கலக்கத்திலும் உள்ளனர். இன்று நவீன சாதனங்களும் நவீன தொழில்நுட்பங்களும் அதிகரித்து உள்ள போதில் நற்பழக்கவழக்கங்கள், கலாசார விடயங்கள், வாசிப்புப் பழக்க வழக்கங்கள், மனிதாபிமான செயற்பாடுகள் இளைஞர் மத்தியில் வேகமாக அருகி வருவதைக் கண்கூடாய் அவதானிக்க முடிகிறது.



இன்று இளைஞர்கள் கம்பியூட்டர் (கணினி), மற்றும் விளையாட்டு மைதானங்களில் விளையாடுவதிலும் பார்க்க தொலைபேசியில் அதிக நேரம் செலவழித்து பொழுதைக் கழிக்கிறார்கள். தொலைபேசியில் பொழுதைப் போக்கி நேரத்தை அநியாயமாகச் செலவிடும் வகையில் இளைஞர்களை கவர்ந்திழுக்கும் வகையில் விதம் விதமான விளையாட்டுக்களை வடிவமைத்திருக்கிறார்கள். இதில் வெற்றியுணர்வு, திரில், போட்டி போன்றன கிடைப்பதாக இளைஞர்கள் கூறுகிறார்கள். இவ்வாறான விளையாட்டில் முடங்கிப் போவதனால் காலப் போக்கில் எந்த தொழிலையும் மன உறுதியுடன் சுறுசுறுப்பாகச் செய்ய முடியாமல் சோர்ந்து போகும் நிலையை இவர்களே உருவாக்கி கொள்கிறார்கள். இதனால் எதிர்காலக் கனவுகள் கூட சின்னாபின்னமாகப் போகும் நிலை தோன்றும் வாய்ப்பை உருவாக்கிறார்கள்.

நல்ல இளைஞர் சமுதாயமாகவும் நாட்டையும் தாம் வாழும் பிரதேசத்தின் நலனையும் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டியவர்கள் படிப்பை பாதியில் நிறுத்தி விட்டு சுற்றித் திரிகிறார்கள். இளைஞர் சமுதாயம் எதிர்கால இலட்சியங்களை மண்ணோடு மண்ணாக்குகின்றனர். பல பெற்றோரும் இதற்குக் காரண கர்த்தாவாக விளங்குகின்றனர் என்பது கவலை. வெளிநாடுகளில் இருந்து வரும் பணத்தை இளைஞர்கள் ஆடம்பரச் செலவுக்கான தொலைபேசி, மோட்டர் சைக்கிள் என்பவற்றை வாங்கி கொடுக்கிறார்கள். அதைவிட வெளிநாட்டுக்கு உன்னை அனுப்புகிறேன் என்ற ஆசையைத் தூண்டி வளர்ப்பதனால் அவர்கள் படிப்பை பாதியிலே கைவிட்டு ஏதோ இவ்வுலகில் சாதித்தவர்கள் போல் கை நிறைய காசுடன் மோட்டார் சைக்கிள்களில் வேகத்துடன் பயணிப்பதும் தன்னுடன் இன்னும் பல இளைஞர்களை



ஒன்றிணைத்துச் செல்வதனால் பல இடங்களில் இளைஞர்கள் பல குழுக்களாக இணைந்து மோதல்களை ஏற்படுத்துகிறார்கள்.

தனிப்பட்ட சில இளைஞர்களின் முரண்பாடுகள் காலம் செல்லச் செல்ல பெரிய மோதல்களாக உருவாகி உயிரிழப்புக்கள் கூட ஏற்பட்ட வரலாற்றுச் சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன.

இவற்றை விடத் தற்கால இளைஞர் சமுதாயம் எதிர் நோக்குகின்ற மிகப் பெரிய சவால் போதைப் பொருள் பாவனை மது, போதை வஸ்து, சிகரட், கஞ்சா, வீடி, ஹெரோயின், ஐஸ், கசிப்பு,மாவா எனப் பல போதைப் பொருட்களிற்கு அடிமையாகியுள்ளார்கள். பகல், இரவு எனத் தொடர்ச்சியாக போதைப் பொருட்களைப் பாவிப்பதால் நல்ல விடயங்களையும், நல்ல செயல்களையும் சிந்திக்க தோன்றாது. எதிர்கால விடயங்களை யோசிக்கமாட்டார்கள். பொழுது போக்கிற்காகவும் சிறிது நேரம் கிடைக்கும் அற்ப சந்தோசத்திற்காகவும் பயன்படுத்தப்படும் போதைப் பொருள் உடல் நலத்திற்கு கேடு விளைவிப்பதுடன் உயிரிழப்புக்களையும் ஏற்படுத்துவதோடு சமூகத்தில் அவர்களிற்கு இருக்கின்ற நல்ல மரியாதையையும் குறைத்து விடுகிறது.

குடிப்பழக்கத்திற்கு அடிமையாவதால் தனிமனிதனாகத் தன்னைச்சுற்றி சமூகத்தில் என்ன நடக்கிறது என்று உணராத விழிப்புணர்வு அற்ற நிலையில் தன்னையே அழித்துக் கொள்ளும் நிலையை உருவாக்குகிறார்கள். மதுவில் ஏற்படும் பக்க விளைவுகளைத் தெரிந்தும் உற்சாகம் தரும் பொருளாகவும் மதுபானம் இல்லாவிட்டால் இயங்க முடியாது என எண்ணும் இளைஞனாகக் கருதுகின்றனர். இன்று நாட்டில் அதிக விபத்துகள் மதுபானம் அருந்தி வாகனத்தைச் செலுத்துவதனால் ஏற்படுகிறது.

அண்மைக்காலங்களில் பிறந்தநாள், திருமணநாள், மரணவீடு, வெளிநாடுகளில் இருந்து வருகைதரல், குழந்தை பிறப்பு, வேலை கிடைத்தல் என அனைத்து நிகழ்வுகளிலும் பார்ட்டி (party) என்ற பெயரில் மதுபானம் குடிக்கும் பழக்கம் ஒரு நாகரிகமாக வந்து கொண்டிருப்பதனை நாம் வாழும் சமுதாயத்தில் அவதானிக்கலாம். மது அருந்தாதவர்களை ஒதுக்கி வைத்துப் பார்க்கும் சூழல் கூட சில இடங்களில் தற்காலத்தில் ஏற்படுத்தியுள்ளன. யுத்தம் நிறைவடைந்த காலத்திற்கு முன்பு மதுபானம் அருந்தும் இளைஞர்களை விரல்விட்டுத்தான் எண்ண முடியும். தற்காலத்தில் மதுபானத்திற்கு அடிமையாகாதவர்களைத்தான் விரல் விட்டு எண்ணமுடியும். மதுபானத்திற்கு அடிமையானவர்கள் தொகை அதிகரிப்பது கவலையான விடயம். ஒரு நூலகம் திறக்கப்படும் போது பல மதுபானசாலைகள் மூடப்படும் என்ற நிலைமாறி மதுபானசாலைகள் பல திறக்கப்படும் போது நூலகங்கள் மூடப்படும் சூழல் ஏற்படும் என்ற உணர்வு தோன்றுகிறது.அத்தகைய சூழலில்தான் வாழும் அபாயம்.

குடிப்பழக்கத்தால் பல குடும்பங்கள் சிதைந்தும் ஆதரவற்ற குழந்தைகளும், கணவனால் கைவிடப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களும் சிறு வயதுத் திருமணத்தால் குடும்ப வன்முறைகள் எனச் சமுதாயத்தில் அதிகரிப்பது வேதனையானது. சமுதாய முரண்பாடுகள் கூடத் தோற்றுவிக்கும் சூழல் மதுப்பிரியர்களால் ஏற்படுவதுமுண்டு குடும்பத்திற்கு சாப்பிட உணவு இல்லாவிட்டாலும் கூட குடிப்பதை நிறுத்த முடியாதவர்களும் சமுதாயத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

மதுவுக்காக எதை வேண்டுமானாலும் செய்யத் துணியும் மனம் நாளடைவில் அப்பழக்கத்திற்கு அடிமையாகிக் குற்றவாளியாக உருமாற்றுகிறது.

எமது நாட்டில் தற்காலத்தில் அதிக இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பில்லாமல் திண்டாடுகிறார்கள். இவர்களுக்குப் பிரதேச ரீதியாக ஆய்வு செய்து பிரதேசத்திற்கு ஏற்ற தொழிற்சாலைகளை உருவாக்கி அதன் மூலம் வேலைவாய்ப்பை வழங்குவதன் மூலம் அதிகக் குற்ற செயல்களை குறைப்பதோடு குடும்பங்கள் பல வறுமையில் இருந்தும் மீள முடியும். இளைஞர்கள் பகலில் வேலைக்குச் சென்றால் அந்த நேரங்களில் மதுபானங்கள் அருந்தத் தோன்றாது. அத்துடன் வன்முறை, கருத்து முரண்பாடுகள், குழு மோதல் போன்றன ஏற்பட வாய்ப்புக்கள் குறைவு.

மதுபான நிலையங்களையும் சட்டவிரோத கசிப்பு, கஞ்சா போன்றவற்றையும் நாட்டில் இல்லாது ஒழித்தால் நிறையக் குடும்பங்கள் பஞ்சம், பசி, பட்டினி இல்லாமல் வாழ்வாதாரத்தில் உயர்ந்து விளங்கும். இதை அரசு செய்யுமா அது நடக்காத விடயம் என்று தான் அனைவர் மனதிலும் தோன்றும் மதுபான சாலைகளால் நாட்டிற்கு அதிகவருமானம் அதனால் நாட்டின் வளர்ச்சிக்காக மதுபான சாலைகளை மூடுவதென்பது வெறும் பேச்சு மட்டுமே என்று கூறத் தோன்றும்.

நாட்டின் வளர்ச்சிக்குப் பங்காற்றும் இளைய தலைமுறை தடுமாறி தத்தளிப்பதனால் சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள் உருவாவதைத் தடுக்க முடியாத சூழலும் ஏற்படுகிறது. சமுதாயத்தில் வளரும் தலைமுறையினர் நல்விடயங்களையும் நல்ல செயல்களையும் செய்தால் நல்லதொரு எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கலாம்.


“என்னிடம் நூறு இளைஞர்களை கொடுங்கள் நான் வலிமையான பாரதத்தை உருவாக்கி காட்டுவேன்” என்று சுவாமி விவேகானந்தர் இளைஞர்கள் மீதுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை அன்று கூறினார். இன்றைய இளைஞர்களும் அவ்வாறான நிலைக்கு மீண்டு திரும்ப வேண்டும்.

வீட்டின் ஜன்னலருகே வைத்த செடியானது வெளிச்சத்தைத் தேடி வெளியே வளைந்து செல்வதைப் போல இன்றைய கால இளைஞர்களும் விடா முயற்சியுடன் புதிய பாதைகளைத் தேடிக் கொண்டு நல்ல பண்புகளுடனும் நல்ஒழுக்கத்துடனும் மனித நேயத்துடனும் பயணித்தால் நல்ல ஆரோக்கியமான இளைஞர் சமுதாயம் உருவாகும் என்பது நிதர்சனமான உண்மை.

கனவு 11

# கல்யாணக்கனவு

யாழ் சத்யா





தனது வீட்டிற்கு வந்த சஞ்சயனுக்கு இத்தனை நாட்களாக இருந்த வலிக்கும் மேலாய் இருதயத்தை யாரோ ரம்பம் கொண்டு அறுப்பது போன்ற வலி.

'உன்னை இந்தக் கோலத்தில் காணவா ஆசைப்பட்டேன் வைஷு - முரளி மீது நாளுக்கு நாள் நீ கொண்ட காதல் எத்தனை தீவிரமானது என்று எனக்குத் தானே தெரியும். உன் காதலின் ஆழத்தை உன்னை விட அதிகம் உணர்ந்து கொண்டவன் நான் ஆயிற்றே.

என் காதல் தோற்ற போது கலங்கியதை விட இப்போது உன் காதல் தோற்றதை எண்ணித்தான் அதிகம் கலங்குகிறேனடி. இன்று உன்னை இப்படித் தனியாகப் பார்க்கும் போது தாங்க முடியவில்லையே.

வாரம் தவறாது அரசடி ஞான வைரவருக்கு நீ சென்று விளக்கேற்றியதெல்லாம் வீண் தானா? தச்சந்தோப்பு பிள்ளையாருக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நீ கட்டிக் கொடுத்த மாலைகள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீர் தானா?

இத்தனை நடந்த பிறகும் இந்தக் கடவுளை நம்புகிறாயே வைஷு... நாள் தவறாது அனைத்துத் தெய்வங்களையும் நீ வணங்கியும் கூட எல்லோரும் சேர்ந்து உன் வாழ்க்கையைச் செப்பனிடாமல் போய் விட்டார்களேம்மா...

சின்னச் சின்ன விசயங்களில் கூட உன் முடிவுகளில் மிகத் தெளிவாகவும் தீர்மானமாகவும் இருக்கும் நீ உன் வாழ்க்கை விசயத்தில் எப்படிக் கோட்டை விட்டாய் வைஷு...? இத்தனை இளம் வயதில் தனியாக இவ்வளவு வருடங்களாக எப்படி இந்த சமூகத்தைச் சமாளித்தாய்?

சின்ன வயதில் உன் கூடவே இருந்து உன் நலனைக் கவனித்த நான் உனக்கு உறுதுணையொன்று தேவைப்பட்ட போது உன்னை விட்டுத் தூரமாய் இருந்து விட்டேனே. இப்போது யாரோடும் தொடர்பில்லாமல் இருந்த என் மீது தான் கோபம் வருகிறது.'

வீட்டுக்கு வந்த நேரமிருந்து தனக்குள்ளேயே மறுகியவனின் எண்ணங்கள் வைஷாலியைச் சந்தித்த ஆரம்ப நாட்களை நோக்கி நகர்ந்தது.

பாடசாலையின் முதன் நாள் வெள்ளைச் சீருடையில், வெள்ளைக் காலுறை முழங்காலுக்குச் சற்றுக் கீழேயிருக்க, வெள்ளை நிறக் காலணியணிந்து, தலையில் நடு உச்சி வகிடெடுத்து கறுத்த ரிபனால் பூ முடிச்சிட்ட இரு கீரைப் பிடிகளும், நெற்றியில் புருவ மத்தியில் இட்ட கறுப்புப் பொட்டுக்கு மேலே ஒற்றைக் கீற்றாய் திருநீற்றுப் பூச்சும் முதுகில் தொங்கிய பையும் தோளுக்குக் குறுக்காய்த் தொங்கிய சிவப்பு நிற தண்ணீர்ப் போத்தலுமாய் தகப்பனின் துவிச்சக்கர வண்டியிலிருந்து இறங்கி அவர் கையைப் பிடித்துக் கொண்டு மருண்ட விழிகளோடு வந்து கொண்டிருந்தவளையே பார்த்துக் கொண்டிருந்தான் சஞ்சயன். அவளைப் பார்க்க அவனுக்குத் தான் விளையாடும் தன் வீட்டு முயல் குட்டி தான் நினைவுக்கு வந்தது.

உடனேயே முயல் குட்டி என்று அவளுக்குப் பட்டப் பெயரும் மனதுக்குள் சூட்டிக் கொண்டான். வகுப்பறையில் தந்தை கொண்டு வந்து விட்டுச் செல்ல சிறு பயத்துடன், எப்போதடா அழுவோம் என்றிருந்தவளின் அருகில் அமர்ந்து அவளோடு முதல் நாளே நட்பாகிக் கொண்டான்.

சஞ்சயனின் அப்பாவின் பெயரும் வைஷாலியின் பெயரும் ஒரே எழுத்தில் ஆரம்பிப்பதால் வகுப்பறைப் பதிவேட்டில் கூட இருவரது பெயரும் அடுத்தடுத்தே வரும். அதனால் ஓரளவு அனைத்து சந்தர்ப்பங்களிலும் வைஷாலியும் அவனும் இணைந்தே செயற்படக் கூடியதாக இருந்தது.

அந்தச் சிறு வயதில் இருந்தே சஞ்சயனால் அவனுக்கும் வைஷாலிக்கும் இடையில் யாரும் வருவதைத் தாங்க முடிவதில்லை. வீட்டுப்பாடம் செய்து விட்டு அவர்களது பாடக்கொப்பிகளை அடுக்கி வைக்கும் போது கூட அவளதுக்கு அடுத்து இவனதை வைப்பான். இடையில் யாரும் வைத்து விட்டால் போதும். உடனே மாற்றி விடுவான். சில நேரங்களில் மற்றைய மாணவர்களோடு இந்த இடப் பிரச்சினைக்காகச் சண்டை போடுவதும் உண்டு.

> **அந்தச் சிறு வயதில் இருந்தே சஞ்சயனால் அவனுக்கும் வைஷாலிக்கும் இடையில் யாரும் வருவதைத் தாங்க முடிவதில்லை. வீட்டுப்பாடம் செய்து விட்டு அவர்களது பாடக்கொப்பிகளை அடுக்கி வைக்கும் போது கூட அவளதுக்கு அடுத்து இவனதை வைப்பான். இடையில் யாரும் வைத்து விட்டால் போதும். உடனே மாற்றி விடுவான். சில நேரங்களில் மற்றைய மாணவர்களோடு இந்த இடப் பிரச்சினைக்காகச் சண்டை போடுவதும் உண்டு.**

சில நேரங்களில் வகுப்பில் மாணவர்கள் அமர்ந்திருக்கும் ஒழுங்கு மாற்றப்பட இவன் வைஷாலிக்குப் பக்கத்தில் அமர முடியாமல் தவித்துப் போவான். அவ்வாறான சந்தர்ப்பங்களில் இவன் பரீட்சைக் காலத்தை ஆவலாய் எதிர்நோக்கியிருப்பான். மற்ற மாணவர்கள் பரீட்சை பற்றிய பயத்தில் இருக்க இவனோ வருகைப் பதிவேட்டு ஒழுங்கின்படி தன் அருகே இருக்கப்போகும் வைஷாலியைப் பார்த்துக் கொண்டிருக்கலாமே என்று புளகாங்கிதம் அடைவான்.


வைஷாலி என்றால் அவனுக்குப் பிடிக்கும். ரொம்ப ரொம்பப் பிடிக்கும். ஆறு வயதில் அவளைக் கண்ட நாள் முதலாய்ப் பிடிக்கும். காரணம் கேட்டால் இன்னதென்று சொல்லத் தெரியவில்லை.

இத்தனைக்கும் வைஷாலி ஒன்றும் கண்டதும் ஆளை மயக்கும் பேரழகியும் கிடையாது. வெள்ளைத் தோலும் கிடையாது. உயரம் கூடக் குறைவு எனலாம். வகுப்பறையில் உயரத்தின் படி விடும் போது அவள் முதலாவது வரிசையில் அமர வேண்டியிருக்கும். கொஞ்சம் ஒல்லிப்பிச்சான் வேறு. இருந்தாலும் ஏதோ ஒரு காந்த சக்தி அவளிடம் இருக்கத்தான் செய்தது. துறுதுறு செய்கைகளாலும் கலகல பேச்சாலும் கவர்ந்தாளோ என்னவோ?

குழந்தை மனது என்பது எதனையும் எதிர்பார்ப்பின்றி அன்பால் மட்டுமே அணுகும் வயதென்பதாலோ என்னவோ சஞ்சயனுக்கு வைஷாலியைப் பிடித்தது. அவளிடமிருந்து எதையும் எதிர்பார்க்காது அவளிற்குத் தனது அன்பை மட்டுமே பரிசாக வழங்கிக் கொண்டிருந்தான். அவள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அவள் எதற்காகவும் அழக் கூடாது. அது ஒன்றேதான் அவன் நோக்கம், எண்ணம், குறிக்கோள். அவளுக்கு ஒன்றென்றால் துடித்துப் போய் விடுவான்.

**இவள் கனவு நனவாகுமா?**

# மறைக்கப்பட்ட இடம்



ஆதவன்

வாகன இரைச்சலும் கார்ன் சத்தமும் காதைப் பதம் பார்க்கும் ஒரு மாலை நேரத்தில் வெயில் தாண்டு கொண்டிருந்தது. திடீரென்று ஒரு பெரிய சத்தம் கடைகளின் உள்ளே நின்றவர்கள் பதறி வெளியே வந்தார்கள். அங்கே ஒரு **25** அல்லது **26** வயது மதிக்கத்தக்க இளைஞன் சாலையோரம் தூக்கி வீசப்பட்டுக் கிடந்தான்.

குளப்பிட்டி சந்தியில் ஆனைக்கோட்டையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் காங்கேசன் துறை  வீதியில் ஏற யாழ்ப்பாணம் நோக்கிப் போய் கொண்டிருந்த லொறி மோதியிருந்தது. இரத்த வெள்ளத்தில் கிடந்த அவனின் மூச்சு இன்னும் மெதுவாக இழுத்தது. விரைவாக வைத்தியசாலைக்கு அனுப்பிவிட்டு அவனின் முதுகுப்பையை பொலிஸ் ஆராய்ந்து தகவல்களை எடுத்து வீட்டுக்குச் சம்பவத்தை தெரிவிப்பதில் மும்முரமாக இருந்தனர். சுற்றி நின்றவர்கள் விடுப்புப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

“எவ்வளவு பட்டும் திருந்தாத ஜென்மங்கள். கண்மண் தெரியாமல் ஓடினால் கடைசில இப் பிடித்தான்” என்று வழமையான அர்ச்சனைகளுடன் கூட்டம் நகர்ந்தது.

அதிகாலை **5.30** கொழும்பிலிருந்து யாழ் நோக்கிச் செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில் அந்தப் பெட்டியில் முக்கால் வாசிப் பயணிகள் இருந்தனர். மூன்றாம் வரிசை ஜன்னல் ஓரம் **65** வயது மதிக்கத்தக்க முதியவர் தூரத்தில் புலராத இருட்டிலும் எதையோ வெறித்துப் பார்த்தபடி இருந்தார். வெண்ணிற வேட்டியும் மேல் சட்டையும் திருநீறுக் குறியுடன் அவரின் முகம் வெளித்தோற்றத்தில் பிரகாசமாக இருந்தது. ஆனால், ஒரு பெரும் சோகம் முகத்தில் படர்ந்திருந்தது.  இடையிடையே பெருமூச்சும் வெளிப்பட்டது.

காந்தன் டிக்கெட்டை சரி பார்த்து தனது இருக்கையின் மேல் தட்டில் பையை வைத்தான்.  துடிப்பான **27** வயது இளைஞன். பல்கலைக் கழகத்தில் பொறியியல் முடித்துக் கொழும்பில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறான்.  பொறியியல் துறையில் பெண்கள் குறைவு. தமிழ் பேசும் சக மாணவிகள் எண்ணிக்கை பத்திலும் குறைவு. காந்தனும் அதில் ஒருவரிடம் மனதைப் பறிகொடுத்தான். ஒருதலைக் காதல் முடிவு கேட்டு கையில் வாங்கினான். இப்போது அவன் முகம் மிகவும் பிரகாசமாகப் பெரும் எதிர்பார்ப்புடன் அந்தப் பயணத்தைத் தொடங்கியது. பெண் பார்த்து முடிவாகி விட்டது. எழுத்துக்குப் போகிறான். அவனது இருக்கையும் அந்த முதியவருக்கு பக்கத்தில் தான் இருந்தது.

வசதியாக அமர்ந்தவன் சுற்றுமுற்றும் பார்த்தான். பின்னால் தன்னை பார்த்து நக்கலா, சிரித்த இரு இளம் பெண்களை ஓரக்கண்ணால் அலசி விட்டு கண்டும் காணாமல் இருந்துவிட்டான். கலியாணம் முடிவு செய்தது முதல் ஏதோ அவன் மனம் இதைப் பெரிதாக லயிக்கவில்லை. கவனத்தைத் திருப்பி பக்கத்தில் இருந்தவரிடம் காந்தன் மெதுவாப் பேச்சைக் கொடுத்தான்.

“ஐயா எவடம் யாழ்ப்பாணம்”

திரும்பிய முதியவர் வலுக் கட்டாயமா ஒரு சிரிப்பை உதிர்த்து, “அராலி” என்றவர் மீண்டும் ஜன்னலூடு பார்க்கத் தொடங்கினார்.

“கொழும்புக்கு அடிக்கடி வந்து போவீங்களா?”

“இல்லை தெரிந்தவர் ஒருவரின் மரண வீட்டுக்கு நேற்று வந்தனான்”.

கொழும்பு நகரத்தை தாண்டி தென்னந்தோப்புகள் இடை இடையே கிராமங்கள் ஊடு ரயில் போய்க் கொண்டிருந்தது. எக்ஸ்பிரஸ் ரயில் எண்டாலும் சத்தமும் குலுக்கலும் அதிகமாகவே இருந்தது.

“இது பழைய ரயில் தண்டவாளம் வவுனியாவுக்கு அங்கால சீரா இருக்கும்” என்றான் காந்தன். அவர் பெரிதா அதைக் கண்டுக்கவில்லை. சிறிதாகத் தலையை ஆட்டிவிட்டு ஜன்னல் பக்கம் திரும்பிவிட்டார். அவன் அவரின் கவனத்தை ஈர்க்க மீண்டும் பேச்சைக் கொடுத்தான்.

“ஐயா ஓய்வு எடுக்காமல் உடனே வெளிக்கிட்டியள்?” பெரியவர் கண்கள் கலங்க திரும்பினார். அவரின் முகமாற்றத்தைக் கணித்தவன் “என்ன நடந்தது?” என்று பரிவுடன் கேட்டான்.

“எண்ட மகன் நேற்றுப் பின்நேரம் மோட்ட பைக் அக்சிடன் பட்டுட்டான். அதுதான் உடனடியாக வெளிக்கிட்டன். இப்ப பெரியாஸ்பத்திரியில் சேத்திருக்கிறார்கள்” என்றார்  கண்ணீர் வழிய.

காந்தன் எதுவும் மேற்கொண்டு கேட்கவில்லை. ஆனால் அவர் தொடர்ந்து தனது மகனைப் பற்றி சொல்லத்தொடங்கினார்.  அன்பான அந்த தந்தையின் உள்ளக்கிடக்கை வார்த்தைகளாக உதிர்ந்தது.

ஒரே மகன், **26**வயது இளைஞனுக்கு இருக்கும் துடிப்பும் வேகமும் தனது மகன் மேல் அவருக்கு பெருமையை விட பயத்தை அதிகம் தந்திருந்தது. அவசியமாக பைக் அவனுக்குத் தேவை என்பதால் அவர் தனது சேமிப்பை கட்டுப்பணமாக் கொடுத்து வாங்கியிருந்தார். தனது சம்பளத்தில் மாதம் மாதம் அவனே டியூ கட்டிக்கொண்டிருந்தான்.

அயலவர்கள் நண்பர்கள் பலர் தனது மகன் ஓடும் வேகம் பற்றி தனக்குச் சொல்லும் புறம்கூறலை கேட்டிருக்கிறார். தனது மகனை பலமுறை எச்சரித்தும் பயனில்லை. இளமை பெரும்பாலும் விவேகத்தை விட வேகத்தையே வரவேற்கும் போலும். அதுவும் ஒரு போதைதான். இருந்தாலும் அண்மைக்காலமாக பல விபத்துச் செய்திகள் அவனை சற்றுப் பயத்துடன் பொறுப்புள்ள மனிதனாக மாற்றிவிடும் என்றும் நம்பினார். அவனின் கவனமின்மையை அவர் சகித்துக் கொண்டு இருந்தாலும் அது வயதின் வேகம் என்றும் சில வேளைகளில் தன்னைச் சமாதானப்படுத்துவார்.

மகனுக்கு சாதகம் பாத்து இப்ப காலம் சரியில்லை என்பதால் கல்யாணப் பேச்சு பெண் பார்க்கும் படலம் வருகிற வருடம் பிற்போட்டிருப்பதையும் வேதனையோடு பகிர்ந்தார்.

“ஐயா எப்படி நடந்தது? ஏதாவது விபரம் கிடைச்சதா?” என்று காந்தன் வினவினான்.

“மனிசிதான் பொலிஸ் தகவல் தந்ததாகவும் குளப்பிட்டியில் மெய்ன் ரோட்டில் ஏறேக்க மற்றப் பக்கத்தில் இருந்து வந்த லொறி லேசாத் தட்டி விட்டது. அவன் அதைக் கவனிக்கவில்லை” என்றார். உடல் முடியாத மனைவி தனியே என்ன செய்வாள் என்ற ஆதங்கம் அவரின் வார்த்தைகளில் தெரிந்தது.

“சனங்களுக்கு தொடந்து நடக்கும் இந்தமாதிரி விபத்துகள் சாதாரணமாகிவிட்டது”. என்றவன், அடிபடுகின்றவன் குடும்பம் சார்ந்தவர்களுக்கும் புயலை ஏற்படுத்தி விடுவதோடு அந்த நிலைக்குத் தள்ளப்பட்டவர்களுக்கு அதன் வலி மீதி நாட்களை நரகமாக்கிவிடும் என்று தனக்குள்ளே நினைத்துக் கொண்டான்.

“இவங்கள் பெடியள் அவதானம் இல்லாமல் வேகமாக ஓடுவதும் சாகசம் புரிய நினைப்பதும்தான் இந்த மாதிரி விபத்துகளுக்குக் காரணம்” என்றார் பெரியவர் சலிப்பும் கவலையும் தொற்ற.

காந்தன் சிறிது சிந்தித்து விட்டு, ‘ஐயா பெரும்பாலான விபத்துகள் நடப்பது எங்கெல்லாம் சிறு வீதிகள் பிரதான சாலையில் தொடுக்கும் இடங்களாகவே இருக்கும்.’

“ஏன் இவ்வாறான இடங்களில் எல்லாம் சிக்னல் லைட் போடுறதுதானே?”

“அது அவ்வளவு இலகுவாக இராது.  எல்லா வீதிச் சந்திப்பிலும் சிக்னல் லைட் சமிக்கை பொருத்துவது சாத்தியம் இல்லை.”

“அப்ப என்ன செய்தால் இதைத் தடுக்கலாம்?” மீண்டும் கேட்டார்.

“இங்கு பிரதான பிரச்சினை பக்கத்து பாதையை மறைத்து மூலைக் காணிகளில் கட்டடமும் உயரமான மதில்களும் வரும் வாகனத்தை அவதானிக்க முடியாமல் பிரதான சாலையில் ஏறிய பின்னரே அது சாத்தியமாகிறது. சிறு வீதிகளில் வேகத் தடைகளும் எதிர்ப்பக்க மூலையில் கண்ணாடிகள் பொருத்துவதும் இந்த மறைப்புச் சந்திகளை பாதுகாப்பாக மாற்றும்” என்றவன் திரும்பிப் பார்த்தான்.

அவர் காலை வெயில் முகத்தில் அடிக்க  அதை கைகளால் மறைத்தபடி வெளியே கவனத்தைத் திருப்பியிருந்தார். காந்தனும் அவரைக் குழப்பாமல் சிந்தனையுடன் அயர்ந்து போனான். தன்னை யாரோ தூக்கி போட்ட உணர்வுடன் விழித்தான். ரயில் வவுனியாவில் குலுக்கலுடன் நின்றது. நேரம் **11.30** பக்கத்தில் முதியவர் எதையும் அசட்டை செய்யாமல் சிந்தனையில் இருந்தார்.

“ஐயா ஒரு வடையும் டீயும் வாங்கியாரன்” என்று கண்டீனுக்கு வெளிக்கிட்டான்.

“வேண்டாம் தம்பி எனக்குப் பயண நேரம் சாப்பாடு ஒத்துவராது” என்றவர் ஜன்னல் அருகில் சட்டத்தில் சாய்ந்து கொண்டார்.

காந்தன் அவரின் சிந்தனையை மாற்ற தனது பையில் இருந்து அன்றைய பத்திரிகை ஒன்றை எடுத்து கொடுத்தான்.

“ஒண்டும் யோசிக்காமல் இதை பாருங்கோ எல்லாம் நல்லதே நடக்கும்” என்று சொல்லிவிட்டு ரயில் கண்டீனை நோக்கிநடந்தான். பத்திரிகையை மேலோட்டமாப் பார்க்கத் தொடங்கினார் பெரியவர்.

கன்ரீனில் சாப்பிட்டு விட்டு தண்ணீர்ப் போத்தலுடன் தனது இருக்கைக்கு வந்தவன் அவரை பார்த்தான். அசந்து தூங்கிக் கொண்டு இருந்தார். கையில் இருந்த பத்திரிகை நழுவி கீழே விழுந்து கிடந்தது. குனிந்து எடுத்தவன் கண்கள் விரிந்து கிடந்த மூன்றாம் பக்கத்தில் கீழ் மூலையில் அந்தச் செய்தியில் ஊன்றி நின்றது.

அவரைத் தட்டி எழுப்பிப் பார்த்தான் எந்த அசைவும் இல்லை. அவசரமாக தண்ணியை அவர் முகத்தில் தெளித்தான். மெதுவாக கண்விழித்தவர் விக்கி விக்கி அழ ஆரம்பித்துவிட்டார்.

■

# யார் அந்த ஏழு பேர்?

**“தொழிலாளர் நலன்பேணுவதில் தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். ஆனால் பல முதலாளிகள் நுட்பமான வலைப்பின்னல் மூலமாகத் தொழிலாளர்களுக்குச் சட்ட ரீதியாக வழங்கக் கூடிய நன்மைகளை வழங்காமல் தமது பணப் பைகளை நிரப்பி வருகின்றனர். இதனைத் தடுப்பதற்குத் தொழிலாளர்களைத் தொழிற்சங்க ரீதியாக வலுப்படுத்த வேண்டியுள்ளது. ஆனால், தொழிலாளர்களது உரிமைகளை மறைகரம் கொண்டு அடக்குகின்றனர்.”**

– வேதநாயகம் தபேந்திரன்

ஏழு பேர் இருந்தால் போதும். ஆனால் அதற்கு முன்வரும் அந்த ஏழு பேரைக் கண்டுபிடிப்பதுதான் கஷ்டம். கண்டுபிடித்தாலும் அதைத் தொடர்வதற்கு கடினமாக உழைக்கும் மூன்று பேர் இருப்பதுதான் மகா கஷ்டம்.



தொழிற்சங்க அமைப்பு மூலமாகத் தொழிலாளர்கள் நலன்பேணுவதற்கு ஒரு தொழிலில் 7 பேர் இருந்தால் போதும். ஆனால் ஏழு பேர் இணைந்து ஒரு தொழிற்சங்கத்தை அமைப்பதற்குரிய முனைப்புகள் எல்லாத் தொழில்களிலும் இடம் பெறுவதில்லை.

அரச துறையில் எல்லா உத்தியோகத்தர்களும் தமக்கெனத் தனியான தொழிற்சங்கங்கள் உருவாக்கிச் செயற்படுத்துகின்றனர்.

ஆனால், தனியார் துறையில் இதற்குரிய முனைப்புகள் மிகவும் குறைவானது. சில துறைகளில் இல்லை எனலாம். குறிப்பாகத் தனியார் வணிக நிலையங்களில் கடமையாற்றும் பணியாளர்கள் தமது நலன்களைப் பேணுவதில் தொழிற்சங்க அமைப்புகளை உருவாக்கிக் கொள்வதில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர்.

இதனால் நாளுக்கு 8 மணித்தியால வேலை, வாரத்தில சனி, ஞாயிறு இரு நாள் விடுமுறை, ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்ற நிதி நன்மைகள், குறுகிய நேர விடுமுறைகள், ஏனைய அத்தியாவசிய விடுமுறைகள் போன்ற நன்மைகளை முற்றாக அனுபவிக்க முடியாதவர்கள் பலர் உள்ளனர். பகுதியளவில் அனுபவிக்க முடியாதவர்கள் சிலர் உள்ளனர்.

தொழிலாளர் நலன்பேணுவதில் தொழில்த் திணைக்கள உத்தியோகத்தர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். ஆனால் பல முதலாளிகள் நுட்பமான வலைப்பின்னல் மூலமாகத் தொழிலாளர்களுக்குச் சட்ட ரீதியாக வழங்கக் கூடிய நன்மைகளை வழங்காமல் தமது பணப் பைகளை நிரப்பி வருகின்றனர்.

இதனைத் தடுப்பதற்குத் தொழிலாளர்களைத் தொழிற்சங்க ரீதியாக வலுப்படுத்த வேண்டியுள்ளது. ஆனால், தொழிலாளர்களது உரிமைகளை மறைகரம் கொண்டு அடக்குகின்றனர்.

அரச துறையில் அமய விடுமுறை, ஓய்வு விடுமுறை என்பன ஊழியர்களுக்குக் கிரமமாக வழங்கப்படுகின்றன. விடுமுறை என்பது உண்மையில் ஒரு சலுகைதான். அது உரிமையல்ல. ஆனால் பெரும்பாலான அரச அலுவலகங்களில், பாடசாலைகளில் அவை உரிமை என்பது போல வழங்கப்படுகின்றன.

தனியார் துறை சில துறைகளில் மட்டும் சட்ட ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்டு இருக்கின்றது. அவற்றின் ஊழியர்கள் முறையாக யாவற்றையும் அனுபவிக்கின்றனர்.

ஆனால் வணிக நிலையம் ( கடை ) போன்ற அமைப்புகளில் பல இடங்களில் ஊழியர்களுக்குரிய உரிமைகள், சலுகைகள் போன்ற கதைக்கே பெருமளவு இடமில்லை. முன்னைய காலங்களில் என்றால் பரவாயில்லை.

தற்போது எல்லா இடங்களுக்கும் சீ.சீ.ரி.வி கமெரா வந்து விட்டது. எட்டுத் தொடக்கம் பத்துக் கடைகள் வைத்திருக்கும் ஒரு முதலாளி சீ.சீ.ரி.வி கமெராவைப் பூட்டி விட்டு தனது வீட்டில் இருந்தபடியே எல்.சீ.டி ரி.வி மூலமாகவே அல்லது ஸ்மார்ட் தொலைபேசியில் பார்த்துக் கொண்டிருப்பார்.

ஒரு ஊழியர் ஒண்டுக்கு, இரண்டுக்குப் போவதற்குக் கூட விடாமல் அடக்கு முறைகளை ஏவி விடும் முதலாளிகளும் சிலர் உள்ளனர்.

தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காகத் துறைகள் ரீதியாக அல்லது பிரதேச ரீதியாகத் தொழிற்சங்கங்களை அமைத்துத் தமது உரிமைகளை நிலைநாட்ட முன்வரல் வேண்டும்.

சட்டங்கள் உரிமைகள் தொடர்பாகக் கதைத்தால் வேலையால் தூக்கி விடுவார்கள். எங்கே போவது? என்ன செய்வது? போன்ற நிலைமைகளைக் கூறுகின்றனர். ஆனால் இன்று எமது நாட்டில் தொழிலாளர் பற்றாக்குறை அதிகமாக உள்ளது.

குடித்தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டுத் தரவுகளின் படி எமது நாட்டின் சனத்தொகை அதிகரிப்பு நூற்றுக்கு அரை (0.5 ) வீதமாகும். ஆகவே தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்கான பேரம் பேசலைச் சட்ட ரீதியாகச் செய்ய வேண்டும்.

எல்லா முதலாளிகளுமே கொடுமைக்காரர்கள் அல்ல. தர்மசிந்தனை உள்ள முதலாளிகள் தமது ஊழியர்களுக்கு வழிகாட்டித் தொழிற்சங்கம் அமைப்பதற்கான ஊக்குவிப்பை வழங்கலாம். ஏழு ஊழியர்கள் ஒன்று சேர்ந்து இயங்கி ஆறுமாத காலத்துக்குப் பின்னர் பதிவிற்கான விண்ணப்பத்தைக் கொழும்பு நாரஹேன்பிட்டியவிலுள்ள தொழிற்சங்கப் பதிவாளர் காரியாலயத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.



விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் போது பொதுக் கூட்ட அறிக்கை, பொதுக் கூட்ட அறிக்கையில் தொழிற்சங்கப் பதிவாளர் காரியாலயத்தில் பதிவு செய்ய வேண்டுமென்ற தீர்மானம், கூட்டத்தில் பங்குபற்றியோரின் பெயர், முகவரி, கையொப்பங்கள், வங்கிக் கணக்கு விபரம், யாப்பு போன்றவை இருத்த ல் வேண்டும். சங்கத்தின் செயலாளர் அதில் ஒப்பமிட்டு இருத்தல் வேண்டும்.

தொழிற்சங்கப் பதிவாளர் விண்ணப்பத்தைப் பெற்று ஆட்சேபனை எதுவும் கிடைக்காதவிடத்து ஆறு மாத காலத்திற்குப் பின்பாகப் பதிவுச் சான்றிதழை அனுப்பி வைப்பார்.

பின்னர் வருடா வருடம் தொழிற்சங்கத்தின் செயலாளர் செயற்பாட்டறிக்கை, கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கை போன்றவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

தனியார் துறையின் ஊழியர்கள் சுரண்டப்படாமல் ஓய்வு காலத்திலும் பொருளாதார நன்மைகளை அனுபவித்து நிம்மதியாக வாழ வழி செய்யப்படல் வேண்டும். அது மட்டுமல்ல தமது சேவைக் காலத்தில் அடிப்படை உரிமைகளுடன் நிம்மதியாகப் பணியாற்ற வகை செய்யப்படல் வேண்டும்.

அரச துறையில் பல தொழிற்சங்கங்கள் கட்சிகளுக்கான தொழிற்சங்கமாக மாறித் தமது தொழிலாளர்களைக் கைவிட்ட நிலைமை உண்டு. அது போலத் தனியார்துறை ஊழியர்களின் தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிகளின் எடுபிடிகளாக மாறித் தமது தொழிலாளர் பலத்தைக் காட்டித் தமது வயிறு வளர்க்கும் துன்ப நிலைமை உண்டு.


இது போன்ற சாபக்கேடுகளால் தொழிலாளர்கள் தொழிற்சங்க அமைப்புகளில் நம்பிக்கை வைக்காத நிலைமையும் உண்டு. ஆனாலும் இது போன்ற காரணங்களைக் கணக்கெடுக்காமல் தொழிலாளர்களின் நலன்களைப் பேணும் தொழிற்சங்கங்கள் உருவாக்க வேண்டும். தூய்மையாகச் செயற்படுதல் வேண்டும்.

முதலாளித்துவம் நாளுக்கு நாள் நவீன வடிவங்களில் சுரண்டித்தான் கொழுத்துக் கொள்கிறது. அதன் கோரத்திலிருந்து தப்புவதற்குத் தொழிலாளர்கள் தம்மைத் தொழிற்சங்க அமைப்பு ரீதியாகக் கட்டி எழுப்புவதே காலத்தின் தேவையாகும். ■

ரமணி

# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

06



சினிமாப் பின்புலம் இல்லாதவர்களுக்கு சினிமா வாய்ப்பு இலகுவாகக் கிடைப்பதில்லை. திறமை இருந்து வாய்ப்புக் கிடைத்தாலும் நந்தி மாதிரி சிலர் குறுக்கே நிற்பார்கள். நடிகர் திலகம் சிவாஜிகணேசன், இசைஞானி இளையராஜா ஆகிய இருவருக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டாம் என சிலர் தடுத்தார்கள். ஒரு சிலரால் தடுக்கப்பட்டபோதும் அவர் தான் வேண்டும் என உறுதியாக இன்னொருவர் நின்றதால் திரை உலக உச்சத்தைத் தொட்டவர்களின் பட்டியல் மிகப்பெரிது. புதிய இசை அமைப்பாளர் வேண்டாம் என அன்றைய கதாநாயகனால் நிராகரிக்கப்பட்ட எம்.எஸ்.விஸ்வநாதனின் ஆயிரக் கணக்கான பாடல்கள் இன்றும் மனதில் ரீங்காரமிடுகின்றன.

எம்.எஸ்.விஸ்வநாதன் தனது சிறுவயதில் ஹார்மோனியம் வாசிக்கக் கற்றுக்கொண்டார். தன்னுடைய 13 ஆம் வயதில் மேடையில் தன் திறனைக் காட்ட ஆரம்பித்த விஸ்வநாதன். சினிமாவில் நடிக்கும் ஆர்வத்தினால் சென்னைக்குச் சென்று ஜூபிடர் பிக்சர்ஸ் நிறுவனத்தில் எடுபிடி வேலைகள் செய்து வந்தார். அப்பொழுது அவருடைய மாதச் சம்பளம் வெறும் மூன்று ரூபாய் மட்டுமே. அப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் போது சிறுசிறு நாடகங்களுக்கு இசை அமைப்பாளராகப் பணியாற்றினார். அதன் பிறகு சிறந்த இசையமைப்பாளராக அவதாரம் எடுத்தார்.அந்தக் காலத்து பிரபல இசை அமைப்பாளர்களான சி. ஆர். சுப்புராமன், எம்.எஸ் சுப்பையா நாயுடு ஆகியோரிடம் உதவியாளராகப் பணியாற்றினார்.

அப்போது சில பாடல்களுக்கு விஸ்வநாதன் இசையமைத்தார். தயாரிப்பாளர் ஈச்சப்பன் தான் யாரிக்கும் படத்தில் புதிய இசை அமைப்பாளர் ஒருவரை அறிமுகம் செய்ய விரும்பினார். மத்தியூ என்பவருடன் இணைந்து ஈச்சப்பன் தயாரிக்கும் படத்தை நாகூர் இயக்கினார். அன்றைய முன்னணி நட்சத்திரமான எம்.ஜி. ஆர் நடிப்பில் “ஜெனோவா” எனும் படம் தயாராகிக் கொண்டிருந்தது. ஈச்சப்பனின் நண்பனான ராஜா என்பவர் எம்.எஸ்.விஸ்வநாதனை அவருக்கு அறிமுகப்படுத்தினார். எம்.எஸ்.வியைப் பார்த்ததுமே ஈச்சப்பனுக்குப் பிடித்துவிட்டது. அவர்தான் இசை அமைப்பாளர் என முடிவெடுத்துவிட்டார்.

கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்த எம்.எஸ்.விஸ்வநாதன் தனது முழுத் திறமையையும் வெளிக்காட்ட வேண்டும் என முடிவெடுத்தார். பகலில் சுப்புராமனுக்கு உதவி செய்துவிட்டு இரவில் ஜெனோவா படத்துக்கு இசை அமைக்கும் வேலைகளில் முழுமூச்சாக ஈடுபட்டார்.

ஒரு கிழமையில் நான்கு பாடல்களுக்கு இசை அமைத்துவிட்டு போட்டுக் காட்டினார். தயாரிப்பாளார்கள், இயக்குநர் மற்றும் அங்கிருந்த அனைவரும் நான்கு பாடல்களையும் விரும்பி ரசித்தார்கள். அவற்றை ஒலிப்பதிவு செய்வதற்கு ஈச்சப்பன் ஏற்பாடு செய்தார். தனது குருவான சுப்புராமனிடம் ஆசி பெற்றுவிட்டு ஒலிப்பதிவு கூடத்துக்குச் சென்றார் எம்.எஸ்.விஸ்வநாதன். நான்கு பாடல்களும் மிகப் பிரமாதமாக ஒலிப்பதிவாகின அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். நான்கு பாடல்களும் அனைவரையும் கவர்ந்தன. பாடல்களைக் கேட்கும்படி எம். ஜி.ஆருக்கு ஈச்சப்பன் அழைப்பு விடுத்தார். எலோருக்கும் பிடித்த நான்கு பாடல்களும் எம்.ஜி.ஆருக்குப் பிடிக்கவில்லை. அந்தப் பாடல்களைக் கேட்காமலே பிடிக்கவில்லை என்றார் எம்.ஜி.ஆர்.

ஆரம்பத்தில் இருந்தே எம்.எஸ்.விஸ்வநாதன் இசை அமைப்பதை எம்.ஜி.ஆர் விரும்பவில்லை.

“இசையைப் பற்றி விஸ்வநாதனுக்கு என்ன தெரியும்? ஜூபிடர் பிக்ஸர்ஸில் ஆபீஸ் போயாக இருந்தவரை இசையமைப்பளராக்கி உள்ளீர்கள். உடனடியாக அவரை மாற்றுங்கள்” என எம்.ஜி.ஆர் கண்டிப்புடன் கூறினார்.

மருதநாட்டு இளவரசி, மர்மயோகி, சர்வதிகாரி போன்ற வெற்றிப்படங்களுக்குப் பின்னர் ஜெனோவாவில் நடிக்க எம்.ஜி.ஆர் ஒப்பந்தம் செய்யப்படார். அந்தப் படங்களின் பாடல்கள் மக்களைக் கவர்ந்தது போல ஜெனோவா படப் பாடலும் கவர வேண்டும் என்பதால் இசையைப் பற்றி ஒன்றும் தெரியாத விஸ்வநாதன் இசை அமைப்பதை எம்.ஜி.ஆர் விரும்பவில்லை. விஸ்வநாதனை மாற்றினால்தான் தொடர்ந்து நடிப்பேன் எனச் சொல்லி விட்டார். விஸ்வநாதனின் இசைப் பயணம் ஆரம்பமாக முதலே முடிவுக்கு வந்தது என அனைவரும் கருதினர். எம்.ஜி.ஆரின் நட்சத்திர அந்தஸ்து விஸ்வநாதனின் முன்னேற்றத்துகுத் தடையாக இருக்கப் போவதாகப் பலரும் கருதினர்.



ஆனால், தயாரிப்பாளர் ஈச்சப்பனை பாடல்கள் கவர்ந்ததால் விஸ்வநாதனைக் கைவிட அவர் தயாராக இல்லை. பாடல்களைக் கேட்டால் எம்.ஜி.ஆர் மனம் மாறிவிடுவார் என்று நினைத்து பாடல்களைக் கேட்க வரும்படி எம்.ஜி.ஆருக்கு அழைப்பு விடுத்தார். எம்.ஜி.ஆர் பாடல்களைக் கேட்க மறுத்து விட்டார். உடனடியாக இசை அமைப்பாளரை மாற்றும்படி கூறினார்.

எம்.ஜி.ஆரா- விஸ்வநாதனா என முடிவு செய்ய வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டது. விஸ்வநாதன் வெளியேற்றப்படுவார் என அனைவரும் நினைத்தனர். விஸ்வநாதன் மீது இருந்த நம்பிக்கையால் எம்.ஜி.ஆரைக் கைவிட ஈச்சப்பன் தயாரானார். அவர் அன்று அப்படி ஒரு முடிவு எடுத்ததனால் தான் விஸ்வநாதனுக்கு அங்கீகாரம் கிடைத்தது. எம்.ஜி.ஆருடன் தொடர்பு கொண்ட ஈச்சபன், “ஜெனோவா படத்துக்கு எம்.எஸ். விஸ்வநாதந்தான் இசை அமைப்பளர் அதில் எந்த வித மாற்றமும் இல்லை விஸ்வநதனின் இசையில் நடிக்க விரும்பினால் நடிக்கலாம். இல்லை என்றால் வேறு ஒரு நடிகரை கிரோவாக்குவேன்” எனச் சொன்னார். பிரபல நடிகரான தன்னையே ஒரு இசை அமைப்பாளருக்காக வெளியேற்ற ஈச்சப்பன் முடிவு செய்ததால் எம்.ஜி.ஆர் யோசித்தார்.



ஈச்சப்பனின் முடிவு எம்.ஜி.ஆரை யோசிக்க வைத்தது. அவரது நண்பர்களும் பாடல்களை ஒரு முறை கேட்டுவிட்டு முடிவு செய்யும்படி கூறினார்கள். விஸ்வநாதன் இசை அமைத்த பாடல்களைக் கேட்காமல் முடிவு செய்வது தவறு என்பதை எம். ஜி.ஆர் உணர்ந்தார். விஸ்வநாதன் இசை அமைத்த பாடல்களைக் கேட்பதற்கு ஏற்பாடு செய்யும்படி ஈச்சப்பனுக்கு அறிவித்தார்.

விஸ்வநாதன் இசை அமைத்த பாடல்களை எம். ஜி.ஆர் கேட்கப்போகிறார் என்ற தகவல் வெளியானதால் பரபரப்பு ஏற்பட்டது. விஸ்வநாதனின் இசையில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டி அவரை எம்.ஜி.ஆர் வெளியேற்றப் போகிறாரா? பாடல்களைக் கேட்டுவிட்டு பிடிக்கவில்லை எனச் சொல்லி விட்டு வெளியேறப் போகிறாரா அல்லது பாடல்கள் நன்றாக இருக்கிறது எனச்சொல்லி இருவரும் இணைந்து ஜேனோவாவில் பணியாற்றுவார்களா? என்ற பல கேள்விகள் விடையைத் தேடி உலா வந்தன.

விஸ்வநாதன் இசை அமைத்த பாடல்களைக் கேட்கக் கேட்க எம். ஜி.ஆரின் மனம் மாறத்தொடங்கியது. இவ்வளவு திறமை உள்ளவரா விஸ்வநாதன் என வியந்தார். தன்னால் எள்ளி நகையாடப்பட்ட விஸ்வநாதனின் மீது எம்.ஜி.ஆருக்கு மதிப்பு அதிகரித்தது. பாடல்கள் முடிந்ததும் எம்.ஜி.ஆர் என்ன சொல்லப் போகிறார் என்பதை அறிய அனைவரும் ஆவலாக இருந்தனர். விஸ்வநாதன் எங்கே? என்ற ஒற்றைக் கேள்வியை எம்.ஜி.ஆர் கேட்டார். விஸ்வநாதன் வீட்டுக்குப் போய்விட்டதாகக் கூறினார்கள். எம்.ஜி.ஆரின் கார் மந்தை வெளியில் விஸ்வநாதனின் வீட்டின் முன்னால் நின்றது. எம்.ஜி.ஆரைக் கண்டதும் விஸ்வநாதன் அதிர்ச்சியடைந்தார்.


“உங்களுடைய திறமையை அறியாது நிராகரித்துவிட்டேன்” எனக்கூறி தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்தார். ஜெனோவா படம் வெற்றிபெற்றது. பாடல்கள் அனைவரையும் கவர்ந்தன. எம்.ஜி.ஆர் நடித்த ஒரே ஒரு வேற்று மொழிப்படம் ஜெனோவா. மலையாளத்தில் வெளிவந்து இரண்டு மாதங்களின் பின்னர் தமிழில் வெளியானது. அதன் பின்னர் எம். ஜி.ஆருக்காக விஸ்வநாதன் இசை அமைத்த பாடல்கள் இன்றுவரை நிலைத்து நிற்கின்றன. தமிழகத்தில் மட்டுமல்லாது இலங்கைத் தேர்தல் காலத்திலும் எம். ஜி.ஆரின் பாடல்கள் பட்டி தொட்டி எங்கும் ஒலித்தன. எம்.ஜி.ஆரை முதலமைச்சராக்கியதிலும், அவரின் புகழை அடித்தட்டு மக்களிடம் கொண்டுபோய் சேர்த்ததிலும் விஸ்வநாதனின் பங்கு அளப்பெரியது.

விஸ்வநாதன், ராமமூர்த்தி இரட்டையர் தமிழ் சினிமாவின் முடிசூடா மன்னர்களாகத் திகழ்ந்தனர். எம்.ஜி.ஆருக்கும் சிவாஜிக்கும் ஒரே நேரத்தில் சிறந்த பாடல்களை விஸ்வநாதனும் ராமமூர்த்தியும் கொடுத்தார்கள். ராமமூர்த்தியைப் பிரிந்த பின்னரும் விஸ்வநாதன் தனது திறமையால் அற்புதமான பாடல்களைத் தந்தார். ■

# தெய்வ அருளால் நடந்தது - கங்கை அமரன்

பத்து வருடங்களுக்கு பிறகு இளையராஜாவின் இல்லத்திற்குச் சென்ற கங்கை அமரன் அவரை சந்தித்துப் பேசினார். இரு குடும்பங்களும் இந்த நிகழ்வை நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டிருந்தனர்.

சுமார் பத்து வருடங்களுக்கு பிறகு தனது அண்ணன் இளையராஜாவுடன் இணைந்து இருக்கிறார் கங்கை அமரன். இது குறித்து பேசிய அவர், ‘தெய்வ அருளால் இந்த சந்திப்பு நடந்துள்ளது’ என்றார்.



அண்ணன் இளையராஜாவும் தம்பி கங்கை அமரனும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பேசுவதை நிறுத்தி சுமார் பத்து வருடங்கள் ஆகின்றது. பாரதிராஜா போன்ற இருவருக்கும் பொதுவான நண்பர்களுடன் இளையராஜாவுக்கு முரண்பாடு ஏற்படும் போதெல்லாம் கங்கை அமரன் அவரை விமர்சித்து வந்திருக்கிறார். காப்பிரைட் குறித்து மறைந்த பாடகர் எஸ்.பி.பி க்கு இளையராஜா சார்பாக நோட்டீஸ் அனுப்பப்பட்ட போது, அதனை கடுமையாக சாடியிருந்தார் கங்கை அமரன். இதே போல் அவர்களுக்குள் உரசல் இருந்து வந்தது.

கடந்த பத்து வருடங்களாக இவர்கள் இருவரும் தங்கள் குடும்பங்களில் நடந்த நல்ல, கெட்ட காரியங்கள் எதிலும் கலந்துகொள்ளவில்லை. கங்கை அமரனின் மனைவி சமீபத்தில் இறந்த போதும் இளையராஜா அங்கு செல்லவில்லை, துக்கம் விசாரிக்கவில்லை. கருத்து வேறுபாடுகளை கடந்து இவர்கள் இருவரும் இணைந்திருப்பது அவர்களின் குடும்பங்களை தாண்டி இசை ரசிகர்களையும் மகிழ்ச்சிப்படுத்தியுள்ளது. ■

# புத்துணர்ச்சி தரும் கவிதைகள் நிறைந்த "புதையல் தேடி"

**இக்பால் அலி**

இன்றைய காலம் கவிதைகள் எழுதி கவிதைத் தொகுப்புக்கள் வெளியிடும் காலமல்ல. நாடு பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தத்தளிக்கும் கால ஓட்டத்தில் அந்நிய நாடுகளில் இருந்து கடனைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் எடுக்கும் பிரயத்தனங்கள் எல்லாம் தோல்வியிலேயே நிற்கின்ற வேளையில் ஏன் அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டும் நாம் உள்நாட்டுக்குள்ளே நல்ல வளங்களையும் வருமானத்தைத் தேடினால் பெற்றுக் கொள்ள இயலும் என்ற அடையாளத்தை ஒப்புவிக்கின்ற தலைப்பிலான "புதையல் தேடி" என்னும் கவிதைத் தொகுதி யொன்றை எஸ். ஏ. இஸ்மத் பாத்திமா வெளிக்கொணர்ந்துள்ளார். இது இவரது இரண்டாவது நூலாகும். 2017 களில் "இரண்டும் ஒன்று" என்ற பெயரில் தமது முதலாவது கவிதைத் தொகுதி நூலை வெளியிட்டுள்ளார்.




கொரோனாவுக்கு முற்பட்ட காலம் இலங்கையின் பல பாகங்களிலும் நடைபெற்ற நூல் வெளியீடுகள் இலக்கிய கலை கலாசார நிகழ்வுகள் எல்லாம் ஓய்ந்து தற்போது மெல்ல மெல்ல கொரோனா கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு இணங்க இந்நாட்டில் சகல கூட்டங்களும் நடைபெறும் தருணத்தில் இந்நூலின் இரசனை நுகர்ந்து பார்க்க முடிந்தது. இந்நூலின் தலைப்பு மிகவும் அருமையான தலைப்பு. இதனை "புதையலைத்தேடி " எனத் தலைப்பிட்டிருந்தால் இன்னும் நன்றாக இருந்து இருக்குமென நான் கருதுகின்றேன்.

**ஒவ்வொரு நபருக்கும் பரீட்சை**
**வெவ்வேறு வினாத்தாள்களாய்**
**இதுவே இயற்கையின் நியதி**

இக் கவிதையில் குறித்த மூன்று வரிகளும் சென்ரியூ சைனிஸ் கவிவரிகளின் பாணியில் அமைந்துள்ளன. உலகில் இறைவனால் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும் பரீட்சை எழுதிக் கொண்டுதான் இருக்கின்றான். வெவ்வேறு வினாத்தாள்களாய் இருந்தாலும் பாடத் திட்டம் என்று வரும்போது எல்லோருக்கும் ஒன்றுதான். அதில் வித்தியாசம் இல்லை. அதைப் புரிந்து கொண்டு சரியான முறையில் எழுதினால் மட்டும் தான் ஈடேற்றம் பெறலாம். ஆனால், அதனைப் பிழையான முறையில் விளங்கிக் கொண்டு எழுதினால் தோல்வியினைத் தழுவிக் கொள்ள நேரிடும். இந்த இரண்டு விடயங்களிலும் ஒன்று வெற்றியோ அல்லது தோல்வியோ இடம் பெற்றாலும் இயற்கையின் நியதி என்பது இயல்பாகவே வெளிப்படும். இந்நூலின் முதலாவது கவிதையான "இயற்கையின் நியதி" என்ற தலைப்பில் அமைந்த கவி வரிகளுக்குள் இக்கருத்து மின்னி மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

**கல்லுக்குள் ஈரமுண்டு**
**மனித நெஞ்சுக்குள்**
**வெறும் "ஈகோ" தானுண்டு**
**கல்லும் கரைந்திடும்**
**மனித மிருகங்களின்**
**"கல்பு" புகள் கரைவதில்லை.**

இக்கவி வரிகள் மிக அருமையான படிமமும் வடிவ நேர்த்தியும் கொண்டுள்ளன. இக்கவி வரிகளில் "ஈகோ" என்ற சொல் தாழ்வு மனப்பாங்கையும் "கல்பு" என்ற சொல் உள்ளத்தையும் தமிழில் குறிக்கும். இக்கவிதை நூலின் தலைப்புக்கும் மிக நெருக்கமான உறவு இருக்கிறது. மனம் என்பது மகா சக்தி வாய்ந்தது. இறைவனோடு நேரடித் தொடர்பு கொள்ளும் வல்லமை பெற்றது. நல்ல மனம் உடையவர்கள் நடமாடும் இறை இல்லம் என்பார்கள். ஆனால், இன்று பழகிப் பார்த்தால் பாதிப்பேர் மிருக ஜாதியாகத்தான் இருக்கிறார்கள்.

ஈகோ எனும் தாழ்வு மனப்பாங்கை உடையவன் தான் முதலில் அடுத்தவன் மீது காழ்புணர்ச்சி கொள்கிறான். ஈரமில்லாத இதயத்தோடுதான் பெரும்பாலான மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதை இல்லை என்று சொல்ல யாருக்கும் துணிச்சல் இல்லை. எந்த மிருகமும் கூலிக்காகக் கொலைகள் செய்வதில்லை. மனிதன் மட்டுமே இந்தக் கொலைகளைச் செய்கிறான். இது பற்றிப் பிரபல எழுத்தாளர் கார்க்கி எழுதும் போது "எவருடைய இதயம் உலகம் முழுவதையும் தழுவிக் கொள்கிறதோ, எவருடைய இதயம் தன்னைச் சுற்றிலும் உள்ளவர்களை நேசிக்கிறதோ, அவரே சிறந்த மனிதராக மதிக்கப்படுவார். ஏனெனில் அவரிடம்தான் மாபெரும் அழகு மறைந்துள்ளது." என்கிறார் மனித நேய எழுத்தாளர். இதில் வெளிப்படையான நேர்ப் பேச்சு பாவனைச் சொல்வரிகளை லாவமாகப் பயன்படுத்தித் தம் உணர்வுகளைப் பதிவு செய்துள்ளார் கவிஞர்.

**கற்பழிக்கப்படும்**
**நரகை எரித்து அதன்**
**அஸ்தியை மரியானா**
**ஆழியில் எறிந்து**
**விடுங்கள் எல்லா**
**வீட்டுப் பெண்களும்**
**அச்சமின்றி வாழ!**

உண்மையிலேயே இஸ்மத் பாத்திமாவிடம் கவிஞர்களிடம் காணப்படும் போர் குணம் இயல்பாகவே காணப்படுகிறது. தம் சுற்றுச் சூழலில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டு கவிஞர் கடும் கோபம் கொள்கிறார். பெண்களின் உடல் சிதைக்கப்படுகிறது. இப்போது ஒரு பெண் வெளியே பாதுகாப்புடன் சுதந்திரமாகச் செல்ல முடியவில்லை. இன்னும் பெண்கள் பால் உணர்வு சார்ந்த மயக்கப் பொருளாகப் பார்க்கப்படுவது இன்றைய சமுதாயத்தின் பாரியதொரு குறைபாடாகும். இப்படிப்பட்ட ஆண் கயவர்களை தாயின் கருவறையிலேயே வைத்துக் கொளுத்தி விடுங்கள். இதற்கு முற்றுப்புள்ளி பெண்களால் மட்டும்தான் வைக்க முடியும் என்று உரக்க குரலெழுப்பியுள்ளார் கவிஞர். இது மிகவும் அற்புதமான வரிகள். இக் கவிதையில் ஆவேசமும் போர்க் குணமும் வெளிப்பட்டு நிற்கிறது.

**ஆண்டுகள் குண்டு வீச்சில்.**
**சிதறுண்டு விடும்.**


எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா

கொடிய கொரோனா, உலகையே உலுக்கிக் கொண்டிருக்கிறது. இந்தக் கொரோனா எந்தவொரு நாட்டையும் விட்டு வைக்கவில்லை. கொரோனாவினால் எத்தனையோ கோடி இலட்ச மக்கள் பலிக்காடானார்கள். உயிர் இழந்து போனார்கள். எமது நாட்டிலும் ஊரடங்குச் சட்டம் என்றும் சுய தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் என்றும் மாகாணம் விட்டு மாகாணம் செல்வதற்கான பயணத் தடை என்றும் சுய தனிமைப்படுத்தல் முகாம் எனப்பட்ட அவதிகள் ஏராளம்.

கொரோனா உயிரிழப்பினால் இந்நாட்டு மக்கள் கொட்டிய கண்ணீரும் செந்நீரும் வேதனைக் குமுறல்களும் பீதியான வாழ்க்கை முறையும் ஒருவரோடு ஒருவர் நெருங்க முடியாத நிலைமையும் ஒன்று கூட முடியாத சூழலும் பயணிக்கட்டுப்பாட்டு விதி முறைகள், முகக் கவசம், சமூக இடைவெளி, தடுப்பூசிகள் என எத்தனையோ சுகாதாரச் சட்ட திட்டங்கள் என நாம் கண்ட காட்சிகள் எல்லாம் மிக அதிகம்.

இதனால் பாதிப்புற்ற சில நாடுகள் இன்னும் மீண்டெழுந்து வர முடியாமல் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்குண்டு தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. இதற்குள் எமது நாடும் ஒரு விதிவிலக்கல்ல. இந்நூலை கவிஞர் 2019 களில்தான் வெளிக்கொணர்ந்தார். 2020 , 2021 , 2022 களிலும் அந்தப் பீதி தொடர்கிறது. கவிஞர் இஸ்மத் பாத்திமாவின் இக் கவிதை வரிகளில் எதிர்கால தரிசனங்கள் ஜீவத்துடிப்புக்களாக விளங்குகின்றன. எனவே இப்படிப்பட்ட கவிதை செருக்கோடு எழுதுபவன்தான் உண்மைக் கவிஞன் ஆவார்.

**வெள்ளமே துடைத்துச் செல்**
**மக்களின் மனங்களில்**
**பேயாய் தலை நிமிர்த்தி**
**தலை விரித்தாடும்**
**இன வெறியை.!**

தூய்மையான உள்ளத்தோடு பழகின மனங்களில் இனவாத விஷக் கருத்துக்கள் ஏற்றப்பட்டு இனவெறியின் அலைமுயெழுச்சி கரைபுரண்டு ஓடுகின்றன. இனங்களுக்கிடையே சகவாழ்வும் பரஸ்பர நல்லுறவு தேசிய நல்லிணக்கம் முதலியவற்றைச் சந்தோசமாக அனுபவித்து வந்த மக்கள் மனங்களில் இனவாத நஞ்சு விஷக் கருத்துக்கள் விதைக்கப்பட்டு அது விருட்சமாய் வளர்ந்து விஸ்வரூபம் எடுத்துள்ளது. இது கவிஞருக்கு வேதனையளித்துள்ளது. இதனால் கவிஞர் சமூக அவலத்தைக் கண்டு சுடும் சொற்களால் வழிமொழிகிறார்.

இதை வளர்ப்பதில் ஊடகங்களின் பங்கு நாளுக்கு நாள் கூடிக் கொண்டே செல்கிறது. இது நீடித்தால் தேசிய ஒருமைப்பாட்டுக்கு நெருக்கடியாக அமைந்து விடும். எனவே எமது நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவது என்றால் இனவாதச் செயற்பாடுகள் இல்லாது ஒழிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு இனமும் மற்றைய இனத்துடன் மனம் திறந்து பேச வேண்டும். சிரிக்க வேண்டும். கதைக்க வேண்டும். ஒரு இனம் மற்றைய இனத்தைப் பற்றிய தவறான எண்ணங்கள், சிந்தனைகள், அபிப்பிராயங்களை அகற்ற வேண்டும். ஓர் இனம் மற்ற இனத்தை மதிக்க வேண்டும். கௌரவமாகப் பார்க்க வேண்டும். இனங்களிடையே உண்மை, நேர்மை, நம்பிக்கை உருவாக வேண்டும். சிறுபான்மை இனத்தை என்று பெரும்பான்மை இனம் அரவணைத்தும் பாதுகாத்தும் செல்கின்றதோ அப்போதே அந்நாடும் வளமும் பெறும். சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் எல்லோரும் ஒரே இலங்கையர் என்ற வகையில் சிந்திக்க வேண்டும். தேசப்பற்று உடையவர்களாகத் திகழ வேண்டும்.


இப்படி இந்நூலில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், கல்வி ஒழுக்கவியல், இஸ்லாமிய மார்க்க விழுமியங்கள், சீதனப் பிரச்சினைகளின் கொடுமைகள் எனப் பல்வேறு சித்திரப் பூக்களோடு இக்கவிதைத் தொகுதி நூல் வெளிவந்துள்ளது.

இந்நூலாசிரியரின் தந்தையும் ஓய்வு நிலை அதிபர் ஏ. சீ, செய்யது அஹமது வாழ்த்துரையினை வழங்கியுள்ளார். கலாபூசணம் நூருல் அயின் நஜ் முல் ஹூஸைன் தமது முன்னுரையில் "இந்நூலில் சுமார் 132 கவிதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவரது கவிதைத் தொகுதியில் தொடாத துறை எதுவுமில்லை என்றுதான் கூற வேண்டும். தாயைப் பற்றி, தனயனைப் பற்றி தம்பியைப் பற்றி, தனது ஆசானைப் பற்றியெல்லாம் பாடியுள்ளார். இயற்கையைப் பற்றி விண்மீன்களைப் பற்றி விஞ்ஞானத்தைப் பற்றி, வான் நிலவைப் பற்றி என்று இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம், அருமையான கற்பனை கலந்த அபாரமான கவிதைகள் பல இவரது இந்நூல்களில் இடம்பெற்றுள்ளன" என்று தெரிவித்துள்ளார்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் கவிதைகள் படைக்கும் ஆற்றல் கொண்ட எஸ். ஏ. இஸ்மத் பாத்திமா பாடசாலை அதிபரும் கூட. மக்கள் தம் அன்றாட வாழ்வில் அனுபவிக்கும் துன்பங்களையும் துயரங்களையும் துடைப்பதற்கு கவிஞர் இஸ்மத் பாத்திமாவின் பேனா முனை மென்மேலும் வலுச்சேர்க்க வேண்டும் என்பது என்னுடைய எதிர்பார்ப்பாகும். ■

வே.முல்லைத்தீபன்

# ‘திருவள்ளுவர் தெருவில் நியூட்டன்’




திருவள்ளுவர் தெருவிலே.. இ.சு முரளிதரன் நடந்திருக்கிறார். அவரோடு அவர் கை பிடித்து நானுமொருவனாக நடக்க முயற்சி செய்திருக்கிறேன்.

வாருங்கள் நடந்து பார்ப்போம்..

‘நியூட்டனின் மூன்றாம் விதியில்’ தொடங்கி, ‘ஒட்டுண்ணியும் ஓம்புயிரியும்’ எனும் தலைப்பு வரை நாற்பது தலைப்புக்களில் அலசியுள்ளார்.

‘திருவள்ளுவர் தெருவில் ஒரு நியூட்டனை’ ஆசிரியர் கண்டிருந்தாலும், எடுக்கப்பட்ட ஒவ்வொரு குறட்பாவிற்குள்ளும் ஒவ்வொரு நியூட்டனை கண்டிருக்கிறார் என்பதே எனது கணிப்பு.

அனைத்துமே, அற்புதமான விளக்கங்கள்.

இயல்பிலேயே.. தர்க்க ரீதியான சிந்தனை ஆற்றலும், இலக்கிய நயமும், கற்பனை வளமும் நிரம்பப் பெற்றவராக ஆசிரியர் இருக்கிறார் என்பது புலனாகிறது.

திருக்குறளில் உள்ள ஆழத்தையும் அதில் பொதிந்துள்ள விஞ்ஞான உண்மைகளையும் பல்வேறான எடுத்துக்காட்டுக்களுடன் இலகுவான நடையில் விளக்குவதென்பது எளிதான விடயமல்ல.

இரண்டு மாதங்களாக வாசித்தபடி உள்ளேன்.

புத்தகம் இவ்வாறு தொடங்குகிறது..

இங்கிலாந்தின் சிறுவீதியில் இளைஞன் ஒருவன் நடைப்பயிற்சி செய்கிறான். அவ்விடத்தில் ஓலைச்சுவடியொன்றை வாசித்தபடி முதியவர் ஒருவர் இருக்கிறார். அதிலுள்ளதை ஆங்கிலத்தில் சொல்லுமாறு இளைஞன் கேட்கிறான். முதியவர் இவ்வாறு கூறுகிறார்.

சினத்தை பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கை பிழையாதற்று

என, குறளை தமிழிலே சொல்லிவிட்டு அதற்கான விளக்கத்தை ஆங்கிலத்தில் கூறினார். அதாவது, கையினை நிலத்திலே மோதுகின்ற போது நிலமானது மறு தாக்கத்தைச் செலுத்தி வலியினைத் தருவது போல, சினமும் ஒருவனுக்கு துன்பத்தை தரும் எனக் கூறினார். அவனிடம் ‘உங்கள் பெயர் என்ன..?” எனக்கேட்டுவிட்டு ‘நியூட்டனாக இருக்கலாம்’ என அம்முதியவர் நினைக்கிறார்.

நியூட்டனின் மூன்றாம் விதி, ஒரு நாள் எழுநாள் போல் செல்லும், வெப்ப இயக்கவியல், காலப்பயணம், விமானத் தொழினுட்பம், அமில மழை, உணவுச் சங்கிலி, சுரோடிங்கரின் பூனை, ஊக்கியும் நிரோதியும், நுண்ணுயிர் கொல்லி, பொருத்தமான அமைவிடம், முற்திட்டமிடல், மறுதலைச் சிந்தனை, தலைமைச் செயலகம், ஆமை சுற்றத்தை அணுகல், ஒழுங்கின்மைக் கோட்பாடு, கலத்தின் தற்கொலைப்பைகள், பார்வைப்புல அறிவியல், அடிப்படைத்துகள்கள், மருத்துவம், சதிக்கோட்பாடு, கால் இல்கனி, வானின் மெய்ம்மைகள் வெகு அருகிலே, ஈர்ப்புப்புலம், சுழன்றும் ஏர் பின்னது உலகம், கனவுப் பகுப்பாய்வு, நீரின்றி அமையாது உலகு, அப்பிள் விதைகள், இடுக்கண் வருங்கால் நகுக, பயிர் வட்டம், அவர் செய்த ஒன்று நன்று, வெள்ளத்தனைய மலர் நீட்டம், உழவின் அறிவியல், சினங் காக்க, தளராத முயற்சி, கடல் நீரில் உப்பின் சமநிலை, மரபணு மருத்துவம், ஒலியும் ஒளியும், நனோத் தொழினுட்பம், ஒட்டுண்ணியும் ஓம்புயிரியும் எனும் தலைப்புக்களில், திருக்குறளை மையப்படுத்தி விளக்கிச் சொல்லுகிறார்.

தலைப்புக்களே, புத்தகத்தின் தலைப்பூக்கள்.

விஞ்ஞான தொழினுட்பத் துறையினருக்கு இலக்கிய இரசனையையும், இலக்கியத் துறையினருக்கு விஞ்ஞான தொழினுட்ப ஆர்வத்தையும் இந்நூல் ஏற்படுத்தும் என்பது ஒருபோதும் புகழுரை ஆகாது.

எடுத்துக்காட்டுகளாக..

*111* ஆவது குறட்பாவிலே, ஒவ்வொரு பகுதியும் சிறப்பாகச் செயற்பட்டாலே சமநிலைத்தன்மை சீராக இருக்கும் என்கிறார் வள்ளுவர். இதனை, விமானம் ஒன்று பறப்பதற்கு நிறை, ஏறுவிசை, முன்னோக்கிய விசை, எதிர்விசை என்பவற்றினை வைத்து விளக்குகிறார்.

*89* ஆவது குறளிலே, விருந்தோம்பலின் சிறப்பு கூறப்படுகிறது. அதனை, விருந்தோம்பலை செய்யாதவன் செல்வமானது.. சுரோடிங்கரின் பூனையைப் போல் இருப்பும் இன்மையும் கலந்த இருமைநிலையிலேயே காணப்படும் என இவர் கூறுகிறார்.

*375* ஆவது குறளில் வள்ளுவரின் மறுதலைச் சிந்தனையை காணலாம். இதனை, கடத்தி ஒன்றினூடாக பாயும் மின்னோட்டச் செயற்பாட்டை வைத்து விளக்குகிறார்.

*353* ஆவது குறட்பாவைக்கொண்டு, ஐயத்தில் நீங்கித் தெளிந்தால்.. பூமிக்கு வெகு அருகிலே வானின் மெய்ம்மைகள் துலங்கும். என்றுரைக்கிறார்.

தோல், முடி, நகம் போன்றவற்றின் பண்புகள் பெற்றோரிடமிருந்து எமக்கு கடத்தப்படுவது போல சில நோய்களும் கடத்தப்படும் எனும் செய்தியை குறள் *359* கூறுகிறது. *1100* ஆவது குறளிலே ஒலியின் வேகத்தை ஒளி வென்றுவிடும் என்பதனை எடுத்துக் காட்டி விளக்குகிறார்.

புத்தகம் முழுவதையும் வாசித்து முடித்தவுடன் விளங்குகிறது.. அந்தத் திருவள்ளுவர் தெருவில் நடந்த நியூட்டன் யாரென்று.

ஆக..

பொய்யாமொழிப் புலவர் இன்றிருந்தால் நேரடியாகவே கேட்டுவிடுவேன்.. முரளிதரன் போலவா நீயும் யோசித்தாய்..? என்று.

வேகமாகப் புத்தகம் போடத்தெரிந்த வித்தகனின், இன்னும் பல புத்தகங்களைத் தேடுகிறேன். விரைவில் கிடைக்கும் என நம்புகிறேன். ■

# நம்ம அல்பம்

மதுமிதா




அலைபாயும் மனதை ஒரு நிலைப்படுத்துவதில் இசை முக்கிய பங்கு வகிக்கிறது. ஈழத்து இசைக்குத் தனி மகத்துவம் இருக்கிறது. ஈழத்து இசை, மெல்லிசை, பொப் இசை, நாடக மேடைப்பாடல்கள் என்ற வரிசைக்கு அணி சேர்ப்பதாக நவீன தொழில்நுட்பத்துடன் வெளியாகும் அல்பங்கள் அமைந்துள்ளன. இலங்கையின் பொப் பாடல்கள் தமிழக சினிமாவில் ஒலிப்பதால் அதன் தரம் உயர் நிலையில் இருப்பதென்பதை அறியக்கூடியதாக உள்ளது. ஈழத்து குறும்படங்களும் அல்பங்களும் கலைஞர்களின் தாகத்தை ஓரளவு தணிக்கின்றன.

Arc mobile Production அனுசரனையில் ஈசன் சரண் அவர்களின் தயாரிப்பில் கடந்த *01.02.2022* அன்று சீமாட்டி பாடலின் முதற்பார்வை வெளியிடப்பட்டுள்ளது. இப்பாடலை எழுதிய லதிப் யாழ்ப்பாணத் தமிழிலே காதலன் காதலியை வர்ணித்துப் பாடுவதையும் தற்காலத்தில் நடக்கும் வெளிநாட்டு மாப்பிள்ளைக்கான போட்டியையும் மிக அழகாகவும் சிறப்பாகவும் எழுதியுள்ளார். இவ் ஒவ்வொரு வரிகளையும் ராம் ரமணன் நன்கு சுவைத்துப் பாடியுள்ளார். சிங் ராஜன் பாடலுக்குத் தகுந்தாற் போல் இசையமைத்துள்ளார். இதில் வியக்கத்தக்க விடயம் என்னவெனில் அதில் நடித்துள்ள கஜன் மிகத் தத்துருவமாக திரைப் படத்தைப் பார்த்த உணர்வுக்குக் கொண்டு வந்துள்னார். ஏற்கெனவே அறுவடை என்ற திரைப்படத்தில் வில்லனாகவும் நடித்துள்ளார். அது மட்டுமல்லாது *2018* ஆம் ஆண்டு குறும்படத்துக்குள் காலடி எடுத்து வைத்த இவர் *10* பாடல்களுக்கு மேல் நடித்துள்ளதுடன் லத்தி எனும் திரைப்படத்தில் கதாநாயகனாகவும் நடித்துள்ளார். இது இன்னும் திரைக்கு வரவில்லை. அவரது ரசிகர்கள் அந் நாளையே எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாயகனுடன் இணைந்து நடித்த ஜெனிபர், நியூட்டன், நிருசன், கண்ணா உதை என்பவர்களும் சிறப்பித்துள்ளனர். இதில் இடம் பெற்ற நடனப் படிமுறைகளின் பெருமை, அதற்குச் சொந்தக்காரரான கண்ணன் உதையையே போய்ச்சேரும். இதின் ஒவ்வொரு வரிகளுக்கும் இசைக்கும் ஏற்றாற்போல் சிறப்பித்துள்ளார். நாயகி ஜெனிபரின் சிகை அலங்காரம் முக அலங்காரம் ஒவ்வொன்றையும் புவி பிரி பார்த்துப் பார்த்து செய்துள்ளார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இவர்களது படப்பிடிப்பானது நெல்லியடி, பருத்தித்துறை போன்ற இடங்களில் இடம் பெற்றுள்ளது. இவர்கள் தெரிவு செய்த இடம் ஒவ்வொன்றும் பாடலுக்கு மிகவும் பொருத்தமாகவே உள்ளது.

இவ்வளவு சிறப்புக்களையும் கொண்ட இப் பாடலானது உண்மையிலேயே இன்னும் மக்களைச் சென்றடைவதற்கு நமது கலைஞர்களை ஈழத் தமிழர்களாகிய நாம் ஆதரவுக்கரம் வழங்க வேண்டும். இப் பாடலுக்கான தயாரிப்பாளர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லதீப் ஆவார். நம் நாட்டு மக்களின் திறமைகளை வெளிநாட்டில் உள்ளவர்களும் நன்கு அறிந்து அதை வெளிக்கொணர முனைகிறார்கள். நாமும் நம் நாட்டுக் கலைஞர்களுக்குத் தோள் கொடுத்து உறுதுணையாக இருக்க வேண்டும். இப் பாடலானது நம் நாட்டில் மட்டுமல்லாது உலக நாடுகளிலும் ஒலிக்க நாமே முனைய வேண்டும். இப் பாடலை காண்பதற்கு https://youtu.be/2xBQ_3fxWkE என்ற இணைப்பினூடாகச் சென்று பார்வையிடலாம். ■



# புதிய அரசியல் யாப்பும்...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு கையளிக்கப்பட்ட நகல் வரைபுகளில், சுயநிர்ணய உரிமை பற்றி அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் தங்கள் நகல் வரைபில் நிச்சயமாகக் குறிப்பிட்டிருப்பர் என்பது கண்கூடு.

ஆனால், இவர்கள் கோருகின்ற சுயநிர்ணய உரிமையின் ஆழம் எந்த அடிப்படையில் என்பதிலேதான் குழப்பம் இருக்கும்.

இருந்தாலும் குறைந்தபட்சம் சர்வதேச சமவாயத்தில் கூறப்பட்டுள்ளவாறான சுயநிர்ணய உரிமை இலங்கையின் 56 ஆம் இலக்கச் சட்டத்தில் நீக்கம் செய்யப்பட்டிருப்பதைக்கூட தங்கள் நகல் வரைபில் இந்தக் கட்சிகள் சுட்டிக்காட்டியிருக்கும் என்று நம்ப இடமில்லை.

சர்வதேச சமவாயத்தில் சுயநிர்ணய உரிமை பற்றிக் கூறப்பட்டுள்ள உறுப்புரை 1 இலும் கோளாறுகள் உள்ளன. அது பற்றியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துக் கூறியிருக்க வாய்ப்பில்லை.

குறிப்பாக, சுயநிர்ணய உரிமை பற்றிக் கூறப்படுகின்ற உறுப்புரை ஒன்றில் ஒரு நாட்டில் வாழும் அனைத்தும் மக்கள் (All peoples) என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒரு நாட்டில் வாழும் அனைத்துத் தேசிய இனங்களுக்குரிய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றோ, தேசிய இனம் ஒன்றைத் தேசமாக ஏற்க வேண்டுமென்றோ குறிப்பிட்டுக் கூறப்படவில்லை.

ஆகவே ஆட்சி உரிமை மறுக்கப்பட்ட நாடொன்றில் வாழும் தேசிய இனங்களை ஒரு தேசமாக அங்கீகரிக்கக் கூடிய முறையில் சுயநிர்ணய உரிமை குறித்து ICCPR எனப்படும் சமவாயத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுக் கூறப்படவில்லை என்பது வெளிப்படை.

இந்தக் கோளாறுகள் பற்றி ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளுக்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியிருக்க வாய்ப்பில்லை.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைச் சபையின் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் எடுக்கப்படவுள்ள நிலையில், தங்கள் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கவும் தமிழ்த்தேசியக் கட்சிகள் தயார்ப்படுத்தி வருகின்றன. தமது பரிந்துரைகளில் ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது பற்றி இவர்கள் குறிப்பிடுவார்களா என்பதும் சந்தேகமே.

சமவாயம் குறித்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அப்போதிருந்தே வாதிட்டு வருகின்றது. இதனால் இந்தப் பொறுப்பு முன்னணிக்குத் தற்போது அதிகமாகவுள்ளது.

இலங்கையில் தேரவாத பௌத்த சமயத்தை மையப்படுத்திய பிக்குமார் சிலரின் ஒருபால் சேர்க்கை (Homosexuality) தொடர்பாக சிங்கள மொழியில் களு மக்கற (Black Dragon) என்ற சிறுகதையை எழுதிய சக்திக சத்குமார என்ற சிங்கள இளைஞன், இந்தச் சமவாயத்தின் பிரிவு 3(1) கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்.

பௌத்த சமயத்துக்கு எதிராகக் குரோத உணர்வுகளைத் தூண்டும் வகையில் களு மக்கற என்ற குறுந்திரைப்படம் அமைந்துள்ளதாகக் குற்றம் சுமத்தியே இவர் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கைது செய்யப்பட்டிருந்தார்.

ஆகவே இந்தச் சமவாயத்தை இலங்கை உரியமுறையில் செயற்படுத்தவில்லை என்பதையும் ஆட்சி உரிமை மறுக்கப்பட்ட தேசிய இனம் ஒன்றைத் தேசமாகவும் அதன் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது குறித்த விடயங்களிலும் சமவாயத்தில் தெளிவின்மை இருப்பது தொடர்பாக முன்னணி ஐ.நாவிடம் எடுத்துரைக்குமா என்பதைப் பொறுத்திருந்தே அவதானிக்க வேண்டும்.

இலங்கை ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான தீர்வாக ஏற்றுக்கொள்ளப்படாத நிலையிலும், 30/1 தீர்மானத்தில் அரசியல் தீர்வுக்கான முயற்சியாக, முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனக் கூறப்பட்டிருப்பதால், தமிழ்த்தேசியக் கட்சிகளும் ICCPR எனப்படும் சர்வதேச சமவாயம் குறித்து இம்முறை வெளிப்படுத்த வேண்டும்.


கோட்டா, மகிந்த, ரணில், சந்திரிகா என்ற தனிநபர் அரசியல் செயற்பாடுகளுக்குள் அமுங்காமல், இலங்கை அரசு என்ற கட்டமைப்பை நோக்கியே செயற்பாடுகள் அமைதல் காலத்தின் அவசியம். ஏனெனில் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில், சிங்கள அரசியல் கட்சிகள் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான அங்கீகாரத்தை அரசியல் ரீதியிலும் முற்றாக அழிக்கும் நோக்கிலேயே புவிசார் அரசியலை நன்கு திட்டமிட்டுப் பயன்படுத்துகின்றனர்.

ICCPR எனப்படும் சர்வதேச சமவாயம் ஐக்கிய நாடுகள் சபையினால் 1954 ஆம் ஆண்டு வரையப்பட்டு 1966 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி 74 நாடுகள் அதில் கைச்சாத்திட்டிருந்தன. 1976 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி இது நடைமுறைக்கு வந்தது.

ஆனால், இன்று வரை ஆட்சி உரிமை மறுக்கப்பட்ட தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது பற்றிய தெளிவான திருத்தம் சமவாயத்தில் செய்யப்படவேயில்லை. ■

---

# அன்பே மருந்து




ச.சஜீபன்
உளவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வரையறையில்லாத வரைவிலக்கணத்தைத் தன்னகத்தே கொண்ட ஒற்றை வார்த்தைக்குள் காணப்படும் சொல்லே அன்பாகும். அன்புதான் இங்கு அனைத்துமாய் இருக்கிறது என்றும் அன்பே சிவமென்றும் சொல்வார்கள். இந்த உலகத்தில் வாழும் நாம் அனைவரும் ஒரு புரிதலின் அடிப்படையிலயே வாழ்ந்து வருகிறோம். அந்தப் புரிதல்தான் அன்பு எனலாம்.

பொதுவாக அன்பு வலுவாகவும், நேர்மறையான அனுபவமாகவும் இருக்கிறது. எளிமையான மகிழ்ச்சி முதல் ஆழ்ந்த தனித்தன்மையான பாசம் வரை அன்பு பல பரிமாணங்களில் வெளிப்படுகிறது. அன்பு என்ற சொல் குறிக்கும் பொருள்களின் எல்லைகளை விளக்க வேண்டுமெனில் இவ் எளிய எடுத்துக்காட்டை எண்ணி உணரலாம். ஒருவன் தன் தாயின் மீது கொண்ட அன்புக்கும் தன் காதலியிடம் கொண்டுள்ள அன்புக்கும், அவன் ஒரு வகையான உணர்வின் மீது கொண்டுள்ள அன்புக்கும் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொள்வதால் அன்பின் ஒரு சில பரிமாணங்களை உணரலாம்.

நாம் அனைவரும் இந்தச் சமுதாயத்தில் சில சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியுள்ளது. நாம் ஏதேனும் தவறு செய்தால் சட்டத்திற்குட்பட்டு தண்டனை அனுபவிக்க வேண்டியுள்ளது. முதன் முதலில் இந்தச் சட்டத்தை எல்லாம் இயற்றியவர் எதற்காக தண்டனை என்னும் ஒன்றை கொண்டு வந்திருப்பார்? என்றைக்காவது நாம் யோசித்தது உண்டா? ஆம், அதுவும் அன்பின் அடிப்படையில்தான். ஒரு சமுதாயம்சிறந்து விளங்க வேண்டுமெனில் அந்தச் சமுதாயத்தில் உள்ள மக்கள் அனைவருக்கும் நல்ல புரிதல் இருந்தால் மட்டுமே அது சாத்தியம். அப்படிப் புரிதல் இல்லாத நபர்களே ஏதேனும் ஒரு குற்றச் செயலில் ஈடுபடுகின்றனர். பின்னர் சட்டத்தின் பேரில் தண்டனைக்கு உள்ளாகின்றனர். அந்த தண்டனைக்குரிய காலமான இரண்டு வருசமோ / ஐந்து வருசமோ, தண்டனைக்குரியவன் அந்த சமுதாயத்திடமிருந்து தனிமைப்படுத்தப்படுகிறான். தனிமையின் போதுதான் அவனுக்கு நிதானம் வருகிறது. நிதானிக்கும் போதுதான், அவன் தன்னுடைய தவறான செய்கையை உணர்கிறான். மனம் வருந்துகிறான். மீண்டும் நல்ல மனிதனாகத் திருந்தி வாழும் வாய்ப்பிற்காக ஏங்குகிறான். தண்டனைக் காலம் முடிந்த பின் நல்வழியில் பயணிக்கிறான். இப்போது யோசித்துப் பாருங்கள், ஒருவனை நல்வழிப்படுத்திக் கொண்டு வருவதற்காகத் தண்டனை வழங்குவதும், அதற்கான கடுமையான சட்டங்களை இயற்றுவதும், இந்தச் சமுதாயம் ஒரு தனிமனிதனின் மீது கொண்டுள்ள புரிதலின் அடிப்படையில் எழுந்த அன்பின் காரணமாகத்தான் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.




நேசம், பாசம், நட்பு, காதல், விருப்பம் என்பவற்றையும் நாம் அன்பின் வடிவமாக வகுத்துள்ளோம். நாம் என்ன வடிவத்தைக் கொடுத்தாலும் அன்பு ஒன்றுதான். இருவருக்கிடையேயும் தனிமனித உறவு சார்ந்தும் அன்பு அதன் பல்வேறு வடிவங்களில் முக்கிய உதவியாளராகச் செயற்படுகிறது. மனிதர்களிடையே தோன்றும் அன்பு நேசிப்பவர்களுடனான அன்பைக் குறிக்கிறது. இது ஒருவர் மீது கொண்டுள்ள எளிய விருப்பம் என்பதைத் தாண்டி மிகவும் சக்திவாய்ந்த உணர்வு ஆகும். ஒரு தலைக் காதல் என்பது திரும்பக்கிடைக்காத அன்பின் உணர்வுகளைக் குறிக்கிறது. இது காதல் தொடர்பான ஓர் உளவியல் கோளாறாகக் கருதப்படுகிறது. தனிமனித காதல் என்பது பெரும்பாலும் நெருக்கமான தனிமனித உறவுகளைக் குறிக்கிறது. குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் காதல் சோடிகள் போன்றவர்களுக்கிடையில் இத்தகைய அன்பு இருக்கலாம்.

ஆனால், அன்புக்கு வடிவம் கொடுப்பதனாலேயே நாம் அன்புக்கு எதிரானது என்றவுடன் வன்பு, வெறுப்பு, துரோகம், சுயநலம் எனப் பலவற்றைக் கருதிக்கொள்கிறோம். அதாவது இவ்வாறன உணர்வுகள் அன்புக்குத் தடையாக அமையும் எனக் கருதுகிறோம். இப்போது ஒரு விடயத்தை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

அதாவது வெறுப்பு, துரோகம், சுயநலம் என நாம் குறிப்பிடுபவையும் ஒரு முழுமைக்கு நாம் கொடுக்கும் வடிவங்கள்தான் என்பதே. இந்த முழுமை அன்புக்கு எதிரானதாகச் செயற்படும் முழுமை. அந்த முழுமைதான் "பயம்". அதாவது அன்பு எனும் முழுமை ஒன்று, பயம் எனும் முழுமை இன்னொன்று.

இதிலிருந்து நாம் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு அற்புதமான விடயம் என்னவெனில், எமது ஒவ்வொரு நகர்வும் அன்பினால் நகர்த்தப்படுகின்றதா? அல்லது பயத்தினால் நகர்த்தப்படுகின்றதா? என்பதாகும். இத்தகைய புரிதல் இன்மையே பல உளப்பிரச்சினைகளை நம்மை அறியாமல் ஏற்படுத்தி விடுகிறது.

பாசப் பிணைப்பை இழந்து விடுவமோ என எண்ணிக் குடும்ப உறவுகளின் பிரிவும் கசப்பான அனுபவங்களும் நித்திரையின்மை, மன அழுத்தம், எதிரான எண்ணம், வன்முறைகள் தன்னை மாய்த்து கொள்ளும் நிலைக்கும் எத்தனிக்கப்படுகின்றோம்.

இரண்டில் ஒன்றுதான் ஒரே நேரத்தில் இயங்கும் என்பதே இதன் பொருள். அன்பு இயங்கினால் பயம் இயங்காது, பயம் இயங்கினால் அன்பு இயங்காது. இவை இரண்டும் ஒன்றுக்கு ஒன்று எதிரானவை. இவற்றைப் புரிந்து கொண்டால் மட்டுமே நம் உறவுகளை வலுப்படுத்திக்கொள்ள முடியும்.

நீங்கள் உங்கள் அன்பை எதிர்பார்ப்பு இல்லாமல் முழுவதும் கொடுங்கள். அன்பினால் மட்டுமே அன்பை அடையமுடியும். எறும்பு ஊரக் கல்லும் தேயும். அன்பு ஒன்றை மட்டும் கொடுங்கள். அன்பால் உலகை வென்றிடும் அளவிற்கு உடல், உள நலத்தைப் பேணிடுவோம். ■

> **ஒரு தலைக் காதல் என்பது திரும்பக் கிடைக்காத அன்பின் உணர்வுகளை குறிக்கிறது. இது காதல் தொடர்பான ஓர் உளவியல் கோளாறாகக் கருதப்படுகிறது. தனிமனித காதல் என்பது பெரும்பாலும் நெருக்கமான தனி மனித உறவுகளைக் குறிக்கிறது. குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் காதல் சோடிகள் போன்ற வர்களுக்கிடையில் இத்தகைய அன்பு இருக்கலாம்.**

# ஐ.பி.எல் அணிகளின் விபரங்கள்

**பெங்களூரில் கடந்த வாரம் நடந்த இரண்டு நாள் ஐ.பி.எல் 2022 ஏலத்தின் போது 204 வீரர்கள் விற்கப்பட்டனர் மற்றும் பத்து உரிமையாளர்கள் 5,51,70,00,000 கோடியை இந்திய ரூபாவில் செலவிட்டனர். ஏலத்தில் இந்திய இளம் கிரிக்கெட் வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர், இஷான் கிஷான் 15.25 கோடி ரூபாய்க்கு அதிக ஏலத்தில் வாங்கப்பட்டார். இதன் மூலம் அவர் மீண்டும் மும்பைக்குத் திரும்பினார். 14 கோடி ரூபாய்க்கு சென்னையால் வாங்கப்பட்ட தீபக் சாஹர், ஐ.பி.எல் ஏலத்தில் இதுவரை வாங்கப்பட்ட மிக விலையுயர்ந்த இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஆனார். கொல்கத்த ஷ்ரேயாஸ் ரை 12.25 கோடி ரூபா கொடுத்து வாங்கியது. லியாம் லிவிங்ஸ்டோன், வனிந்து ஹசரங்கா, நிக்கோலஸ் பூரன், ஷர்துல் தாகூர், லக்கி பெர்குசன் ஆகியோரும் அதிக தொகைக்கு வாங்கப்பட்டனர். 108 வீரர்கள் கோடீஸ்வரராகியுள்ளனர்.**













**01.சென்னை சூப்பர் கிங்ஸ்.**
கப்டன் : எம்.எஸ். டோனி
பயிற்சியாளர் : ஸ்டீபன் பிளெமிங்
உரிமையாளர் : இந்தியா சிமெண்ட்ஸ்

**02. டெல்லி கப்பிட்டல்ஸ்**
கப்டன் : ரிஷப் பண்ட்
பயிற்சியாளர் : ரிக்கி பொண்டிங்
உரிமையாளர் : ஜே.டபிள்யூ.எஸ் குழுமம், ஜி.எம்.ஆர் குழுமம்

**03. குஜராத் டைட்டன்ஸ்**
கப்டன் : ஹர்திக் பாண்டியா
பயிற்சியாளர் : ஆசீஷ் நேக்ரா
உரிமையாளர் : டாடா இந்தியன்

**04. கொல்கட்டா நைற் ரைடர்ஸ்**
கப்டன் : ஸ்ரேயாஸ் ஐயர்
பயிற்சியாளர் : பிரெண்டன் மக்கலம்
உரிமையாளர் : ஷாரு கான் ரெட் சில்லிஸ் என்டர்டெயின்மெண்ட், ஜூஹி சாவ்லா, ஜெய் மேத்தா மேத்தா குழுஸ

**05. லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ்**
கப்டன் : கேஎல் ராகுல்
பயிற்சியாளர் :ஆண்டி பிளவர்
உரிமையாளர் : ஆர்பி-சஞ்சீவ் கோயங்கா குழுமம் (ஆர்.பி.எஸ்.ஜி குழுமம்)

**06. மும்பை இந்தியன்ஸ்**
கப்டன் : ரோஹித் சர்மா
பயிற்சியாளர் : ஸ்கீர்கான்
உரிமையாளர் : முகேஷ் அம்பானி

**07. பஞ்சாப் கிங்ஸ்**
கப்டன் : கேஎல் ராகுல்
பயிற்சியாளர் : அனில் கும்ப்ளே
உரிமையாளர் : டாபர் (மோஹித் பர்மன்), வாடியா குழுமம் (நெஸ் வாடியா), பி ஸடெனிஸட் மீடியா (ப்ரீத்தி ஜிந்தா), அபீஜய் சுரேந்திரா குழுமம் (கரன் பால்)

**08. ராஜஸ்தான் ராயல்ஸ்**
தற்போதைய உரிமையாளர் : மனோஜ் படாலே (பெரும்பான்மை பங்கு) CVX M,கெ குஓர்தம்
கேப்டன் சஞ்சு சாம்சன்
பயிற்சியாளர் : குமார் சங்கக்கார

**09. சன்ரைசர்ஸ் ஹைதராபாத்**
கப்டன் : டேவிட் வார்னர்
பயிற்சியாளர் : ட்ரெவர் பெய்லிஸ்
உரிமையாளர் : டிவி நெட்வொர்க் தலைமை நிர்வாக அதிகாரி காவியா மாறன்

**10. ரோயல் சலஞ் பெங்களூர்**
பயிற்சியாளர் : சஞ்சய் பங்கர்
உரிமையாளர் : யுனைட்டெட் ஸ்பிறிற் லிமிட்டெட் ■













# வாண்டுமாமா



சிறுவர் பகுதி

# பாதுகாப்பு



அவுஸ்திரேலியாவிலுள்ள அடர்ந்த காடு ஒன்றிலே தாய்க்கங்காருவும் ஒரு குட்டியும் வாழ்ந்து வந்தன. அக்குட்டியைத் தாயானது எப்போதும் தனது மடியிலுள்ள பையிலே பாதுகாத்து வந்தது. ஒரு நாள் குட்டிக்கங்காருவுக்கு ஓர் ஆசை தோன்றியது. அது தனது தாயிடம் “வெளியுலகைச் சென்று பார்க்கப் போகிறேன்” எனக் கூறியது.

“இந்த உலகம் ஆபத்தானது உலகைத் தனித்து எதிர்கொள்ளும் வயது வரும் வரை பொறுத்திரு” என்று தாய் கூறியது. ஆனால் அந்தக் குட்டிக் கங்காரு மிகவும் அடம்பிடித்தது. ஆகவே, அந்தத் தாய்க்கங்காரு “சரி... சென்று வா... ஆபத்தைக் கண்டால் விரைவாக என்னிடம் வந்துவிடு!” என்று கவலையோடு சொல்லி அனுப்பியது.

மிகுந்த சந்தோசமாகக் கங்காரு தனியே சென்றது. பல காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தது. ஓரிடத்தில் சிறு பூச்சியைக் கண்டது. அப்பூச்சியை ஒரு தவளை உண்ணுவதற்குத் தாவித்தாவி வந்தது. உடனே பூச்சி பறந்து சென்று தப்பியது. தவளைக்குப் பின்னே பாம்பு ஒன்று மெதுவாக ஊர்ந்து வந்தது. பாம்பு தவளையைப் பிடிப்பதற்குள்ளே தவளை நீரிலே குதித்துத் தப்பியது. வானத்திலே வட்டமிட்ட பருந்து ஒன்று பாம்பினைக் குறிவைத்தது. வேகமாகக் தரையிறங்கத் தயாரானது. எனினும் பாம்பு புற்றினுள் புகுந்து தப்பித்தது. அக்காட்சிகளைக் கண்ட கங்காரு மிகவும் பயத்தோடு தன் தாயைத் தேடி விரைந்து வந்தது. தாயின் மடியில் ஏறி அமர்ந்து கொண்டது. “இந்த உலகைவிட உனது மடிதான் அம்மா பாதுகாப்பு” என்று கூறியது.

**சு.திவ்வியன்**
*தரம்-08*
*யா/ஹாட்லிக் கல்லூரி*

# நுளம்புகளுக்கு நிறம் பிரிக்கத் தெரியுமா?



மனித வாடையை முகர்ந்துவிட்டால், நுளம்புகள் அருகே வந்து கடிக்கத் தோதான இடம் பார்க்கும். இது அறிவியல்பூர்வமான உண்மை. மனித மூச்சில் உள்ள காபனீரொட்சைட் வாடைதான் நுளம்புகளுக்கு அழைப்பிதழ். ஆனால், தற்போது வாஷிங்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கூடுதல் தகவலையும் கண்டறிந்துள்ளனர்.

அதாவது, மனித மூச்சிலுள்ள காபனீரொட்சைட்டின் வாடையை கண்டுகொண்ட பிறகு, அவை சுற்றிலும் நோட்டம் பார்க்கின்றன. அப்போது சிவப்பு அல்லது ஒரேஞ்சு நிறத்தில் ஏதாவது தட்டுப்படுகிறதா என்பதைத் தேடுகின்றன. அப்படித் தட்டுப்பட்டதும், அதை நெருங்கி தங்கள் இரத்தப் பசியைத் தீர்க்க முயல்கின்றன. ஆய்வகங்களில் பல நிறங்களில் பொருட்களை வைத்தபோதும், நுளம்புகள் இந்த இரு நிறமுள்ள பொருட்களையே நாடுவதை ஆய்வாளர்கள் கவனித்தனர்.

இது ஏன் என்று ஆராய்ந்தபோது, மனிதர்கள் எந்த நிறத் தோலை உடையவர்களாக இருந்தாலும், அவர்களது தோலிலிருந்து சிவப்பு அல்லது ஒரேஞ்சு நிற ஒளி அலைகள் பிரதிபலிக்கின்றன. முதலில் காபனீரொட்சைட் வாடை அந்த இடத்திலிருந்து வரவேண்டும். அடுத்து அந்த இடம் சிவப்பு அல்லது ஒரேஞ்சு வண்ணத்தில் இருக்க வேண்டும். அப்படி இருந்தால், நுளம்புகளுக்கு சாப்பாட்டு மணி அடிக்கப்படுவதாகவே பொருள்.

மற்றப் பூச்சிகளுக்கு இதேபோல நிறப் பாகுபாடு பற்றிய அறிவு உண்டா என, விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

# இயற்கை



வியத்தகு பொக்கிஷங்கள் நிறைந்த
மகா அதிசயமே! இயற்கை அன்னையே!
உன்னால் எமக்குக் கிடைப்பன நன்மையே!
நாமே பதிலுக்குச் செய்வன
முடிவிலித் தீமையே!
மரங்களாய், நதிகளாய், மலைகளாய்
காற்றாய், உயிர்களாய் விரிகின்றாய்
வையகமெங்கும் வளங்களாய் குவிந்து
தாயென மனிதர் பார்வைக்குத் தெரிகிறாய்
உன்னை எமக்காய் அர்ப்பணித்தாய்
ஆனால் நாமோ
உன்னை எப்படி அழிப்பதென்றே
பார்க்கின்றோம்!

**க.கவிந்தியா**
*தரம்-10*
*யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை*

# ‘செல்பி’யால் உடல்நலத்தை அளக்கும் செயலி!



வெறும் 30 வினாடிகளுக்கு ‘வீடியோ செல்பி’ எடுத்துக் கொடுத்தால் போதும். ஒரு செயலி, அதை அலசி, பொதுவான உடல்நலன் குறித்த 30 விதமான காரணிகளை அளந்து சொல்லிவிடும்.

ஆச்சரியமாக இருக்கிறதா? ஆனால், கனடாவின் டொரோன்டோவிலுள்ள நியூராலாஜிக்ஸ், ‘அனுரா’ என்ற செயலி மூலம் இதைச் சாதித்துள்ளது. இந்த செயலி மொபைல் மற்றும் கணினி ஆகிய இரண்டிலும் செயற்படும். இதைப் பயன்படுத்தி ஒருவர் அரை நிமிடம் செல்பி எடுத்தால், அதை மருத்துவ ரீதியில் செயற்கை நுண்ணறிவு மென்பொருள் ஒன்று அலசி ஆராயும்.

செல்பியில் தெரியும் நபரின் ரத்த அழுத்தம், மூச்சு விடும் வேகம், மனச்சுமை, செரிமானத் திறன் என்று உடல்நலத்துக்கு அடிப்படையான பல காரணிகளை இந்த செயலி அலசி, முடிவை அரை நிமிடத்தில் சொல்லிவிடுகிறது. மனித தோலில் பிரதிபலிக்கும் ஒளி, அவரது இரத்த ஓட்டத்தையும் தெளிவாகக் காட்டும்.

இதுதான் செல்பி வீடியோவில் செயற்கை நுண்ணறிவுக்குக் கிடைக்கிறது. இந்தத் தகவல்களை வைத்தே, அது ஒரு மருத்துவருக்கு இணையாக நோயறிதல் பணியை நொடிகளில் முடித்துத் தருகிறது.

அனுரா செயலியை ஒரு தேர்ந்த மருத்துவரின் ஆலோசனைக்கு மாற்றாகப் பயன்படுத்தக் கூடாது என, இதன் தயாரிப்பாளர்கள் எச்சரிக்கின்றனர். தினமும் தன் உடல்நலனைக் கண்காணிக்க வேண்டும் என்று நினைப்போருக்கு, அனுரா செயலி ஒரு உதவியாளர் அவ்வளவுதான் என, இதன் வடிவமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.





சிறுவர் பகுதிக்கான
உங்கள் சொந்த ஆக்கங்களை
எங்களுக்கு உடனே
அனுப்பி வையுங்கள்

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 19.02.2022 அன்று வெளியிடப்பட்டது.